# செம்மண்

நிலம் 2 துகள் 98 வள்ளுவர் ஆண்டு 2052, 04 -10 ஆனி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-


# எஞ்சிய கொரோனா நிதியில் மருந்துகள் வாங்கத் தீர்மானம்

### அரச தலைவர் பணிப்பின் கீழ் திருப்பப்படுகிறது

கொரோன பெருந்தொற்றுக் காலத்தில் அரச தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்கத் திரட்டப்பட்ட கொரோன பேரிடர் உதவி மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியில் இதுவரை செலவிடப் படாமல் எஞ்சியிருந்த 1.8 பில்லியன் ரூபாய் களை உடனடியாக அவசிய மருந்துப் பொருள் களை வாங்குவதற்குப் பயன்படுத்துமாறு அரச தலைவர் கோத்தாபய பணித்துள்ளார்.

அரச தலைவர் செயலகம் வெள்ளிக்கிழமை இந்தத் தகவலைத் தெரிவித்தது. இலங்கையில் தற்போது உயிர் காப்பு மருந்து மற்றும் அத்தி யாவசிய தேவை மருந்துகள் உட்பட மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவு கின்றது. வைத்தியசாலைகள் மருந்துகள் இன்றி தனியாரிடமிருந்து மருந்துகளை அன்பளிப்பாகப் பெற்று வருகின்றன.

நாட்டில் டொலர் கையிருப்பு இல்லாத நிலை யில், மருந்துப் பொருட்களை வெளிநாடுகளிலல் இருந்து இறக்குமதி செய்ய முடியாமல் திண்டாடி வருகின்றது அரசு. இந்த நெருக்கடி நிலையைச் சமாளிக்க கொரோனா நிதியைப் பயன்படுத்து வதற்கு அரச தலைவர் இப்போது முடிவு செய்தி ருக்கிறார்.

கொரோனா பெருந்

பக்கம் 02



# ஓட்டோக்களுக்கு தடையற்ற பெற்றோல் கிடைக்க திட்டம்

### வகுக்கப்படுவதாக ரணில் தெரிவிப்பு

முச்சக்கரவண்டிகளுக்கு (ஓட்டோ) தடை யின்றி எரிபொருள் (பெற்றோல்) கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் தனது ஆட்சி திட் டங்களை வகுத்து வருவதாக தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் கிட்டத்தட்ட 10 லட்சம் முச்சக் கரவண்டிகள் இருக்கின்றன. இவற்றின் மூலம் 10 லட்சம் குடும்பங்கள் வருமானத்தைப் பெற்று வருகின்றன என்று உத்தியோகபூர்வ தகவல்கள் கூறுகின்றன. ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் முச்சக்கரவண்டிச் சாரதிகள். அவர்களின் வரு மானம் பாதியைவிடவும் குறைந்துவிட்டதுடன், பலர் தொழிலைவிட்டு வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே முச்சக்கர வண்டி உரி மையாளர்களின் பிரதிநிதிகளுடன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வியாழக்கிழமை பேசினார் என்று அவரது அலுவலகச் செய்திக் குறிப்பு தெரிவித்தது. இந்தச் சந்திப்பில் முச்சக் கரவண்டிகள் ஒழுங்குபடுத்தல் சபை ஒன்றை அமைப்பதற்கும் தலைமை அமைச்சர் அப் போது இணங்கிக்

பக்கம் 02

# தொலைத்தொடர்பு கட்டணம் இன்று முதல் அதிகரிப்பு

தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் இணைய சேவைகளுக் கான கட்டணங்கள் இன்று சனிக்கிழமை முதல் அதிகரிக் கப்படுகின்றன என்று தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

புதிய தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க பதவி யேற்றுக்கொண்டதை அடுத்து வரிகளை அதிகரித்தார். அதன் படி தொலைத்தொடர்பு வரி 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. இதற்கு இந்த வாரத் தொடக்கத் தில் அமைச்சரவை அனுமதியும் வழங்கி

பக்கம் 02

# மல்வான சொகுசு வீடு வழக்கில் பஸில் ராஜபக்ச நேற்று விடுவிப்பு

உரிமையாளர் யார் எனத் தெரியாத மல்வானை, தொம்பே காணி மற்றும் சொகுசு வீடு தொடர்பான வழக்கில் இருந்து முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் ராஜ பக்ச குடும்பத்தைச் சேர்ந்தவ ரான வர்த்தகர் திருக்குமார் நடேசன் ஆகியோர் விடு விக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக இந்தக் காணியை வாங்குவதற்கும் அதில் சொகுசு மாளிகை அமைப்ப தற்கும் அரச நிதி முறைகேடா கப் பயன்படுத்தப்பட்டது என்றும் அமைச்சர் பஸில் ராஜபக்சவே அதற்குப் பொறுப் பானவர் என்றும் குற்றஞ்சாட் டப்பட்டு அவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய் யப்பட்டிருந்தது. நல்லாட்சி அரசின் காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் கடந்த பங்குனி மாதம் வேறு சாட்சிகளோ ஆவணங்களோ இல்லை என்று சட்டமா அதி பர் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்தது.

இந்த வழக்கைத் தொடர்வ தற்குக் காரணமாக இருந்த முதலாவது சாட்சி அமைச்சர் பஸிலுக்கு

பக்கம் 02

# 15 வயது சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் சிப்பாய் ஒருவர் கைது

15 வயதேயான சிறுமியை பாடாசலையில் வைத்து பாலி யல் துன்புறுத்தலுக்கு உள்ளாக் கினார் என்கிற குற்றச்சாட்டில் தரைப் படைச் சிப்பாய் ஒருவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள திரப்பன என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றி ருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர். கைது செய்யப் பட்ட சந்தேகநபர் 24 வயதான வர்.

அந்தப் பகுதியில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் வைத்தே சிறுமியை சந்தேகநபர் பாலியல் துன்புறுத்

பக்கம் 02



# சிலிண்டரோடு மக்கள் வீதியில் போராட்டம்

கொழும்பு சிலேவ் ஐலன்ட் பகுதி யில் நேற்று மக்கள் எரிவாயு கொள்கலன்களை வைத்து வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். போதியளவு எரிவாயு விநியோகத்தை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர். தமது பகுதிக்கு சமையல் வாயு கிடைக்கவேயில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# உணவு தட்டுப்பாடு இன்னும் ஐந்தாறு மாதங்கள் நீடிக்கும்

விவசாயத்துறையை உடனடியாகச் சீரமைத்து வழமைக்குக் கொண்டு வந் தால் இன்னும் 5 அல்லது 6 மாதங் களில் நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கைக்கான நிரந்தர வதி விடப் பிரதிநிதியுடனும் உணவு மற் றும் விவசாய அமைப்பின் பிரதிநிதி களுடனும் வெள்ளிக்கிழமை நடத் திய சந்திப்பின்போது தலைமை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உணவுத் தட்டுப்பாடு பெருமளவில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறித்து அவர் இந்தச் சந்திப்பில் விளக்கினார். இதனை எதிர்கொள்வதற்கு உணவுப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று விவசாயத் துறை அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட் டத்தின் ஆதரவுடன் இந்த உணவுப் பாதுகாப்புத் திட்டம் அடுத்த மாதம் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

விவசாயத்துறை தற்போது எதிர் கொள்ளும் மிகப் பெரிய பிரச்சினை உரத் தட்டுப்

பக்கம் 02

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# புதிய அரசமைப்பு ஊடான தீர்வு என்பது கானல் நீர்

புதிய அரசமைப்பின் மூலம் தமிழ் மக்களின் நீண்ட கால தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும், அதுவும் நாடு வீழ்ச்சியடைந்துள்ள இந்த நிலையில் தமிழர்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கிய தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்று தமிழர் தரப்பிலிருந்து மீண்டுமொருமுறை குரல் எழும்பியிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் இந்தக் கோரிக்கையை நேற்று வலியுறுத்தியிருந்தார். தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களைச் சந்தித்து மும்மொழிகளிலும் அவர் இதனை வலியுறுத்தியிருந்தார்.

இது ஒன்றும் கூட்டமைப்பின் புதிய கோரிக்கையல்ல. போர் முடிந்த கையோடிருந்து இத்தகைய கோரிக்கையைக் கூட்டமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக மைத்திரி - ரணில் கூட்டாட்சியின்போது இந்த விடயத்தை வலியுறுத்தியது மட்டுமல்லாமல் அதன் மீது நம்பிக்கையும் வைத்து தீவிரமாகச் செயலாற்றியுமிருந்தது. முக்கியமாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே இது விடயத்தில் அப்போதும் மிகத் தீவிரமாக உழைத்திருந்தார். ஆனால், வழக்கம் போலவே காலத்தை இழுத்தடித்த சிங்கள அரசியல்வாதிகள் கடைசியில் எந்தவொரு தீர்வையும் முன்வைக்காமலேயே நழுவிக்கொண்டனர். கூட்டமைப்பின் தயவிலேயே ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொண்ட நிலையிலும்கூட மைத்திரி – ரணில் தலைமையிலான ஆட்சிகன கச்சிதமாகத் தமிழர்களை ஏமாற்றிச் சென்றது.

சிங்கள பௌத்த பேரினவாதப் பொறிமுறை மிகத் திறம்படச் செயற்பட்டு இந்த விடயத்தைக் கையாண்டது. 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவில் அங்கம் வகித்த அனைத்துப் பிரதிநிதிகளும் முதலில் அனைத்துச் சீர் திருத்தங்களுக்கும் ஆதரவானவர்கள் போன்று நடந்துகொண்டார்கள். பின்னர் இறுதிக் கட்டம் நெருங்க நெருங்க ஒவ்வொருவராகப் பின்வாங்கத் தொடங்கினார்கள்.

முன்மாதிரியானவை என்று கருதப்பட்ட அனைத்து மாற்றங்களையும் சிறுகச் சிறுக அரித்து எந்தவொரு முன்னேற்றகரமான அதிகாரப் பகிர்வும் தமிழர்களுக்குக் கிடைத்துவிடாதபடி அவர்கள் கவனமாக இருந்தார்கள். தமிழர் தரப்பினர் ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு முன்னுரிமை போன்ற பல விடயங்களில் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிடிவாதத்துக்கு விட்டுக்கொடுத்தபோதும் நியாயமான அரசியல் தீர்வு ஒன்றுக்கான அரசமைப்புச் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு சிங்கள பௌத்த பேரினவாதம் தயாராக இருக்கவில்லை.

தற்போது மீண்டும் அதே பல்லவியைத் தூக்கிக்கொண்டு ரணில் தலைமையிலான ஆட்சி களமிறங்கியிருக்கிறது. இந்த ஆட்சியின் ஆயுட் காலமே நிரந்தரமில்லாதது; எப்போது கவிழும் என்று தெரியாதது. இந்த நிலையில் இந்த ஆட்சியால் முன்னெடுக்கப்படக்கூடிய புதிய அரசமைப்பு முயற்சி என்பது வெற்றியளிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் நிச்சயம் கேள்விக்குரியதே.

கடந்த காலங்களில் சிங்கள ஆட்சியாளர்கள் செயற்பட்ட விதம் குறித்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியான சூழலைப் பயன்படுத்திக்கொண்டு, ஒரு முழுமையான மாற்றத்தை சிங்கள மக்கள் கோருகின்றார்கள் என்கிற சூழலைச் சாதகமானதாக்கிக்கொண்டு புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழர்களின் பிரச்சினைக்கும் ஓர் தீர்வு எட்டப்படவேண்டும் என்று கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.

ஆனால், காலி முகத் திடல் போராட்டக்காரர்கள் போன்ற மிகச் சொற்பமான தொகையினரிடம் ஏற்படக்கூடிய மாற்றம் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியிலும் ஏற்பட்டு அரசியல் தீர்வு ஒன்றைச் சாத்தியப்படுத்தும் என்று எதிர்பார்ப்பது முறையானது அல்ல. வரலாறு முழுவதும் தமிழர்களை ஏமாற்றியே பழக்கப்பட்டுவிட்ட சிங்கள அரசியல்வாதிகள் இப்போது திருந்திவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் தமது இக்கட்டு, நெருக்கடி நிலையில் இருந்து மீண்டு வருவதற்குத் தமிழர்களையும் பயன்படுத்திக் கொண்டு விட்டுப் பின்னர் தூக்கி எறிந்துவிடவும் பின்நிற்காதவர்கள். அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் காட்டிவரும் செயற்பாட்டுப் போக்கே அவர்கள் மாறவில்லை என்பதைக் கட்டியம் கூறுவதற்குப் போதுமானது. அப்படியிருக்கையில் அவர்கள் மூலமாக ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு அதற்கூடாக தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது வெறும் கானல் நீரே!

## எஞ்சிய...

தொற்று அபாயம் காரணமாக 2020ஆம் ஆண்டில் இருகம நிதியத்தை அரச தலைவர் தொடங்கினார். 2021 மார்கழி மாதம் இந்த நிதியத்தில் 1.8 பில்லியன் ரூபா பணம் இருந்தது. 197.5 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டிருந்தது.

அரச தலைவருக்கும் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கும் இடையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பில் கொரோன நிதியை அவசர மருந்துக் கொள்வனவுக்குப் பயன்படுத்தும்படி அறிவுறுத்தல் விடுத்தார் அரச தலைவர்.

## மல்வான...

எதிராக நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு எதனையும் செய்திருக்கவில்லை என்றும், அவர் வழங்கினார் என்று கூறப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துத் தொடர்பில் சிக்கல் நிலவு கின்றது என்றும் சட்ட மா அதிபர் திணைக் களம் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது.

இதையடுத்து தமது தரப்பினரை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று பசில் மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோரின் சட்டவாளர்கள் நீதிமன்றத்திடம் விண்ணப்பித்திருந்தனர். வெள்ளிக்கிழமை இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது கம்பகா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதிகள் அவர்கள் இருவரையும் விடுவித்துத் தீர்ப்பளித்தனர்.

இந்த வழக்கில் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளதாக தீர்ப்புக்குப் பின்னர் அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பசில் ராஜபக்ச கூறினார்.

இதற்கிடையில், வைகாசி மாதம் 9ஆம் நாள் இடம்பெற்ற வன்முறைகளின்போது இந்த மல்வான வீடும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. ஆத்திரம் கொண்ட மக்கள் கூட்டத்தால் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டதாகக் காவல்துறையினர் தெரிவித்தாலும் மக்கள் அங்கு செல்வதற்கு முன்பாகவே காவல்துறையினர் அங்கிருந்தனர் என்றும் அவர்களே அதற்குத் தீ மூட்டினர் என்றும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டும் வருகின்றன.

## தொலைத்தொடர்பு ...

யிருந்தது.

அதிகரிக்கப்பட்ட வரி விகிதம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் மற்றும் இணையப் பாவனைக்கான கட்டணங்கள் அதிகரிக்கும்.

நிரந்தர இணைப்பைக் கொண்டிருப்பவர்களுக்கான அதிகரித்த கட்டணங்கள் இந்த மாத விலைப்பட்டியலில் சேர்க்கப்படும். முன்கூட்டியே கட்டணம் செலுத்தி இணைப்புக்களைப் பயன்படுத்துவோருக்கு அதே கட்டணத்திற்கான இணையப் பயன்பாட்டு அளவு மற்றும் அழைப்புக்களுக்கான நேரம் என்பன குறைக்கப்படும்.

தொலைத்தொடர்புகள் வரி அதிகரிப்பால் மட்டுமன்றி பொருட்கள் சேவைகள் வரியையும் அரசு உயர்த்தி இருப்பதன் காரணத்தால் கட்டணங்களின் அதிகரிப்பில் அதன் தாக்கமும் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## 15 வயது...

தலுக்கு உள்ளாக்கி வந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சிப்பாயால் தான் பல தடவைகள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினார் என்று சிறுமி தனது தாயிடம் தெரிவித்ததை அடுத்து காவல்துறையிடம் முறையிடப்பட்டது.

பூர்வாங்க விசாரணைகளைத் தொடங்கிய காவல்துறையினர் சிப்பாயைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாடசாலை முடிந்த பின்னர் சிப்பாய் அந்தச் சிறுமியை பாடசாலையில் ஆசிரியரின் அறைக்குள் வைத்துத் துன்புறுத்தி வந்துள்ளார் என்று தமது விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

## உணவு...

பாடு மற்றும் எரிபொருளின்மை ஆகியன தான் என்று நேற்றைய சந்திப்பின்போது ரணில் விளக்கினார்.

உணவுப் பற்றாக்குறையைத் தவிர்க்கும் நோக்கத்தோடு தான் முன்மொழிந்திருக்கும் நகர்ப்புற விவசாயத்தை விரிவாக்கும் திட்டம் பற்றியும் தலைமை அமைச்சர் விளக்கினார்.

இந்த நகர்ப்புற விவசாயத் திட்டத்திற்கு உதவ நன்கொடையாளர்கள் முன்வந்துள்ளனர் என்று உணவு மற்றும் விவசாய அமைப்புப் பிரதிநிதி அப்போது தெரிவித்தார். இலங்கையில் உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான புதிய திட்டத்தை தமது அமைப்புத் தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, விவசாயிகளை உரத் தட்டுப்பாட்டின் பாதிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்கான புதுமையான திட்டத்தைத் தயாரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட பிரதிநிதி இந்தச் சந்திப்பின்போது தெரிவித்தார்.

## ஓட்டோக்களுக்கு...

கொண்டார் என்றும் அந்தக் குறிப்புத் தெரிவித்தது.

நாடு எதிர்நோக்கவுள்ள பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியில் முச்சக்கரவண்டி தொழிற்துறை எதிர்நோக்கும் சவால்களுக்கு எப்படித் தீர்வு காண்பது என்பது தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளையும் தலைமை அமைச்சர் சந்தித்துப் பேசியுள்ளார். எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பாதுகாப்பு மற்றும் தடையற்ற எரிபொருள் விநியோகம் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வைகாசி 21ஆம் நாள் அனுராதபுரத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பாதுகாப்புத் தொடர்பில் அதிக கரிசனை ஏற்பட்டுள்ளமையே இந்தச் சந்திப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

# ரணிலை மலையாக நம்பிய தமிழ்த் தலைவர்கள்

நியூட்டன்

தமது போராட்ட காலத்தில் புலிகள் கொன்ற சிங்களத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்கள். ஐ.தே.க. ஒருபோதும் தமது போராட்டத்துக்கு ஆதரவாக நடந்துகொள்ளப்போவதில்லை என்பதைப் பிரபாகரன் திடமாக நம்பினார். அப்போதைய அரச தலைவர் ரணசிங்க பிரேமதாச, பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, காமினி திசாநாயக்க, லலித் அத்துலத் முதலி, ஜானக பெரேரா, ஜீ.எம். பிரேமச்சந்திர ஆகிய முன்னனித் தலைவர்களின் படுகொலைகளைப் புலிகள் நிகழ்த்தினர் என்றே சொல்லப்படுகிறது.

தமது கட்சியைக் குறிவைத்து அழித்த புலிகளை ஒழிந்திருக்கும் கெரில்லாக்களாக இருக்கும்வரை அழிக்கமுடியாது என்பதை நன்குணர்ந்த ரணில் விக்கிரமசிங்க 2001ஆம் ஆண்டின் பின் சமாதான முன்னெடுப்பு என்ற பெயரில் நோர்வே அரசின் அனுசரனையுடன் புலிகளைப் பகிரங்க அரசியலுக்குக் கொண்டுவந்தார். ராஜதந்திர கடவுச்சீட்டுக்களை வழங்கி (பல போராளிகளிடம் பிறப்புச் சான்றிதழ்களோ, தேசிய அடையாள அட்டைகளோ இருக்கவில்லை) புலிகளைப் போராடும் பகுதியைவிட்டு வெளியே கொண்டு சென்று ஐரோப்பா வரை பயணம் செய்ய வைத்து அவர்களின் மனநிலையில் மாற்றங்களைக் கொண்டு வரவைத்தார்.

2004ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்த கருணாவைப் புலிகள் அமைப்பிலிருந்து பிடுங்கி எடுத்தார் ரணில். அதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் புலிகள் காலூன்ற முடியாத நிலை ஏற்பட்டது. 2006ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து கை நழுவியது. 2004இல் புலிகளைப் பழிவாங்கிய ரணிலை 2005 அரச தலைவர் தேர்தலில் புலிகள் பழிவாங்கினர். புலிகளின் சொற்கேட்டு வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்காது விட்டனர். 2004இல் கருணாவைப் பிரித்து எடுத்த தற்காக ரணிலைக் கொல்வதற்கான திட்டம் புலிகளிடம் இருந்தது என்றும் சொல்லப்படுவதுண்டு. ஆனால் ரணிலைக் கொல்வதற் கான களநிலவரம் புலிகளுக்குச் சாதகமாக இருக்கவில்லை.

மாவிலாற்றில் தொடங்கிய இறுதிப்போர் (2006) 2009 வைகாசி மாதம் 18ஆம் திகதியன்று புலிகள் இயக்கம் அழிக்கப்படும் வரை நீடித்ததால் இடையில் ஓரிடத்திலும் ரணில் கொல்லப்படும் வாய்ப்பு இல்லாமலே போனது. புலிகள் தொடர்ச்சியாக எதிர்த்துவந்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 2009இல் போர் முடிந்ததும் தமது உறவுகளைப் பலப்படுத்தினர். 2010இல் நடந்த அரச தலைவருக்கான தேர்தலில் மகிந்தவைத் தோற்கடித்தல் என்ற பெயரில் போரை முன்னின்று நடத்திய படைத் தளபதி சரத்பொன்சேகாவை ரணிலுடன் சேர்ந்து அரச தலைவராக்கும் முயற்சியில் இறங்கினர். முஸ்லிம் கட்சிகளும் இதில் தீவிரம் காட்டின. ஆனாலும் சரத்பொன்சேகாவை வெற்றிபெற வைக்க முடியவில்லை.


2010இல் இழந்துபோன வாய்ப்பை 2015 அரச தலைவர் தேர்தலிலும் ரணிலுடன் சேர்ந்து கூட்டமைப்பினர் முன்னெடுத்தனர். பொது வேட்பாளரான மைத்திரி பால சிறிசேனவை அரச தலைவராக்கினர் (மைத்திரிபாலவைக் கொல்வதற்கான குண்டுத் தாக்குதல் ஒன்றைப் புலிகள் மேற்கொண்டு அவர் உயிர் தப்பியிருந்தார்). 2015இல் உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசில் தமிழ்த் தலைவர்கள் அமைச்சரல்லாத அமைச்சர்களாகச் செயற்பட்டனர். இவர்களில் சிலர் பணம் உழைக்கவும் சிறப்பு அதிரடிப்படைப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளவும் சொத்துக்களை அதிகரிக்கவும் ரணில் வழிவகுத்துக் கொடுத்தார் என்கிற குற்றச்சாட்டும உண்டு. "ரணிலும் நாங்களும் ஒன்று" என்று பல தடவைகள் தமிழ்த் தலைவர்கள் கூறினர். நல்லாட்சி அரசு என்பது தம்மால் உருவாக்கப்பட்ட அரசு என்று பெருமைப்பட்டுக்கொண்டார்கள். அதனால் அவர் மீது அதிக நம்பிக்கை வைத்து தீபாவளிக்குள் தீர்வு வந்துவிடும் என்றெல்லாம் அறிக்கைவிட்டார்கள். ஆனால் ரணில் அவர்களைத் தனது தந்திரத்தின் மூலமாக ஏமாற்றினார். பழியை மற்றவர்கள் மீது தூக்கிப்போட்டுக்கொண்டே தீர்வு விடயத்தில் தமிழ்த் தலைவர்களைக் காலில் போட்டு மித்தித்தார்.

**ரணிலின் தற்போதைய செயற்பாடு**

அதே ரணில்தான் இப்போதும் இனப்பிரச்சினை உள்ளிட்ட நாட்டின் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கான வாய்ப்பை வீணடித்து, வீழ்த்தப்படவிருந்த கோத்தாபய அரசைத் தாங்கிப் பிடித்துள்ள தலைவராகியுள்ளார். கோத்தாபயவை வீட்டுக்கு அனுப்பியே தீருவோம் என்று அடித்தும் இடித்தும் ஆணித்தரமாகவும் கதைவிட்டனர் தமிழ்த் தலைவர்கள். தாம் மலைபோல் நம்பியிருந்த ரணில் கோத்தாவுக்குப் பக்க பலமாகத் திடீரென குத்துக்கரணம் அடிப்பார் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அதனால் இப்போது ரணிலுக்கு எதிராகக் குய்யோ முறையோ என்று கத்துகிறார்கள். தமிழ் மக்கள் மத்தியில் இந்தத் தலைவர்கள் அவமானப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ரணிலைச் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் மிக மோசமாக விமர்சிக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ரணில் சிங்கள மக்களைக் காப்பாற்றுவதற்காகவே கருணாவைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரித்து அந்த அமைப்பை அழித்துச் சிங்கள மக்களுக்கும் பௌத்த மதத்துக்கும் இருந்த அச்சுறுத் தலை இல்லாது செய்தார்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் அதிகம் அழுத்தம் கொடுக்க முடியாத வகையில் தனிப்பட்ட முறையில் ரணிலிடம் பல உதவிகளைப் பெற்றார்கள். இதனால் தமிழருக்கான தீர்வு பிசுபிசுத்துப்போனது. சந்திரிகா அரச தலைவராக இருந்த காலத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வைக் கொண்டு வந்தபோது அந்த நகலை நாடாளுமன்றில் வைத்துக் கொளுத்தியவர்கள் ரணில் தலைமையிலான பின்வரிசை ஐ.தே.கவினரே. அவ்வாறான ஒருவர் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத் தரமாட்டார் என்று சாதாரண தமிழ் மக்கள் விளங்கிக்கொண்ட அளவுக்குக் கூட்டமைப்பினர் விளங்கிக்கொள்ளாமல் ரணிலை மலையாக நம்பியது வேடிக்கையானது.

அண்மையில்கூட ஆங்கில ஊடகம் ஒன்றுக்குச் செவ்வியளித்த ரணில், "2005இல் அரச தலைவராக வரவிருந்த என்னைப் புலிகளே தடுத்தார்கள்" என்றிருந்தார். அவருக்குத் தமிழர் மீதான ஐயுறவு



## ரணிலை ...

எப்போதுமே இருந்து வருகிறது. அதுதான் மகாவம்சத்தின் சிந்தனையும்கூட. சிங்களத் தலைவர்கள் தமிழர் விடயத்திலும் முஸ்லிம்கள் விடயத்திலும் மிகத் தெளிவாகவே இருக்கின்றனர்.

**ஆட்சி மாற்றத்தை விரும்பிய தமிழ்த் தலைவர்கள்**

கோத்தா கோ ஹோம் போராட்டம் தொடங்கப்பட்டபோது தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அதை ஆதரித்தனர். சிறுபான்மை இனங்களான தம்மால் முடியாதுபோன ஒன்றைச் சிங்கள மக்கள் தொடங்கியது தமிழர்களுக்கு மிக மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் வடக்குக் கிழக்குத் தமிழ் இளைஞர்களைக் காலிமுகத்திடலுக்கு அழைத்துச்செல்லச் சுமந்திரனும், சாணக்கியனும் முயற்சிகளை எடுத்தபோதிலும் அது சாத்தியப்படவில்லை. இது இவ்விருவருக்கும் உள்ள மக்கள் ஆதரவையே காட்டியது. அதேவேளை சிறீதரன் ஒருபடி மேலே சென்று காலி முகத்திடலில் போராடுபவர்கள் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் என்பதை அறிவித்தால் மறுநாளே 2 ஆயிரம் இளைஞர்களுடன் நான் அங்கு நிற்பேன் - எனச் சவால் விட்டார்.

தமிழ்த் தலைவர்கள் மலையாக நம்பிய ரணிலே கோத்தாபய வீடு செல்லவேண்டும் என்ற அவர்களின் விருப்பத்துக்கு மாறாகக் கோத்தாபய வீடு செல்லக்கூடாது என்று தடுத்திருக்கிறார். தற்போதைய அரசியல் சூழலை மாற்றுவதற்குத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதே சரியான வழி எனச் சுமந்திரன் கூறினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் 2024 வரை எந்தத் தேர்தலும் இல்லை - என்றிருக்கிறார் ரணில். ரணில் எப்போதும் தமக்குச் சார்பாக இருப்பார் என நினைத்த தமிழ் தலைவர்களுக்கு நேர் எதிராக ரணில் களமிறங்கியிருப்பது சிங்கள மக்களுக்கான உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவே. அவர் ஒருபோதும் தமிழருக்குச் சார்பாக இருந்தவர் அல்லர்.

தமிழ்த் தலைவர்கள் அதிகம் கதைக்க முற்பட்டால் நல்லாட்சிக் காலத்தில் அவர்களுக்குத் தான் வழங்கிய பட்டியலை வெறும் கையுடன் நின்றவாறே தனது ஞாபக சக்தியை வைத்து அறிவிப்பதன் மூலம் தமிழ்த் தலைவர்களைப் பெட்டிப்பாம்பாக முடக்கும் வல்லமை ரணிலுக்கு உண்டு.

# மக்கள் பணம் கொடுத்துத்தான் பொருள்களை வாங்குகிறார்கள்

**நிலவழகி**



எரிவாயு, எரிபொருள்கள், பால்மா வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கு டொலர் கையிருப்பில் இல்லை, ஏற்றுமதி வருமானம் இல்லை, சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டிருக்கிறது எனப் பல்வேறு காரணங்களை நாளாந்தம் கூறி வருகிறது இலங்கை அரசு. அவற்றை இறக்குமதி செய்வதற்காகப் பல நாடுகளில் இருந்து கடன்பெறுகிறோம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிகள், பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றில் கடன்பெற முயற்சிக்கிறோம் என்றெல்லாம் காரணங்கள் கூறப்படுகின்றன. இத்தகைய கடன்களைப் பெற்று வாங்குகின்ற பொருள்களை மக்களுக்கு அரசு இலவசமாக வழங்குவதில்லை. எத்தகைய விலையுயர்வு ஏற்பட்டாலும் அவற்றுக்கான முழுமையான வரியையும் சேர்த்து மக்கள்தான் பணம் கொடுக்கின்றனர். இதனால் இந்தப் பொருள்களை இறக்குமதி செய்வதாலோ விற்பனை செய்வதாலோ அரசு நட்டமடைகிறது என்று ஒருபோதும் கூறமுடியாது.

அப்படியிருந்தும், இத்தகைய அதிகரித்த விலையிலும் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அதனாலேயே அரசை எதிர்த்து மக்கள் கொந்தளிக்கின்றனர். அவ்வாறு கொந்தளிப்பவர்களிடம் எவ்வளவு பணத்தைக் கொடுத்தாவது அந்தப் பொருள்களை வாங்கும் வல்லமை இருக்கிறது. பெருந்தொகையான ஏழைகள் இவர்களுடன் போட்டியிட்டுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்வரவில்லை. அவர்கள் வீதியில் இறங்கிப் போராடவும் இல்லை. அவ்வாறான மக்கள் ஒரு லீற்றர் மண்ணென்ணெய் வாங்குவதற்காகப் பல மணிநேரம் வரிசையில் நின்றாலும் "உனக்குப் பத்து லீற்றர் எண்ணெய் தருகிறோம்" என்றால் அதை வாங்க அவர்களிடம் பணம் இல்லை.

**கடவுளே கோத்தா வீட்டுக்குப் போகக் கூடாது**

நாட்டின் பொருளாதார நெருக்கடியான சூழல் நாட்டில் ஒரு தரப்பினருக்கு என்றுமில்லாத யோகத்தைக் கொடுத்திருக்கிறது. எந்தவித பெரு முதலீடும் இன்றி ஏற்கனவே வைத்திருக்கும் பொருள்களைப் பதுக்கி வைத்து எத்தனை மடக்கு லாபத்துக்கு அதை விற்கமுடியும் என்ற விலைச் சூத்திரத்தை இலங்கை அரசின் பொருளாதாரத் தடை நிலவிய காலத்திலிருந்து கடைப்பிடித்து அதைச் செய்தும் வருகிறார்கள் இவர்கள். இதன் பிதாமகனாக மகேஸ்வரனைக் குறிப்பிடலாம். யூ.பி. என்கிற அமைச்சரின் கையெழுத்துப்போல போலி ஒப்பமிட்டு மண்ணெண்ணெய் கடத்தினார் என்று அவரை யூ.பி என்றும் மண்ணெண்ணெய் மகேஸ்வரன் என்றும் பெயர் வைத்து மக்கள் அவரை அழைத்தார்கள். அவர் மண்ணென்ணெய் கடத்தி ஏழை மக்களுக்கு அதை இலவசமாகக் கொடுக்கவில்லை. சந்தை விலையைவிடப் பல மடங்கு அதிகமாக மக்களுக்கு விற்றார். இதேபோன்றதொரு நிலையே தற்போதும் காணப்படுகிறது.

பதுக்கி வைத்த பால்மாக்களைப் பழைய விலை பொறித்த பெட்டியை அகற்றிவிட்டு உள்ளே இருக்கும் பையைப் பத்திரிகைத் துண்டால் சுற்றி அல்லது கறுப்புப் பொலித்தீன் பையில் போட்டுத் தமது வாடிக்கையாளர்களுக்கு உதவுவதுபோல வர்த்தகர்கள் கறுப்புப் பணம் சம்பாதிப்பதை மிகச் சாதாரணமாகச் செய்கிறார்கள்..

**கட்டுப்பாட்டு விலை இல்லை**

தட்டுப்பாடான பொருள்களுக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்காமல் நீளக்கயிற்றில் விட்டால் அது பதுக்கல் வியாபாரிகளுக்கு மிகவும் சாதகமானது. கோத்தாபயவின் அரசை விரும்பாத வியாபாரிகள்கூட (தமிழ்த்தேசியவாதிகள் உட்பட) அரச தலைவரைப் பாராட்டவே செய்வர். அரசு இறுக்கமான நடைமுறைகளை இதுவிடயத்தில் பின்பற்றாமல் இருக்கும்வரை பொருள்களைப் பதுக்கி வைத்திருக்கும் வியாபாரிகளுக்கு யோகம்தான். அரசு மக்களை ஒடுக்குவதைவிட வியாபாரிகள் மக்களை ஒடுக்குவது அதிகமாக உள்ளது. திருநெல்வேலிப் பகுதியில் 12.5 நிறையுள்ள எரிவாயுச் சிலிண்டர் ஒன்றை 9 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர் என்று அறியக் கிடைத்தது. அதுவும், "வேணும் எண்டால் வாங்குங்கோ இல்லா விட்டால் இதை வாங்க ஆளிருக்கு..." என்ற பாணியில் விற்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக விலையுயர்வுச் சுமையை மக்களே தாங்கவேண்டியிருக்கிறது.

கொழும்பிலிருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வரும் ஊர்திகள் 1 லட்சம் ரூபா வரைப் போக்குவரத்துக்குப் பணம் அறவிடுவதால் அங்கிருந்து கொண்டுவரப்படும் பொருள்களுக்குப் போக்குவரத்துச் செலவையும் சேர்த்து விலை நிர்ணயிக்கப்படுகிறது. இத்தகைய விலையுயர்வுகள் பற்றி அரசோ, வியாபாரிகளோ தமது நியாய - வாதங்களைக் கதைப்பது என்பதற்கப்பால் மக்கள் பணம் கொடுத்தே அவற்றை வாங்குகின்றனர் என்பதை அவர்களில் எவரும் ஒருபோதும் உணர்வதாக இல்லை.

# மக்களாட்சியை விரிவுபடுத்தவேண்டும்

அன்ரனிராஜ்

மக்களாட்சி என்பது வெறும் வார்த்தை அல்ல ஆழ்ந்த அர்த்தங்கள் கொண்ட ஓர் வரையறை. அந்த வரையறையும் தன் செயல்பாட்டில் எல்லையற்று விரியும்போது நுணுக்க வரையறையாக மாறும் நிலையில்தான் அறிஞர்கள் மக்களாட்சியை முடிந்த முடிவாக வரையறை செய்வது கடினம் என்று கூறுகின்றனர். அந்த அளவுக்கு பரந்து விரிந்து செயல்பட்டுக் கொண்டுள்ளது மக்களாட்சி. ஆகையால்தான் அறிஞர்கள் இது வரையறைக்கு உட்படாத சொல் என்கின்றனர்.

பிரதிநிதித்துவ மக்களாட்சியை (ஜனநாயகம்) என்ற நிலையை போராடி அடைந்த பல நாடுகள், இதற்கான மேம்பட்ட விளக்கங்களை தந்து, மக்களாட்சிக்கு காப்புரிமை கேட்பதுபோல் தங்களை நாடாளுமன்றத்தின் தாய் எனவும் தந்தை எனவும், நாடாளுமன்றத்தை உலகத்துக்கு எடுத்துச் செல்லும் தூதுவர் என்றும் பிரகடனப்படுத்திக் கொண்டன. அது மட்டுமல்ல, உலகத்தில் மக்களாட்சிக்கு குறை ஏற்பட்டு விடாமல் பாதுகாப்பதுதான் தங்களுடைய தலையாய பணி என்று பிரகடனப்படுத்திக்கொண்ட நாடுகளும் உண்டு. இந்த நாடுகளெல்லாம் தங்கள் அயல்நாட்டுக் கொள்கையில் "மக்களாட்சி விரிவாக்கம்' என்பதை ஒரு முக்கியப் பகுதியாகவே வைத்து நிதி ஒதுக்கி மனித உரிமை செயல்பாட்டாளர்களை ஊக்குவித்தன.

அதேநேரத்தில், மக்களாட்சி உதாசீனப்படுத்தப் படுவதைத் தடுத்து பல நாடுகள் மக்களாட்சியில் சீர்திருத்தங்கள் செய்து செயல்படுவதையும் கடந்த காலங்களில் நாம் பார்த்திருக்கிறோம்.

உலகத்தில் மக்களாட்சிக்குக் கிடைத்தது போல், வேறு எந்த ஒரு ஆட்சிமுறைக்கும் இவ்வளவு மக்கள் ஆதரவு கிடைத்தது கிடையாது. காரணம், மக்களாட்சியை நன்கு புரிந்து கொண்டு மக்களாட்சி வேண்டும் என்று மக்கள் கேட்கவில்லை. ஒற்றைப் புள்ளியில் மக்களாட்சியை அவர்கள் ஆதரிக்கின்றனர். அதுதான் அந்த ஒரு விரல் புரட்சி. வாக்கின் மூலம் ஓர் ஆட்சியை அகற்றிவிடலாம் என்பது மட்டும் அனைவருக்கும் புரிந்திருக்கிறது.

மக்களாட்சி பற்றி கருத்துத் தெரிவித்த வின்ஸ்டன் சர்ச்சில், "இன்று நாம் கடைப்பிடித்து வருகின்ற மக்களாட்சி முறை என்பது இதுவரை இருந்த ஆட்சி முறைகளைவிட சிறந்ததுதான். ஆனாலும் இதனை குறையற்ற ஆட்சிமுறை என்று கூற முடியாது. இந்தக் குறைகளையெல்லாம் களையக்கூடிய ஒரு அமைப்பு வரும்வரை, அதாவது இன்றைய மக்களாட்சி முறையைவிட மேன்மையுடைய ஓர் அமைப்பு வருகின்ற வரை எவ்வளவு குறை இருந்தாலும் இதுதான் சிறப்புடையது" என்றார்.

மக்களாட்சியில் சீர்திருத்தம் பற்றி எழுதிய தலைசிறந்த ஆராய்ச்சியாளர் பெர்னாடு கிரிக், "மக்களாட்சியைக் கைக்கொள்ளும் நாடுகள், வேகமாக மாறிவரும் சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப மக்களாட்சியை சீர்திருத்திக் கொண்டே வந்தால், மக்களாட்சி மேன்மையடைவதோடு, அது சமூகத்தையும் மேன்மைப்படுத்தி விடும். அதற்கு மக்களாட்சியின் செயல்பாடுகளை தொடர்ந்து ஆய்வு செய்து அதன் அடிப்படையில் புதுமைகளை புகுத்தி மக்களாட்சி அமைப்பு முறைகளை செம்மைப்படுத்தவேண்டும். இந்த செயல்பாடு ஒரு தொடர் நிகழ்வு. இதற்கு அரசியல் தளத்தில் கடப்பாடும், அறிவாற்றலும் நிறைந்த தலைமைத்துவம் தேவை" என்றார்.

இவர்கள் மேற்கூறிய கருத்துக்களை முன்மொழிந்த காலம், இரண்டாவது உலகப்போர் முடிந்து பல காலனியாதிக்க நாடுகள் விடுதலை பெற்று மக்களாட்சியைக் கைக்கொண்டு செயல்படத் தொடங்கிய காலம். அந்தக் காலகட்டத்தில் அரசு என்பது பெரும் சக்தியாக விளங்கியது. அன்று மக்களும், வணிகர்களும் அரசின் ஆளுகையின் கீழ் இருந்தனர். அன்றைய அரசிற்கு அரசிசமைப்பு மட்டும் பின்புலத்தில் இருக்கவில்லை. அரசை நடத்தியவர்களின் ஆளுமையும் அரசைப் பலப்படுத்திக் கொண்டேயிருந்தது. அன்று அரசுதான் அனைத்தையும் தீர்மானிக்கும் உயர் சக்தியாக விளங்கியது. மக்களும் அரசின் மீது நம்பிக்கை வைத்திருந்தனர். இன்று அந்த நிலை உலகம் முழுதும் மாறிவிட்டது. அரசு, சந்தை, சமூகம் (மக்கள்) என்ற மூன்றும் ஒன்றோடு ஒன்று இணைந்தும், சில நேரம் முரண்பட்டும் செயல்பட்டு வருகின்றன.

**அடிப்படையில் அரசும் சந்தையும் மக்களுக்கானது என்பது, கடந்த 30 ஆண்டு காலத்தில் மிகப்பெரிய அளவில் மாற்றம் கண்டுவிட்டது. அரசு, தன் சக்தியை இழந்து சந்தையின் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்டது. சந்தை என்பது அரசை வழிநடத்தும் சக்தியாக தன்னை மாற்றிக்கொண்டுவிட்டது.**

அடிப்படையில் அரசும் சந்தையும் மக்களுக்கானது என்பது, கடந்த 30 ஆண்டு காலத்தில் மிகப்பெரிய அளவில் மாற்றம் கண்டுவிட்டது. அரசு, தன் சக்தியை இழந்து சந்தையின் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்டது. சந்தை என்பது அரசை வழிநடத்தும் சக்தியாக தன்னை மாற்றிக்கொண்டுவிட்டது. அதேபோல் சமூகத்தைச் சிந்திக்க விடாமல், தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களால் மக்களை ஒரு மயக்கத்தில் ஆழ்த்தி இயங்க வைத்து விட்டது இந்தச் சந்தை. இது எல்லாத் தரப்பு மக்களையும் கவர்ந்து வைத்துக் கொண்டுள்ளது.


பொருளாதாரம் வளர்ச்சி அடைகின்றபோது அந்த நாட்டில் உள்ள அரசு, அந்த பொருளாதார வளர்ச்சியை முறையாகப் பாதுகாத்து சமூக மேம்பாட்டுக்காக செயல்படவேண்டும். "அரசு மக்கள் மேல் எப்படி வரிவிதிப்பது என்பதை அறிந்து விதித்து, விதித்த வரியை முறையுடன் வசூல் செய்து, வசூலித்த வரியை முறையாகப் பாதுகாத்து, பாதுகாத்த நிதியை முறையாக தேவையின் அடிப்படையில் பங்கிட்டு செலவழித்து மக்களுக்கு மேம்பாடு கொண்டு வருவதுதான் முறையான அரசு" என்றார் திருவள்ளுவர் (குறள்: 385).

பொருளாதாரம் உலகம் வியக்கும் வண்ணம் வளர்ந்தபோது இலங்கையில் அந்த வளர்ச்சி முழுமையாக மக்களைச் சென்றடையாமல் ஒரு குறிப்பிட்ட வர்க்கம் பயன்களை அடைந்ததால் தான் மக்கள் இப்போது ஆட்சியாளர்கள் மீது கோபமாக இருக்கிறார்கள். தங்கள் கோபத்தை வன்முறையாக வெளிப்படுத்துகிறார்கள்.

இதனை, உலக வங்கியில் பணிபுரிந்த ஜோசப் ஸ்டிக்லிஸ் என்ற பொருளாதார வல்லுநர் சுட்டிக்காட்டி, "அரசு முயன்றால் உலகமய பொருளாதாரச் செயல்பாடுகளை ஏழைகளுக்கு நன்மை பயக்கும் வண்ணம் செய்ய முடியும்" என்று கூறியதோடு, தன் கருத்துகளை தொகுத்து புத்தகமாக வெளியிட்டார். அப்புத்தகம் லட்சக்கணக்கில் விற்றுத் தீர்ந்தது.

ஆனால் பல நாடுகளில் இதற்கு எதிர் திசையில் அரசுகள் பயணிக்கின்றன. நம் நாட்டில் அந்த நேரத்தில்தான் ஆளும் கட்சியாக இருந்த கட்சிகள் பெருமளவில் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கின. அது மட்டுமல்ல, அந்த நேரத்தில்தான்





# துர்நாற்றத்தை உடன் அறியும் மூளை

**கண்ணதாசன்**

மூளையில் துர்நாற்றம் எவ்வாறு உணரப்படுகிறது என்பதை அறிவிலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நறுமணத்தைவிட துர்நாற்றம் நமது மூளையில் மிக விரைவாகச் செயலாக்கப்படுவதாக புதிய ஆய்வு தெரிவிக்கிறது. இந்த தகவல், டோக்கியோ பல்கலைக்கழக அறிவியலாளர்களின் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டு 2022, வைகாசி மாதம், 27ஆம் நாள் வெளியிடப்பட்டது.

**வாசனை அறியும் மூளை**

தனித்துவமாக உருவாக்கப்பட்ட வாசனையை விநியோகிக்கும் சாதனம், உணர்வுகளை பதிவுசெய்ய எலெக்ட்ரோ என்செபலோகிராம் (Electro Encephalogram) இயந்திரக் கற்றல் அடிப்படையிலான பகுப்பாய்வுகள், மூளையில் நாற்றங்கள் எப்போது எங்கே செயலாக்கப்படுகின்றன என்பதைக் கண்டறிய ஆராய்ச்சியாளர்களுக்கு உதவியது.

ஆய்வில், உணர்தல் ஏற்பட்டபோது, நல்ல நாற்றங்களைவிட விரும்பத்தகாத துர்நாற்றங்கள் விரைவாக அறியப்பட்டு செயலாக்கப்பட்டதை அறிந்தனர். துர்நாற்றத்தைப் புரிந்துகொள்வதில் உள்ள சிக்கல்கள் நரம்பியல் கடத்தல் நோய்களின் தொடக்க அறிகுறியாக இருக்கலாம். எனவே, வாசனை என்பதன் அறிவியல், உணர்வின் நரம்பியல் தளங்களைக் கண்டுபிடிப்பது எதிர்காலத்தில் அந்தப் பகுதி தொடர்பான நோய்களைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள உதவும்.

**ஆய்வும் முடிவும்**

உங்களின் அடுத்த அறையில் ஒரு சூடான கோப்பி கொண்டு வரப்படுகிறது. அதன் வாசனை உங்களை அதனை நோக்கி இழுக்கும். ஒரு சூடான கோப்பியின் வாசனை உங்கள் நாளை சரியான வழியில் தொடங்க உதவுமா? அல்லது வலிமையான, பிரச்சினையான தாங்க முடியாத வாசனையை உங்களால் தாங்க முடியவில்லையா?

புதிய ஆராய்ச்சியின்படி, வாசனையை உங்கள் மூளை எவ்வளவு விரைவாகச் செயலாக்கிறது என்பது அந்த வாசனை இனிமையானதா இல்லையா என்பதைப் பொருத்து இருக்கலாம். டோக்கியோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு குழு, துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் 10 மாறுபட்ட வாசனைகளை வழங்கக்கூடிய ஒரு சிறப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளது.

இதில், மூளைக்குள் சிக்னல்களைப் பதிவுசெய்யும் எலக்ட்ரோ என்செபலோகிராம் (Electro Encephalogram -EEG) சாதனத்தை அணிந்திருக்கும்போது பங்கேற்பாளர்கள் வாசனையை நுகர அறிவுறுத்தப்பட்டனர். இப்போது அவர்களின் உணர்வுகள் மதிப்பிடப்பட்டது.

இயந்திரக் கற்றல் அடிப்படையிலான கணினிப் பகுப்பாய்வைப் பயன்படுத்தி EEG தரவின் அடிப்படையில் மூளையில் நாற்றங்களின் வரம்பு எப்போது, எங்கு செயலாக்கப்பட்டது என்பதைக் காண முடிந்தது.

**துர்நாற்றங்கள் நறுமணத்தைவிட விரைவில் அறிதல்**

துர்நாற்ற வாசனை செலுத்தப்பட்டு 100 மில்லி விநாடிகளில் உணரப்பட்டது கண்டு அறிவியலாளர்கள் வியந்துபோனார்கள். இது மூளையில் வாசனைத் தகவல்களின் பிரதிநிதித்துவம் மிக விரைவாக நிகழும் என்றும் தெரிவிக்கிறது என வேளாண் பட்டதாரி கல்லூரியின் கலாநிதி பட்ட மாணவர் முகிஹிகோ காடோ கூறினார். இவர் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் வாழ்க்கை அறிவியல் துறையைச் சேர்ந்தவர்.

பங்கேற்பாளர் உணர்வுப்பூர்வமாக உணரப்படுவதற்கு முன்பே மூளை துர்நாற்றத்தை உணர்ந்தது கண்டறியப்பட்டது.

சுமாரான அல்லது இனிமையான நாற்றங்களிலிருந்து 300 மில்லி விநாடிகளுக்கு முன்பே துர்நாற்றத்தை மூளை உணர்கிறது.

**மனித இனம் உயிர் வாழ்தலுக்கு வாசனை அறிதல் அவசியம்**

மனித இனம் உருவானபோதும்/ மனிதக் கருவிலும் முதன் முதல் உருவானது வாசனை உணர்வே. இதுதான் நமது உயிர் வாழ்தலை உறுதிப்படுத்தியது. அழுகிப்போய், கிருமிகள் உள்ள உணவை உண்டால் மனிதன் இறந்து போவான். உணவு கெட்ட வாசனையா, நல்ல வாசனையா என்று அறிந்தே ஆதி மனிதன் உணவு உட்கொண்டான். எனவே, தான் உணவு வைத்ததும் அனைத்து விலங்குகளும் உணவை முகர்ந்து பார்க்கின்றன.

சோதனையின்போது, நல்ல இனிமையான வாசனைகள் (மலர் மற்றும் பழ வாசனைகள் போன்றவற்றை 500 மில்லி விநாடிகள் வரை மூளையில் உணரப்படவில்லை. அதேநேரத்தில் தரம் குறைந்த வாசனைகள், குறிப்பிடப்பட்ட நேரத்தில் துர்நாற்றம் தொடங்கிய 600-850 மில்லி விநாடிகளில் உணரப்பட்டுள்ளன.

துர்நாற்ற உணர்வு ஆபத்தின் எச்சரிக்கை

எனினும் விரும்பத்தகாத நாற்றங்கள் பற்றிய முந்தைய கருத்து என்பது சாத்தியமான ஆபத்துகளுக்கு எதிரான ஒரு தொடக்க எச்சரிக்கையாகக்கூட இருக்கலாம்.

நமது மூளை எவ்வாறு நாற்றங்களைச் செயலாக்குகிறது என்பதற்கான சோதனைகள், எதிர்காலத்தில் உயர் டெம்போரல் ரெசல்யூஷன் இமேஜிங் எதிர்காலத்தில் பார்கின்சன் மற்றும் அல்சைமர் நோய்கள் (Parkinson's and Alzheimer's diseases) போன்ற நரம்பியக் கடத்தல் நோய்களின் வழிமுறைகளை நன்கு புரிந்துகொள்வதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாகக்கூட இருக்கலாம்,

இதில் வாசனை உணர்வில் செயலிழப்பு என்பது ஒரு தொடக்க எச்சரிக்கை அறிகுறியாகும். மேலும் பல ஆராய்ச்சி வழிகளை ஆராய்வதில் குழு ஆர்வமாக உள்ளது. மேலும் ஒவ்வொரு உணர்வும் மற்றொன்றின் உணர்வை பாதிக்கிறது என்று காடோ கூறுகிறார்.

தற்போதைய ஆய்வில் வாசனை உணர்வுத் தூண்டுதல்களை மட்டும் வழங்கியிருந்தாலும், நாற்றங்களை வழங்குவது போன்ற இயற்கையான நிலைமைகளின் கீழ் மூளையின் செயல்பாட்டை பகுப்பாய்வு செய்வது முக்கியம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மக்களாட்சியை...

கட்சிகள் அனைத்தும் தங்களை வளப்படுத்திக் கொண்டன. அந்த வளமான பொருளாதாரச் சூழல்தான் அரசியல் கட்சிகளை நிறுவனங்கள் போல் செயல்பட வைத்து வாக்குகளைச் சந்தைப்படுத்த வைத்தது. வாக்குகளை சந்தைப்படுத்தியதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் சந்தைப்படுத்தப்பட்டனர்.

இதற்கான மூலதனங்கள் கட்சிகளுக்கு வந்தது சந்தையிலிருந்துதான் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இதன் விளைவு, கட்சிகள், நிறுவனங்கள்போல் உருமாறி செயல்படத் தொடங்கின. அரசியல் கட்சிகள் பொதுமக்களை நம்பி செயல்பட்ட காலத்தில், எளிமையாக, மக்களுடன் இணைந்து செயல்பட்டன. கட்சிக்காரர்கள் கட்சிக்காக உழைத்தனர். இந்த நிலை மாற்றப்பட்டு அனைத்து கட்சிப் பணிகளுக்கும் ஊதியம் என பிரகடனப்படுத்தப்பட்டது.

அரசியல் கட்சியின் செயல்பாடுகள், தொழிற்சாலை செயல்பாடுகள்போல் ஆகிவிட்டன. கட்சிக்காரர்கள் கட்சியிலிருந்து அந்நியப்பட்டுப் போனார்கள். இதன் விளைவுதான், இன்று அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு அந்தக் கட்சியின் உறுப்பினர்களைக் கொண்டு வருவதற்கே பணம் கொடுக்க வேண்டியுள்ளது. அதன் தொடர்ச்சியாக, வாக்குகளுக்கும் பணம் கொடுக்க வேண்டியுள்ளது. மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்க அழைத்துவரப்பட்டு வைகாசி 9 வன்முறைக்கு வித்திட்ட கும்பலுக்கும் ஆளுக்கு 5 ஆயிரம் ரூபாவும் அரைப் போத்தல் சாராயம் மற்றும் சாப்பாடும் வழங்கப்பட்டது மறக்கக்கூடியதல்ல.

அரசியல் கட்சிகளை நிறுவனத்தை நடத்துவதுபோல் கட்சித் தலைவர்கள் நடத்த தொடங்கிவிட்டதன் விளைவு இது. அதனால்தான் சகோதரச் சண்டைகளும் வருகின்றன. அது மட்டுமல்ல, கட்சிகள் இயங்க நிறுவன அணுகுமுறையைப் பின்பற்றினர்.

இன்று, கட்சி அரசியல் என்பது தங்கள் நிறுவனங்களை, அதன் சொத்துகளைக் காப்பதற்காக நடத்தப்படும் ஒன்றாக மாறி வருகிறது. இதற்கு மிக முக்கியக் காரணம் நமது மக்களாட்சியை, தேர்தலை விட்டு வேறு எந்த செயல்பாட்டிற்கும் விரிவாக்கம் செய்யாது, குறுக்கியே வைத்து செயல்பட்டதுதான். இதனால் கட்சி அரசியல் என்பது தேக்கமடைந்து விட்டது. கட்சிகள் தொழில் நிறுவனங்களாக செழித்து வளர்ந்தன. ஆனால் நாட்டில் தொழில் நிறுவனங்கள் செழித்து வளரவில்லை. அதுவே பொருளாதாரப் பேரழிவுகளுக்கும் இட்டுச் சென்றது.

தொண்டர்களுடன் கட்சிகள் உணர்வுபூர்வ தொடர்பில் இல்லை. மாறாக, கட்சியால் லாபம் அடைவோருடன் தொடர்பில் இருக்கின்றன. என்றைக்கு கட்சிகள் வாக்குக்கு பணம் தர தொடங்கினவோ அன்றே அவை மக்களுடனான அரசியல் தொடர்பை முறித்துக்கொண்டுவிட்டன. கட்சிகள் இன்று மக்களிடம் வணிகத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு செயல்படுகின்றன. இதன் விளைவுதான் கட்சிகள் அரசியல் விளம்பரதாரக் கம்பெனிகளை நோக்கி படையெடுக்கத் தொடங்கியது. இதன் விளைவாக, கட்சி அரசியல் என்பது கொள்கை சார்ந்தோ, தத்துவம் சார்ந்தோ இல்லாமல் சந்தை சார்ந்து இயங்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவேதான் கட்சி அரசியலைத் தாண்டி புதிய அரசியலை கட்டமைக்க முடியாத சூழலில் மக்களாட்சி சிதிலமடைந்து வருகின்றது.

இந்தச் சூழலை மாற்ற நாம் சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். நாம் கட்சி அரசியலிருந்து வேறு ஒரு அரசியலை கட்டமைக்க முயல வேண்டும். அது ஒரு அறிவுசால் முயற்சி. புதிய அரசியலை நோக்கிச் செல்ல நாம் தயாராக வேண்டும்.

# மீண்டும் பொருளாதார மந்தநிலை? அச்சத்தில் உலக நாடுகள்

**கனிமொழி**

கொரோனா பெருந்தொற்றின் பாதிப்பு மற்றும் மிக மோசமான அரசியல் முடிவுகள் என்பவற்றால் வரலாற்றில் என்றுமில்லாத பொருளாதாரச் சரிவில் சிக்கி அமிழ்கிறது இலங்கை. அடுத்து வரும் மாதங்களில் பட்டினி தாண்டவ மாடப்போகின்றது என்கிற எச்சரிக்கை தொடர்ந்து விடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. சரிவிலிருந்து மீள்வதற்கு புதிய தலைமை அமைச்சர் வரிகளை உயர்த்தி ஒரு முயற்சியை எடுத்திருக்கிறார். எனினும் ஆட்சியாளர்களின் நிலையான பொருளாதாரக் கொள்கை பற்றிய தெளிவான அறிவிப்பு எதுவும் இல்லை. அது தெளிவுபடுத்தப் படாமல் பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி போன்ற நிறுவனங்கள் இலங்கையை மீட்பதற்கான பெருமளவு உதவிகளைச் செய்வதற்கு உடனடி வாய்ப்புக்கள் ஏதுமில்லை. தாமதிக்கத் தாமதிக்க நெருக்கடிகளும் பட்டினியும் இன்னும் அதிகரித்துக்கொண்டே போகப்போகிறது.

இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளும்கூட மீண்டுமொரு பொருளாதார மந்தநிலைக்குள் திண்டாடவேண்டிய நிலை ஏற்படலாம் என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அத்தகையதொரு நிலை ஏற்பட்டால் அது இலங்கையின் பொருளாதாரத்தை இன்னும் மோசமாகப் பாதிக்கும். கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து உலகப் பொருளாதாரம் மெல்ல மீண்டும் வரும் நிலையில் ஏற்பட்டுள்ள உக்ரேன் - ரஷ்ய போர் தற்போது பல்வேறு நாடுகளும் புதிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார சுழற்சியால் பொருட்களின் தேவை அதிகரிப்பு, கச்சா எண்ணெய் விலை உயர்வு போன்ற காரணங்கால் உணவுப்பொருட்கள் தொடங்கி பல பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. சமையல் எண்ணெய், தொடங்கி கோதுமை, சர்க்கரை என பல உணவுப்பொருட்களின் விலை அதிகரித்து வருகிறது. இதனால் பல நாடுகளில் பொருளாதார சிக்கல் உருவாகி வருகிறது. இதனால் பல நாடுகளில் பணவீக்கம் ஏற்பட்டு பொருட்களை வாங்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் உலகளாவிய பொருளாதார சிக்கலை அதிகரித்த முக்கிய காரணி. இதுபோலவே சீனா உள்ளிட்ட நாடுகளில் மீண்டும் கொரோனா தொற்றுக் காரணமாக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் பட்டதால் உலகம் முழுவதுமே பொருளாதார அச்சுறுத்தல்கள் மேலும் தீவிரமாகியுள்ளது.

**பல நாடுகளில் பாதிப்பு**

பல நாடுகளும் பொருளாதார பாதிப்பு, கடன் சுமை என்பவற்றால் தவிக்கின்றன. மாசி மாதம் 15ஆம் நாள் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்குவதற்கு 9 நாட்களுக்கு முன்பாக உலக வங்கி மிக முக்கியமான அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் 70 நாடுகள் பெரும் கடன் சுமை, அந்நியச் செலாவணி இழப்பு போன்ற சூழலில் இருப்பதாக தெரிவித்து இருந்தது. இலங்கையும் அதில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2022ஆம் ஆண்டில் இந்த நாடுகளில் பொருளாதாரம் அழியும் சூழலில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

107 நாடுகளின் பொருளாதாரம் மிக மோசமான சூழலில் உள்ளதாக ஐ.நா.வும் தெரிவித்துள்ளது. இந்த நாடுகளில் உணவுப் பொருட்களின் விலை கடுமையாக உயரும், கச்சா எண்ணெய் மற்றும் மின்சார விலை அதிகரிக்கும். கடன் சுமையால் இந்த நாடுகளில் நிதிநிலை மோசமாகும் என்றும் இந்த எதிர்வுகூறல்கள் தெரிவிக்கின்றன. 170 கோடி மக்கள் இந்த பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொள்ளும் ஆபத்து உள்ளது. இதில் 69 நாடுகளில் இலங்கையின் நிலையில் உள்ளன. எகிப்து, துனிஷியா, துருக்கி, லெபனான், அர்ஜென்டினா, எல்சால்வெடர், பெரு, கானா, கென்யா, தென்னாப்பிரிக்கா, எத்தியோப்பியா போன்ற நாடுகளும் இதுபோன்ற மோசமான பொருளாதார சூழலை எதிர்கொண்ட வருகின்றன.

இந்த நாடுகள் அடுத்த 12 மாதங்களில் மிகப் பெரிய கடன் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும், 10க்கும் மேற்பட்ட நாடுகள் திவாலாகும் நிலைக்கு தள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் உலக அளவில் 2008-ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு நிலை, தற்போதும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது.

**அச்சத்தில் அமெரிக்கா**

பொருளாதார மந்தநிலை என்பது ஜிடிபி எனப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி சரிவை சந்திக்கும்போது ஏற்படும் தேக்கமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் அளவிடக்கூடிய அளவுகோல். உதாரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 9 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைந்தால் அது பொருளாதார சரிவு என கருதப்படும். இந்த அடிப்படையில் பார்த்தால் பல நாடுகளில் பொருளாதார வளர்ச்சி விகிதம் என்பது கடந்த சில ஆண்டுகளா சரிவாகவே உள்ளது. எனவே மந்தநிலை தொடங்கி விட்டதா என்ற அச்சம் எழுந்துள்ளது.

ஏழை நாடுகள், வளர்ந்து வரும் நாடுகளில் மட்டுமல்லாமல் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலும் இதே நிலைதான் உள்ளது. அமெரிக்காவிலுள்ள 80%க்கும் அதிகமானோர் இந்த ஆண்டு அமெரிக்காவில் மீண்டும் பொருளாதார மந்தநிலை ஏற்படலாம் என்று மொமென்டிவ் ஆய்வு நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிவித்துள்ளனர். குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்களில் 91% மந்தநிலை ஏற்படப் போகிறது என்ற அச்சத்தில் உள்ளனர். அதேநேரத்தில், 88 சதவீதம் பேர் நாட்டில் நிதி நெருக்கடி, பொருளாதார மந்தநிலை மீண்டும் வருமோ என்ற சந்தேகம் உள்ளதாக தெரிவித்தனர். அமெரிக்காவில் மந்தநிலை பற்றிய மக்களின் அச்சம் பொருட்களின் விலை உயர்வு காரணமாக எழுந்துள்ளது. பணவீக்கம் அதிகரித்துக் கொண்டே போனால், மக்கள் டொலர்களை செலவழிப்பதை நிறுத்தி விடுவார்கள் என்றும், மந்தநிலை ஆபத்து உருவாகும் என்று மக்கள் நினைக்கின்றனர்.

பிரான்ஸில் பணவீக்கத்தின் தாக்கம் பெற்றோலியப் பொட்களைத் தாண்டி நாளாந்தப் பாவனைப் பொருட்களான குடிதண்ணீர் போத்தல் கள்வரை விரிவாகிவிட்டதாகவும் நீண்ட காலத்தின் பின்னர் அத்தகைய பொருட்களின் விலைகள் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன என்றும் தெரிவிக்கிறார் அங்குள்ள பத்திரிகையாளரான க.குமாரதாஸன்.

**பிரிட்டன்**

இதுபோலவே பிரிட்டனில் பணவீக்கம் 40 ஆண்டு காலத்தில் இல்லாத வகையில் 9 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதையடுத்து அங்கு பொருளாதார மந்தநிலை ஏற்படும் என்ற பயம் அதிகரித்து வருகிறது. பிரிட்டனில் கடந்த பங்குனி மாதத்திலேயே பணவீக்கம் அதிகரித்து 7 சதவீதமாக உயர்ந்திருந்தது. சித்திரை மாதம் பணவீக்கம் 9 சதவீதமாக அதிகரித்து உள்ளது. பிரிட்டனின் நிதியமைச்சர் ரிஷி சுனாக் கூறுகையில் "எரிபொருள் விலை உயர்வு காரணமாக, ஏப்ரலில் பணவீக்கம் அதிகரித்துள்ளது. இந்த உலகளாவிய சவால்களிலிருந்து மக்களை முழுமையாக பாதுகாக்க முடியாது. ஆனால், எங்களால் முடிந்த வரை, எங்கு முடியுமோ, அங்கு ஆதரவை தருகிறோம். பணவீக்கத்தை கட்டுப்படுத்த, மேலும் நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம்" எனக் கூறினார்.

இருந்தாலும் ஒப்பீட்டு அளவில் இந்த ஆண்டு பொருளாதார மந்தநிலை ஏற்படுவதற்கு சாத்தியமில்லை என பொருளாதார நிபுணர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். இருந்தாலும், உக்ரைன் போர், ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள், சீனாவின் ஜீரோ கொவிட்-19 கொள்கைகள், பணவீக்கம், அமெரிக்காவின் மத்திய வங்கியின் வட்டி விகித உயர்வு போன்ற காரணங்கள் 2022ஆம் ஆண்டின் வளர்ச்சிப் போக்கை கட்டாயம் குறைக்கும். மோசமடைந்து வரும் இந்த நிலைமைகள், சரியாக ஆராய்ந்து பார்க்காமல் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகள், தற்போதைய நிலையை மேலும் தீவிரமாக்குமா என்பதையும் கவனிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.



**70 நாடுகள் பெரும் கடன் சுமை, அந்நியச் செலாவணி இழப்பு போன்ற சூழலில் இருப்பதாக தெரிவித்து இருந்தது. இலங்கையும் அதில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.**



# துழக்கத் துழக்க சைபர் குற்றங்கள்!

அரவிந்தன்

அவினாஷ் ஒரு பட்டதாரி கொழும்பில் அம்மா, அப்பா, அக்கா என ஒரு அழகான குடும்பம். பெரிய நிறுவனத்தில் வேலைக்குச் செல்லவேண்டும், தன் குடும்பத்தை வெளிநாடுகளுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லவேண்டும் என்றெல்லாம் அவினாஷுக்கு நிறையக் கனவுகள் உண்டு. ஆனால், அத்தனை கனவுகளையும் சுக்குநூறாய் உடைத்துவிட்டு 2021 பங்குனி 23 அன்று தனது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அவினாஷின் குடும்பம் அதிர்ச்சியில் நிலைக்குலைந்தது. அவருக்கு என்ன நடந்தது, ஏன் இறந்தார் எனத் தெரியாமல் குழப்பத்தில் கதறி அழுதார்கள் குடும்பத்தினர்.

சம்பவம் நடந்த இரு நாட்கள் கழித்து, அவினாஷின் அக்காவிற்கு செல்பேசியில் ஓர் அழைப்பு வந்தது. 'உன் தம்பி கொடுக்க வேண் டிய மீதித் தொகையைத் தரவில்லை, அதைத் தரவில்லை எனில், அவனது அந்தரங்க வீடியோவை உங்கள் நண்பர்களுக்கு அனுப்புவோம்!' என ஒருவர் மிரட்டியிருக்கிறார். பதறிப்போன அவினாஷின் அக்கா காவல் துறையில் புகார் செய்ய மொத்தக் கும்பலும் வசமாக சிக்கியிருக்கிறது.

**நடந்தது இதுதான்!**

அவினாஷுக்கு முகப் புத்தகம் எனப்படும் பேஸ்புக்கில் நேஹா சர்மா என்கிற பெண் அடையாளத்திலிருந்து நட்புக் கோரிக்கை வந்திருக்கிறது. இது போலிக் கணக்கு எனத் தெரியாமல் அந்த நபருடன் நட்பு பாராட்டியிருக்கிறார் அவினாஷ். நட்பு முகப்புத்தகம் கடந்து, மெசஞ்சரில் நுழைந்து, வாட்ஸப் வரை வளர்ந்து, வீடியோ அழைப்புகளில் பாலுறவு உணர்வுகளைப் பகிர்ந்திருக்கிறார்கள். இதைப் பதிவுசெய்துகொண்டு உனது குடும்பத்திற்கு அனுப்பிவிடுவேன் பணம் கொடு என மிரட்டத் தொடங்கியிருக்கிறது நேஹா சர்மா என்கிற போலிக் கணக்கு.

பதறிப்போன அவினாஷ் தனது நண்பர்களிடமிருந்து பணம் திரட்டி மிரட்டல்காரனிடம் கொடுத்திருக்கிறார். அவர்கள் தொடர்ந்து பணம் கேட்டு மிரட்டவே அழுத்தம் தாளாது தற்கொலை செய்துகொண்டார். அவர் இறந்தது தெரியாமல் தங்களது அழைப்புக்குப் பதில் தரவில்லையே என அவரது அக்காவையும் அந்தக் கும்பல் மிரட்டத் தொடங்கியதை அடுத்தே சிக்கியிருக்கிறது.

> **வீடியோ அழைப்புகளின்போது இருவழிகளைக் கையாளுகிறார்கள். மிரட்டல் குழுவில் ஒரு பெண்ணும் இருக்கிறார். எதிர் முனையில் இருக்கும் ஆணிடம் பேசி அவரது அந்தரங்கச் செயல்களைப் பதிவுசெய்வது முதல் வழி.**

ஒருவரது அந்தரங்கப் புகைப்படங்களையோ, காணொளியையோ வெளியிட்டுவிடுவேன் என மிரட்டிப் பணம் பறிப்பதுதான் 'செக்ஸ்டார்சன்' (SEXTORTION) குற்றம். இது முதலில் பெண்களைக் குறிவைத்து நிகழ்த்தப்பட்டாலும், இப்போது இக்குற்றத்தின் முதன்மை இலக்கு ஆண்கள்தான். காரணம், அவர்களே சுலபமான இலக்கு!

குடும்பம் மற்றும் சமூகத்தில் தனது பெயர் கெட்டுவிடுமே எனக் கேட்ட பணத்தைக் கொடுப்பது மட்டுமின்றி, காவல் துறைக்கும் செல்லமாட்டார்கள் என்பதுதான் இக்குற்றங்களுக்குப் பக்க பலமாக நிற்கிறது. கடந்த மாசி மாதம் இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு செக்ஸ்டார்சன் கும்பலைக் கைது செய்தது டெல்லி காவல்துறை. 14 வங்கிக் கணக்குகளை வைத்துக்கொண்டு, குறைந்தபட்சம் 200 பேரை இவ்வகையில் மிரட்டி ரூ.30 லட்சம் பணத்தை இக்கும்பல் பறித்திருக்கிறது என்கிறது இந்தியக் காவல்துறை. என்றால் இந்த செக்ஸ்டார்சன் கும்பல்களின் பிரமாண்டத்தைப் புரிந்துகொள்ளுங்கள். இந்தளவிற்குப் பெரிதாக இல்லை என்றாலும் சிறிய அளவில் இலங்கையிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கத்தான் செய்கின்றன. இதுபோல எண்ணற்றக் குழுக்கள் ஒவ்வொரு நாளும் யாரோ ஒருவரை மிரட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**இவர்கள் இதை எப்படி செய்கிறார்கள்?**


இலக்கு ஆண் என்றால், பெரும்பாலும் 20-30 வயது மற்றும் 45-60 வயதுக்காரர்கள்தான் இலக்கு. பெண்கள் பெயரில் போலிக் கணக்குகளைத் தொடங்கி பேஸ்புக், டின்டர், இன்ஸ்டா உட்பட சமூக வலைத்தளங்களில் நட்பு அழைப்பு விடுக்கிறார்கள். நட்புக் கோரிக்கை ஏற்கப்பட்டவுடன் பெண்கள் அனுப்புவதுபோல செய்திகள் அனுப்பி, பழகி, வாட்ஸப் வீடியோ அழைப்புகளில் உல்லாசத்திற்கு அழைக்கிறார்கள். பெண்போல செய்தி அனுப்பலாம், குரல் மாற்றும் செயலிகளைக் கொண்டு பெண்போலவும் பேசலாம். ஆனால், காணொளி அழைப்புகளில் போலி எனத் தெரிந்துவிடுமே!

இதை தவிர்க்க, வீடியோ அழைப்புகளின்போது இருவழிகளைக் கையாளுகிறார்கள். மிரட்டல் குழுவில் ஒரு பெண்ணும் இருக்கிறார். எதிர் முனையில் இருக்கும் ஆணிடம் பேசி அவரது அந்தரங்கச் செயல்களைப் பதிவுசெய்வது முதல் வழி. அல்லது போர்ன் தளங்களில் பெண்கள் பேசுவதுபோல இருக்கும் வீடியோவைத் தரவிறக்கி, அதன் ஆடியோவை சம்பந்தப்பட்ட நபரின் பெயரை உச்சரிப்பதுபோல் மாற்றி வீடியோ அழைப்புபோல் ஒளிபரப்புவது இரண்டாவது வழி. இதை உண்மை என நம்பி உல்லாசத்தில் ஈடுபடும்போது பதிவுசெய்துகொள்வார்கள்.

இல்லை! நான் சும்மா பழகுவேன். இதுபோன்ற செயல்களில் ஈடுபடமாட்டேன் என மறுத்தாலும் தப்பிக்க முடியாது. வீடியோ காலில் தெரியும் உங்களது ஒரு நொடி முகம் போதும். அதைப் பதிவுசெய்து

# நிறவெறியைத் தாண்டியது குரங்கு அம்மை!

செலஸ்ரின்



உலகை அச்சுறுத்தும் மற்றொரு தொற்று நோயாக குரங்கு அம்மை பரவத் தொடங்கியிருக்கின்றது. இது கொரோனா போன்று பெருமளவு உயிர்களைக் காவு வாங்கக்கூடிய தொற்றுநோயல்ல என்றாலும் மனிதரில் இருந்து மனிதருக்குத் தொடுகை மற்றும் காற்று மூலம் பரவக் கூடயது என்பதால் அதன் மீது கவனத்துடனேயே இருக்கவேண்டியிருக்கிறது.

குரங்கு அம்மை தீநுண்மியால் (வைரஸ்) ஏற்படும் ஓர் அரிய வகை தொற்று நோய். குரங்கு அம்மை வைரஸ் என்பது பொக்ஸ்விரிடே (POXVIRIDAE) குடும்பத்தின் ஓர்த்தோபொக்ஸ் வைரஸ் (ORTHOPOXVIRUS) இனத்தைச் சேர்ந்த ஒரு இரட்டை இழை மரபணு (DNA) தீநுண்மி (வைரஸ்).

குரங்கு அம்மை நோய் மனிதர்களுக்கு இடையே எளிதில் பரவாது. இருப்பினும் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர் பயன்படுத்திய பொருள்களை உபயோகிப்பதன் மூலம் அது மற்றவர்களுக்குப் பரவலாம். கொரோனாவைப் போன்று, இந்த நோயும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து இருமல், தும்மலின் மூலம் மற்றவர்களுக்குப் பரவும் ஆபத்து உள்ளது.

பொதுவாக, நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்தே இது மனிதர்களுக்குப் பரவும். தொற்றால் பாதிக்கப்பட்ட விலங்குகளைத் தொடுவதன் மூலமோ, அதன் உடல் திரவங்கள் மூலமாகவோ அது மனிதர்களுக்குப் பரவுகிறது. குறிப்பாக எலி, அணில் போன்ற விலங்குகளிடமிருந்து இந்த நோய், பரவுவதாகக் கூறப்படுகிறது. குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் இறைச்சியைச் சரியாக வேக வைக்காமல் சாப்பிடு வதே நோய்ப் பரவுதலுக் கான முக்கிய காரணம் என்று நிபுணர்கள் கூறு கின்றனர்.

இந்த நிலையில், ஒரு தரப்பினர் குரங்கு அம்மை தொற்று நோயை நிற ரீதியான தொற்று நோயாகக் காட்ட முற்படுகின்றனர். இருப்பினும், தற்போதைய நிலவரப்படி குரங்கு அம்மை நோய் ஐரோப்பிய நாடுகளிலும் கணிசமாகப் பரவியிருக்கும் நிலையிலும் நோய்த் தொற்றை ஆப்பிரிக்க மக்களுடனேயே ஐரோப்பிய ஊடகங்கள் தொடர்புபடுத்துகின்றன. கிட்டத்தட்ட 20 நாடுகளில் குரங்கு அம்மை தொற்று 131 பேருக்கு ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும் 100க்கும் மேற்பட்டவர்களுக்கு நோய் பாதித்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், பெரும்பாலான நோய்த் தொற்றுகள் ஐரோப்பாவில் பதிவாகியுள்ளன. அதுதான் அச்சத்துக்குக் காரணம். வழக்கமாகப் இந்த நோய் பரவும் மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவைத் தாண்டி ஐரோப்பா முழுவதும் நோய் பரவத் தொடங்கியிருப்பது அச்சத்தை அதிகரித்திருக்கிறது. மேலும், மத் திய கிழக்கு, வட அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவிலும் குரங்கு அம்மை தொற்று பாதிப்புகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பு தரப்பில், 'குரங்கு அம்மை தொற்று எல்ஜிபிடி மக்களுக்குத்தான் பரவுகிறது. இது ஆப்பிரிக்காவிலிருந்து பரவிய தொற்று என பல தவறான கருத்துகள் நிலவுகின்றன. இது முற்றிலும் தவறு. குரங்கு அம்மை நோய் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். இவ்வாறான வதந்திகளினால் நோயின் தீவிரத் தன்மையை மக்களுக்கு உணர்த்த முடியாத நிலைமை ஏற்படுகிறது. இம்மாதிரியான வதந்திகளால் சுகாதார சேவைகள் பாதிக்கின்றன. உண்மையில் சரியான மருத்துவ நடவடிக்கை மூலம் குரங்கு அம்மை தொற்றை கட்டுப்படுத்த முடியும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## துடிக்கத் ...

கொண்டு, ஏற்கனவே தயாராக இருக்கும் பெண் வீடியோவின் வலது புற மேல்முனையில் சிறியதாக எடிட் செய்துவைத்தால் போதும். பார்ப்பதற்கு அந்தப் பெண்ணிற்கும் உங்களுக்கும் நீண்ட நாள் தொடர்பு இருப்பதுபோலவும், அவரது செயல்களை வீடியோ அழைப்பில் பார்த்து நீங்கள் ரசிப்பதுபோலவும் சித்தரித்துவிடமுடியும்.



தெரியாத நபர்களிடமிருந்து பெண்களுக்குத் திடீரென மெசெஞ்சரில் வரும் வீடியோ அழைப்புகளுக்கு இப்படியும் ஒரு பின்னணி உண்டு. யார் என்ன என்பது தெரியாமல் எடுத்தால் எதிர்முனையில் ஒரு ஆண் நிர்வாணமாக நிற்பதுபோன்று இருக்கும். இதைப் பார்த்து, பதறி கைவிரல்கள் நடுங்க வீடியோ அழைப்பைத் துண்டிக்கும் உங்கள் அந்த நொடி முகம்போதும். மேற்சொன்னபடி எடிட் செய்து மிரட்ட!

இந்த எடிட் அல்லது அந்தரங்கப் பதிவு முடிந்தவுடன் மிரட்டலைத் தொடங்குகிறார்கள். ஏற்கனவே உங்கள் வலைதளக் கணக்குகளிலிருந்து உங்கள் நண்பர்கள், குடும்பம், நீங்கள் வேலை செய்யும் நிறுவனம் என உங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டியிருப்பார்கள். அவர்களுக்கு அனுப்பி, உங்கள் பெயரைச் சமூகத்தில் ஒன்றுமில்லாமல் செய்துவிடுவேன் என மிரட்டுவார்கள். உங்களால் எவ்வளவு தொகையை எளிதாகத் தர முடியும் என்பதையும்கூட கணித்திருப்பார்கள். ஒருமுறை தந்தால் இதிலிருந்து தப்பித்துவிடலாம் என சொன்னதை நம்பி நீங்கள் தந்தால், மிரட்டல் தொடரும். உங்கள் வங்கி கணக்கு, வாழ்நாள் சேமிப்பு என அனைத்தும் தீர்ந்து போகும்வரை இது தொடரும்.

### மிரட்டல்களை எப்படித் தவிர்ப்பது? தப்பிப்பது?

சமூக வலைத்தளங்களில் நட்பு கோரிக்கைகளை ஏற்கும்போது கவனமாகச் செயல்படுங்கள். அது புதிய கணக்கா, எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள், புகைப்படம் இதெல்லாம் கவனத்தில் கொள்ளுங்கள். இதை வைத்தே போலிக் கணக்கா இல்லை நம்பகமானதா எனக் கண்டுபிடித்துவிடலாம். இது தவிர்த்து கோரிக்கையை ஏற்றவுடன் நீங்கள் அழகாக இருக்கிறீர்கள், உங்களுடன் பேச வேண்டும் என செய்தி வந்தால் சரிதான், எனக்குத்தான் டார்கெட் என உஷாராகி விடுங்கள். போலிப் புகைப்படத்தைப் பார்த்து ஏமாறாமல் மனதைக் கல்லாக்கிக்கொண்டாவது தடைசெய்துவிடுங்கள்.

அந்தரங்க மிரட்டல்களில் இருக்கும் ஒரு பிரச்சினை பாதிக்கப்பட்டோர் முறைப்பாடுசெய்ய முனைவதில்லை. ஆகவேதான் ஒரு முறைப்பாட்டில் இருநூறு பேர் ஏமாந்திருப்பது தெரியவந்திருக்கிறது. இதுபோன்ற நிலை மாறவேண்டும். சைபர் குற்றங்களுக்கு என காவல் நிலையங்களில் தனிப் பிரிவு இருக்கிறது. அங்கு முறையிடலாம்.

மேலும் நம் அந்தரங்கப் புகைப்படமோ காணொளியோ இணையத்தில் கசிந்துவிட்டால் அத்தனையும் முடிந்தது என உடைந்துவிடாதீர்கள். இந்த பலவீனமான மனநிலைதான் சைபர் மிரட்டல்களின் ஆதார அச்சு. இது போன்ற மிரட்டல்களுக்கு காவல் துறை மட்டுமே உங்களுக்கு உதவிடமுடியும். மேலும் உடலைவிட இங்கு உயிர் வாழ்தல் மிக முக்கியம். நீங்கள் அளிக்கும் முறைப்பாடு பாதிக்கப்பட இருக்கும் பல உயிர்களைக் கூடக் காப்பாற்றலாம். ஆகவே துணிந்து முறைப்பாடு செய்யுங்கள்.

# எப்போதாவது இந்த உலகம் ஆண்களையும் நம்புகிறது

கோகுல் பிரசாத்

திரைப் பிரபலங்களின் திருமணமும் விவகாரத்தும் மக்களுக்கு எப்போதும் ஆர்வத்துக்குரிய பேசுபொருள்தான். அண்மையில் தமிழ் நடிகரான தனுஷ் மற்றும் அவரது மனைவியும் நடிகர் ரஜினி காந்தின் மகளுமான ஐஸ்வர்யா இருவரும் விவகாரத்துச் செய்து கொள்வதாக அறிவித்தனர். அது மக்களுக்குப் பரபரப்பூட்டும் செய்தியாக இருந்தது. அதற்கு முன்னதாக நடிகை சமந்தாவும் அவரது கணவர் நாக சைதன்யாவும் விவகாரத்துச் செய்துகொண்டதும்கூட அவ்வாறே. இந்த இரு இணையர்களுமே மன மொத்து பிரிந்து சென்றுவிட்டனர். அதனால் அவர்களின் விவகாரத்துத் தொடர்பில் தொடர்ந்தும் சர்ச்சைகள் இல்லாமல் முடிந்துபோய்விட்டன. ஆனால், உலகம் முழுவதும் ரசிகர்களைக் கொண்ட ஜானி டெப் மற்றும் ஆம்பர் ஹெர்ட் விவகாரத்து அப்படி முடிந்துவிடவில்லை. அது மழையின் பின்னான சராலாக அன்றி பூகம்பமாக வெடித்துச் சிதறியது.

பைரேட்ஸ் ஒஃவ் கரீபியன் திரைப்படத்தின் நாயகனான ஜானி டெப் உலகம் முழுவதும் ரசிகர்களைக் கொண்டவர். தனது 50களில் தன்னைவிட 25 வயது குறைந்தவரான ஆம்பரை காதலித்துக் கரம் பிடித்தார் ஜானி. 2012ஆம் ஆண்டு தி ரம் டைரி என்கிற திரைப்பட அரங்கத்தில்தான் இருவரும் சந்தித்துக்கொண்டனர். விரைவிலேயே தங்கள் காதல் பயணத்தை (டேட்டிங்) தொடங்கினர். 2015 தொடக்கத்தில் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். எல்லாம் நன்றாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது என்று உலகம் நம்பிக்கொண்டிருந்தபோது, 15 மாதங்கள் கழித்து திடீரென ஒரு நாள் ஆம்பர் விவகாரத்து மனுவோடு நீதிமன்றத்தை அணுகினார்.

பாலியல் ரீதியாகவும் குடும்ப வன்முறை ரீதியாகவும் தான் அதிகம் துன்புறுத்தப்பட்டார் என்பதை ஆம்பர் நீதிமன்றில் தெரிவித்தபோது உலகம் அதிர்ந்தது. ஜானி பல மில்லியன்கள் டொலர் இழப்பீடாகக் கொடுத்து விவாகரத்தும் கொடுத்தார். அத்தோடு பிரச்சினையை விட்டிருக்கலாம் ஆம்பர். விதி யாரை விட்டது? 2018ஆம் ஆண்டு பிரிட்டனில் இருந்து வெளிவரும் தி சண் பத்திரிகையில் ஆம்பரின் கட்டுரை ஒன்று வெளியாகிறது. மனைவியை அடிப்பவன் என்று அதற்குத் தலைப்பிடிருந்தது பத்திரிகை. அதில் ஜானிக்கும் தனக்குமான திருமண உறவின் கொடூரமான பக்கங்கள் குறித்து ஆம்பர் விலாவாரியாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தார். அதையடுத்து அவர் நடிக்க ஒப்பந்தமாகி இருந்த பல படங்களில் இருந்து ஜானி நீக்கப்பட்டார். இது தொடர்கதையானதைத் தொடர்ந்து ஆம்பர் மீது மானஇழப்பு வழக்கு தாக்கல் செய்தார் ஜானி.

கடந்த சில மாதங்களாக நடைபெற்றுவந்த ஜானி டெப் எதிர் ஹெர்ட் மான இழப்பு வழக்கு கடந்த வாரம் முடிவுக்கு வந்திருக்கிறது. ஆம்பர் ஹெர்ட் மீதே மேலதிகத் தவறு உள்ளது என்றும் ஜானி டெப் குறித்து அவர் எழுதிய சர்ச்சைக்குரிய கட்டுரையானது ஆதாரமற்ற அவதூறுகளைச் சுமத்தி களங்கம் விளைவிக்கும் உள்நோக்கங்கள் கொண்டது என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் வழக்கின் அறக்கூறாயக் குழு. ஜானி டெப் சார்பில் ஐந்து கோடி டொலர்கள் இழப்பீடு கேட்டு தொடரப்பட்ட வழக்கில் ஹெர்டைப் ஒன்றரைக் கோடி டொலர்களை வழங்கச்சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். இவ்வழக்கிற்கு எதிராக நூறு மில்லியன் டாலர்கள் கோரி எதிர் மானநஷ்ட வழக்கு தொடர்ந்த பட்ட நபர் என்று போலியாக முன்னிறுத்தியது எடுபடவுமில்லை.

இதுபோன்ற வழக்குகளில் காலங்காலமாகப் "பாவப்பட்ட" பெண்களின் சார்பாகத் தீர்ப்பு வருவதே வழக்கம். இம்முறை அப்படி நடந்துவிடக்கூடாது என்பதில் எல்லோரும் உறுதிபடத் தீர்மானித்துச் செயல்பட்டது போலிருந்தது. ஏனெனில், பெண்களிலும் நிறைய உள்ளக துன்புறுத்தல்கள் (domestic abusers) உண்டு என அழுத்தமாகச் சொல்வதற்கு இதுவொரு பொன்னான வாய்ப்பு. அதுவும் ஜானி டெப் போன்ற உலகறிந்த பிரபலத்துக்கே இங்ஙனம் நிகழ்ந்திருக்கிறது

**பாலியல் ரீதியாகவும் குடும்ப வன்முறை ரீதியாகவும் தான் அதிகம் துன்புறுத்தப்பட்டார் என்பதை ஆம்பர் நீதிமன்றில் தெரிவித்தபோது உலகம் அதிர்ந்தது. ஜானி பல மில்லியன்கள் டொலர் இழப்பீடாகக் கொடுத்து விவாகரத்தும் கொடுத்தார்.**



ஆம்பர் ஹெர்டுக்கு ஜானி டெப் இரண்டு மில்லியன் டாலர்கள் கொடுக்க வேண்டும். ஏழு பேர் கொண்ட அறங்கூறாயக் குழு (ஐந்து ஆண்கள், இரண்டு பெண்கள்) இத்தீர்ப்பினை ஒருமனதாக முன்மொழிந்திருக்கிறது.

### இத்தீர்ப்பின் மூலம் சில விடயங்கள் தெளிவாகின்றன

**1.** வழக்கு தொடங்கிய முதல் நாளிலிருந்தே சமூக ஊடகங்களில் ஜானி டெப்புக்கு ஆதரவு குவிந்திருந்தது. "I Support Johnny Depp" ஹேஷ்டேகை எண்பத்து ஐந்து மில்லியன் ஆட்கள் ட்ரெண்டிங் செய்தபோது ஆம்பர் ஹெர்டுக்கு வெறும் ஏழரை மில்லியன் மக்களே தங்கள் ஆதரவை நல்கியிருந்தனர். இதற்குக் காரணம் டெப்பின் நட்சத்திர அந்தஸ்தும் இரசிகப் பட்டாளமும் மட்டுமல்ல. ஆம்பர் ஹெர்டைப் பெருவாரியான மக்கள் நம்பவில்லை. அவர் தன்னைக் குடும்ப வன்முறையினால் பாதிக்கப் எனும்போது இதைத் தவறவிட யாரும் தயாராக இல்லை. இவ்வழக்கை நேரலையில் ஒளிபரப்பியது இன்னும் பரந்துபட்ட மக்களைச் சென்றடைவதற்கு வசதியாகப் போய்விட்டது. இந்தளவுக்குச் சமூக ஊடகங்களின் கண்காணிப்பின் கீழ் நகர்த்திச் செல்லப்பட்ட வழக்கு சமீபத்தில் வேறில்லை என்றே சொல்லலாம்.

**2.** தீர்ப்பைப் பொறுத்தவரை இவ்விருவரது குடும்ப உறவில் ஒருவரை ஒருவர் அவமதிப்பது தொடர்ந்து நிகழ்ந்திருக்கிறது என்பதை அறக்குறாய்வாளர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஜானி டெப் அதை மறுக்கவில்லை. தான் வன்மையாக நடந்துகொண்டதை அவர் ஒப்புக்கொள்கிறார். ஆனால் தன்னை அவ்வாறு நடந்துகொள்ளத் தூண்டியது ஆம்பர் ஹெர்டின் மோசமான நடத்தையும் நுட்பமான உளவியற் சித்திரவதையும்தான் என்பதே டெப்பின் குற்றச்சாட்டு. தான் முதல் நிலை குற்றவாளி அல்ல, தான் செய்தது அத்தனையும் ஹெர்டின் தீவினைகளுக்கான எதிர்வினையே என்பது அவரது நிலைப்பாடு. இழப்பீடாக ஹெர்ட் ஒன்றரை மில்லியன் டொலர்கள் தரவேண்டும் என்றும் ஆம்பர் டெப் இரண்டு கோடி டொலர்கள் தர வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.


**3.** ஹெர்ட் சார்பில் கொண்டு வரப்பட்டவர்கள் பலரும் அவரிடம் பணம் பெற்றவர். அதாவது, ஹெர்டுக்கு ஆதரவாகச் சாட்சி சொல்ல அழைத்து வரப்பட்டவர்களில் நிறைய பேர் அவரது ஊழியர்கள், மனநல ஆலோசகர்கள், ஏதாவது ஒருவகையில் ஹெர்டிடம் இருந்து ஊதியம் / பணம் பெற்றவர்கள், ஆதாயம் அடைந்தவர்கள். அதனால் அவர்களது நம்பகத்தன்மை குறைவு. ஆனால் டெப் தரப்பில் நிறைய அவரால் பயன்பெறாத பலர் இருந்தனர். காவல்துறையினர், பொதுமக்கள் (bystanders), முன்னாள் காதலி, இப்படிப் பலர். டெப் சார்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு இதுவும் முக்கியமான காரணம்.

**4.** ஆம்பர் ஹெர்ட் சமர்ப்பித்த சில ஒலிப்பதிவு ஆதாரங்கள் அவருக்கே எதிராகத் திரும்பின. ஓர் ஒலிப்பதிவில் இருவரும் கடுமையாகச் சண்டையிடுகிறார்கள். மேற்கொண்டு வாக்குவாதம் வளர்வதைத் தவிர்க்கும்பொருட்டு ஜானி டெப் கழிப்பறைக்குச் சென்று தாளிட்டுக்கொள்கிறார். அங்கேயும் விடாமல் துரத்திச் சென்று டெப்பை வம்பிழுக்கும் ஆம்பர் ஹெர்ட், "சண்டை போடுவதில் இருந்து தப்பிக்கப் பார்க்கிறாய். நீயொரு கோழை" என வசைபாடுகிறார். "என்னை ஏன் இப்படி வதைக்கிறாய்?" என மன்றாடும் டெப்பிடம், "ஓ! வெளியே போய் சொல்லிப் பாரேன். மனைவி உன்னைச் சித்திர வதை செய்வதாகச் சொல்லித்தான் பாரேன். இந்த உலகம் ஒரு பெண் சொல்வதை நம்புமா, இல்லை ஆண்கள் சொல்வதை நம்புமா?" என்று எகத்தாளமாகக் கேட்கிறார்.

**5.** ஆம்பர் ஹெர்ட் தொடர்ச்சியாகப் பொய்களைச் சொல்லி அவற்றைச் சமாளிக்க முடியாமல் திணறி நிறைய தடவை கையும் களவுமாகப் பிடிபட்டார். டெப் தன்னைத் தாக்கினார் எனவும் கன்னங்கள் வீங்கி உதடுகளில் குருதி வழிய 911-க்கு மூன்று முறை புகார் தந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். அப்புகார்களை விசாரிக்க அனுப்பப்பட்ட மூன்று காவல் அதிகாரிகளும் அந்தச் சமயத்தில் ஹெர்டின் முகத்தில் காயம் எதனையும் தாம் பார்க்கவில்லை எனச் சொல்லிவிட்டனர். (டெப் அடித்ததால் ஏற்பட்ட காயங்களை மறைக்க மிலானி நிறுவனத்தின் குறிப்பிட்ட ஒப்பனை சாதனத்தைப் பயன்படுத்தியதாக ஹெர்ட் தெரிவித்தார். ஆனால், இச்சம்பவங்கள் நடந்தபோது அந்தச் சாதனம் சந்தைக்கே வந்திருக்கவில்லை என மிலானி நிறுவனம் செய்தி அறிக்கை வெளியிட்டது.)

**6.** ஆம்பர் ஹெர்ட் தரப்பு வக்கீல்கள் டெப்பின் வன்முறை இயல்பை நிறுவ முயன்றனர். அதுவும்

(13ம் பக்கம் பார்க்க)




கமலாதேவி

# சித்திரக்கூடம்

ஜன்னலைத் திறந்ததும் மார்கழியின் பனி சட்டென்று அறையினுள் பாய்ந்தது. சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு சன்னல் பக்கமாக நின்றேன். வயல்வேலைக்குச் செல்லும் ஆட்கள் எப்போதோ எழுந்து வாசலில் கோலமிட்டு மண் அகல்களை ஏற்றி வாசல் படிஓரமாக வைத்தி ருந்தார்கள். அவை சிவந்த பொட்டுப்பொட்டான கனல்துண்டங்களாகக் கறுப்புத்திரையில் கனன்றுகொண்டிருந்தன.

மாரியம்மன் கோவில் ஒலிபெருக்கியில் பாடல் ஒலி பரவி ஊரின் செவிகளைத் தொட்டு எழுப்பத் தொடங்கியிருந்தது. மாடியறை என்பதால் தெளிவாக கணீரென்ற எல்.ஆர்.ஈஸ்வரியின் குரல் மார்கழிப் பனி போலக் காதுகளில் நுழைந்தது.

காற்றாகி கனலாகி கடலாகினாய்...
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்...

அறையின் விளக்கை ஒளிரச்செய்தேன். இரவு முழுவதும் வரைந்த படங்களால் நிறைந்திருந்தது சிமெண்ட் தரை. ஒன்றுகூட இதற்கு முன் வரைந்த வடிவங்கள் இல்லை. அனைத்தும் விசிறி இழுக்கப்பட்ட கோடு களால் ஆன புரியாத வடிவங்கள். இதற்கு முன் எங்கும் பார்த்ததில்லை. இதெல்லாம் எப்படி வரைய வருகிறது என்று தெரியவில்லை.

கீழே கிடந்த சாக்கட்டிகளில் ஒன்றை எடுத்து எஞ்சிய இடத்தில் நான்கு முறை விசிறி இழுத்தேன். தாழை மடலோ, காய்ந்த நாணல்களோ, வீச்சுக் கத்தியைப் போலவோ ஏதோ ஒன்று. வரைய வரையதான் அது என்ன வென்று தெரியும். அதற்கு மேல் கையெழவில்லை. ‘இதுவும் போச்சா?’ என்று எழுந்து சன்னலோரம் வந்து நின்றேன்.

இன்னேரம் சுப்பிரமணி வயலில் வடகிழக்கு மூலையில் வெற்றிலையில் சாணத்தில் செய்த பிள்ளையாரை அமர்த்திவிட்டு சூரியனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். நாம் சம்பாதித்த காசு பணத்தில் வயல்வரப்புகளைச் சொந்தமாக வாங்கி முதல் விதைப்பு செய்வது என்பது மூன்று நான்கு மாதங்களில் தாய் முகத்தைக் கண்டுகொள்ளும் பிள்ளையின் சிரிப்பைப் போல. மனம் இனம் தெரியாமல் பறந்துகொண்டேயிருக்கும் காலம். அவன் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு வயல் சேற்றில் சிரித்தமுகத்துடன் நின்றுகொண்டிருக்கலாம். கதவைத் திறந்து வெளியே பார்த்தேன்.

அதோ அந்த மாட்டுப்பட்டிக்கு அடுத்ததாக இருந்த புளியமரத்தில் தூக்கில் தொங்கும் அய்யாவின் கால்களை மூர்த்தி அண்ணா தாங்கிப்பிடித் திருக்கிறார். மரத்தின் கிளையில் ஏறி யாரோ கயிரை வெட்டிவிட்டதும் அவரின் முழு உடலும் மூர்த்தி அண்ணா மேல் சரிய அவர் ஊரே பதறும் அலறலுடன் கட்டிப்பிடித்துக் கொள்கிறார். தலையை ஒருபக்கமாக இறுக்கிப் பிடித்துக்கொண்டு படிகளில் இறங்கினேன்.

இருள் விலகாத முன்இரவுகளில் அய்யா சைக்கிளில் பால் கேனை வைத்துக்கட்டுவது எப்படி என்று சொல்லிக்கொடுத்தது இந்த வாசல் முற்றத்தில்தான். அந்த நாட்களில் பால்கறவை பழகுவதற்காக அய்யா பின்னால் செல்லும்போது அவர் வேகத்துக்கு சைக்கிளை மிதிக்க முடி யாது. காலையில் பறக்கும் பறவைகணக்காகச் சரியான நேரத்துக்கு நிறைந்த பால்கேனுடன் திருச்சி வண்டிக்கு போல் ஏற்றிவிட வந்துவிடுவார்.

அவர் பின்னாலேயே பறந்துவந்து முச்சாமி களத்தை அடுத்து மாட் டுப்பட்டியின் முன் சைக்கிளை நிறுத்திவிட்டு இறங்கினேன். மூச்சு வாங்கியது. பசுவின் மடிக்குக் கீழே குத்துக்காலிட்டுஅமர்ந்தேன்.

'டேய்... தஸ் புஸ்ஸூங்காத... மாடு மெரளும். பசுமாடு தொட்டாச்சிணுங்கி செடி மாதிரிடா...'

எழுந்துகொண்டேன். எத்தனை நாட்களாக இவர் பின்னால் சைக்கிளில் அலைவது என்று சலிப்பாக இருந்தது.

அவர் அந்தப் பக்கம் நின்ற ‘வெள்ளை’யில் பால் கறக்கும் சத்தம் சர் சர்ர்... என்று கேட்டது. கிழக்கே வானத்தில் பச்சை மலைக்கு மேல் சிவந்து வருகி றதா என்று பார்த்தேன். ஒரே ஒரு நட்சத்திரம் பால் சொட்டு போல முனுக்கு முனுக்கென்று கிடக்க வானம் கறுத்துக்கிடந்தது. அய்யா வேகமாகச் செருமினார். சட்டென்று திரும்பினேன்.

அவரின் காப்புகாய்த்த பெருவிரலின் மடங்கிய முட்டிக்கும், மடங்கிய ஆள்காட்டி விரலின் முட்டிக் கும் இடையில் பால்காம்பைப் பிடித்திருந்தார். இரு கைகளும் ஒரே சீராக ஏறி இறங்க, அவரின் இரண்டு கால்களுக்கும் இடையில் இடுக்கிப் பிடித்திருந்த பால் வாளியில் ராகம் போல நுரைமேல் பால் பீய்ச் சும் சத்தம் எழுகிறது.

அவ்வளவுதான் எனச் சட்டென்று கருப்பியின் மடிக்கடியில் அமர்ந்தேன். அது முன்னும் பின்னும் நகர்ந்து மறுத்தது.

'டேய்... மடப்பயலே... பிள்ளைய பயங்காட்டாதடா. நீ எந்திரி மொதல்ல...'

பல்லை கடித்தபடி எழுந்து நின்றுகொண்டேன். அங்கிருந்த வேப்பமரத்தில் ஒரு குச்சியை ஒடித்து இரண்டு காட்டு காட்டினால் ஒழுங்காக நிற்கும் என்று கருப்பியின் மீது ஆத்திரமாக வந்தது.

அய்யா பால்வாளியைக் கையில் தந்து, 'ஒரு சொட்டு சிந்தாம கேனுல ஊத்தணும்' என்றார். விவரம் தெரிந்ததிலிருந்து நாளெல்லாம் இதையே கேட்டுக் கேட்டு எரிச்சலாகிறது. வீட்டில் அம்மாவிடம், என்னிடம், சம்பளத்திற்குப் பால்கறக்கும் மூர்த்தி

அண்ணா, ரகுவிடமும் இதே பாட்டைத்தான் பாடுவார். சைக்கிள் பக்கமே நின்றுகொண்டேன்.

அவர் எழுந்து நின்று கால்களை உதறிக் கொண்டார். வெள்ளையின் முதுகில் கையூன்றி முட்டிக்கால்களைப் பிடித்து விட்டுக்கொண்டார்.

'பசுமாட்டு மடிய உங்கம்மா சுருக்குப்பையின்னு நெனச்சியா? நெனச் சதும் தொட விட்ருமா.. பயந்த சுபாவங்கறதால மெரட்டி நிக்க வைக் கலாம். பால் சுரக்கணுமே... அது ஒன்னோட விரலுக்குப் பழக ணும்டா...'

கருப்பியின் அருகில் வந்தார்.

'என்னத்தா...' என்றபடி அதன் நெற்றியைத் தடவினார். அது நாக்கை நீட்டி பனியனுடன் நின்ற அவரின் வெற்றுத் தோளை நக்கியது.

'ரெங்கா... இங்க வாடா...'

கருப்பியின் நெற்றி, முதுகு, உடல் என்று சொன் னார். அதன் வாயைப் பற்றி, முகத்தைத் தூக்கி, 'இந்தப் பய நம்ம பயதானே... எதுக்கு அடம் பிடிக்கிற...' என்று பேசியபடி கழுத்துச் சதையைப் பிடித்து ஆட்டினார்.

'பால்காரனுக்கு மாட்டுக்கிட்ட பழகத் தெரிய ணும்டா... நம்ம பிள்ளையாட்டம். உனக்கு வயசு பத்தல... ஒரு பிள்ள பெறந்தா தானா வந்திரும்...'

தண்ணீரை வாளியில் எடுத்து அதன் மடியை நன்கு கழுவினார். அதன் வயிற்றில் மெதுவாகச் செல்லத் தட்டு தட்டிவிட்டு குத்துக்காலிட்டு அமர்ந் தார். கருப்பி ஆடாமல் அசையாமல் நின்றது. விரல்களில் விளக்கெண்ணையைத் தடவிக் கொண்டார்.

'இங்க பாரு ரெங்கா... இத்தன நாள் எங்கூட வர... ஆனா பொறுப் பில்லாம விடியிற வானத் தையும்... காக்கா குருவிகளையும், மரமட் டையையும் பாத்துக்கிட்டு நிக்கற. பள்ளிக்கூட படிப்பும் ஒனக்கு ஏறல. தொழில் கத்துத்தர ஆளி



ருக்கப்ப கத்துக்க.. படம் வரையறேன்னு பொழு தன்னைக்கும் கண்ட எடத்துல கிறுக்கிக்கிட்டு பயித்தியகாரனாட்டம் திரியாத...'

வானத்திலிருந்து கண்களைத் திருப்பி அய்யா வைப் பார்த்தேன். அவர் குரல் முன்போல இல்லை. ஆள் தளர்வாக இருப்பது என்னவோ போல இருக்கிறது. காலில் விஷ முறிவு கல் வைத்துவிட்டு வந்ததி லிருந்தே இவர் பழைய ஆளாக இல்லை. இரத்தத்தில் நாள்பட்ட விஷம் என்று அந்த வைத்தியர் சொல்கிறார்.

அவர் பெருவிரலையும் ஆள்காட்டி விரலையும் மடக்கிக் காட்டினார். கைகளைக் காம்பில் வைத்த படி, 'இறுக்கிப் பிடிச்சிறப்பிடாது... உசு ருள்ள சீவன்ங்ற நெனப்பு இருக்கட்டும். ரொம்ப தளர பிடிச்சின்னாலும் வேலைக்கு ஆகாது... பால் குடிக்கிற கன்னுக்குட்டியப் பாத்தின்னா பிடிமானம் தெரிஞ்சிரும்...' என்றபடி கறந்தார். வாளிக்குள் மெல்லிய அலையடித்தலுடன் பால் நிரம்பத் தொடங்கியது. நான் பால்குடிக்கும் வெள்ளையின் கன்றைக் கொஞ்சநேரம் பார்த்துவிட்டு அய்யா விடம் திரும்பினேன்.

நிலைகொள்ளாத கருப்பி திரும்பித்திரும்பி அய்யாவின் தோள்களையும் முகத்தையும் நக்கியது.

'சரித்தா... சரித்தா...' என்று பேசியபடி எப் போதாவது மிக மெது வாக வயிற்றில் தட்டிவிட்டுக் கறந்தார்.

'கறக்குறதுக்கு முன்னாடி நமக்கு இது பிள்ளை... மடித்தொட்டு பால் கறக்குறப்ப பசுவுக்கு நாம பிள்ளை... சரியாடா..'

நான் தலைப்பாகை துண்டை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக் கொண்டேன்.

அய்யா எழுந்து வாளியைத் தந்துவிட்டு என் கண்களைப் பார்த்தபடி, 'இனிமே நீ தனியா கற வைக்குப் போலாண்டா...' என்று சொல்லிவிட்டு அடுத்த பசுவிடம் சென்றார்.

பனிக்காற்று முகத்தில் அறைந்தது. முடியை ஒதுக்கிக்கொண்டு மாடியில் இருந்து கீழே இறங் கினேன். பட்டியில் கடைசியாய் ஒற்றை மாடு நிற்கிறது. ம்மா.. ம்மா.. என்று ராவும் பொழுதும் கத்திக்கொண்டே கிடக்கிறது.

**தண்ணீரை வாளியில் எடுத்து அதன் மடியை நன்கு கழுவினார். அதன் வயிற்றில் மெதுவாகச் செல்லத் தட்டு தட்டிவிட்டு குத்துக்காலிட்டு அமர்ந்தார். கருப்பி ஆடாமல் அசையாமல் நின்றது. விரல்களில் விளக்கெண்ணையைத் தடவிக் கொண்டார்.**

'ஒத்த மாட்டுக்கு ஒரு தொணமாடு இல்லாம போயிருச்சே இந்தப் பட்டிக்கு. பதினஞ்சு இருவது மாடு கன்னுகளோட கிடந்த இந்த மாடு இப்படி ஒத்தையில தவிக்கறத பாக்கணுன்னு எந்தலையில எழுதியிருக்கே...' என்றபடி அம்மா வாசலுக்குச் சாணம் தெளித்தாள்.

வயசாகிப்போன மாடு என்று எவனும் விலை பேச வராமல் தங்கிவிட்டது. பிறந்ததிலிருந்து பட்டியில் இருக்கிற மாட்டைக் கறிக்கடைக் காரனுக்கு விற்றுவிட்டு சோறு திங்க முடியுமா? 'பால்காரன் மட்டும் மாட்டை கறிக்குன்னு வித்துறக் கூடாது' என்று சொல்லித் தான் அய்யா முதல்நாள் கறவைக்குப் புது வாளியு டன் அனுப்பினார். அன்று அய்யா நின்று அனுப்பிய இடத்தில் இன்று வீடு, வயல், பட்டி மாடுகள் என்று எல்லாவற்றையும் தொலை த்துவிட்டு நிற்கிறேன்.

ஒடுவில்லை ஓட்டத்தின் கதவு சாத்தியிருந்தது. சித்ரா படுத்திருப்பாள். இரண்டு பயல்களும் இன் னும் எழுந்திருக்கவில்லை. அவர்களுடன் படுக்க முடி யவில்லை. பொழுதணைத் தும் 'இவனைக் கட்டிக் கிட்டு வந்து சீரளியிறேன்' என்று திட்டித் தீர்க்கமுடியாத ஆத்திரத்தைப் படுத்தே தீர்க்கிறாள்.

கடனுக்காக ஐம்பது மாட்டு கறவையை மூர்த்தி அண்ணனிடமே கொடுக்கும்படி ஆகி விட்டது. அய்யா பத்து வீட்டுக் கறவைகளைக் கொடுத்துவிட்டுப் போனார். இருபத்தைந்து ஆண் டுகளாக நாற்பது வீட்டுக்கறவைகளைப் பாடுபட் டுச் சேர்க்க எத்தனை எத்தனை வெம்பாடுகள். மொத்தமாகத் தூக்கிக் கொடுத்துவிட்டு வெற்று ஆளாகி ஆறு மாதங்களாகிறது. திரும்பி தெரு வில் நடந்தேன்.

கால்கள் மெல்ல தெற்குதிசை நோக்கித் திரும்பின. ஹரிகேசர் வயலில் அரளிச் செடிகள் நிழல்கள் என அசைந்துகொண்டிருக்கின்றன. அவர்களின் குடிசாமி ஒன்று அரளிச் செடிகளுக்கு நடுவில் அமர்ந்துகொண்டு இடம் மாற்ற முடி யாமல் கிடக்கிறது என்று புலம்பிக்கொண்டிருப்பார். மற்ற வயல்களில் அரளிச்செடிகளை அழித்து விட்டார்கள்.

கோலமிட்ட வாசல்படிகளில் ஓரத்தில் அகல் விளக்குகள் அவிந்தும் கரிந்ததும் போக, நேரம் சென்று ஏற்றிய அகல்கள் மினுங்கிக்கொண்டிருந்தன.

தெற்கு முனைக்குத் திரும்பும் முன், வடக்கே திரும்பி பங்காரு அக்கா வீட்டை ஒருமுறை பார்த்தேன். அக்கா வாசல்படிகளில் குனிந்து நிற்கிறாள். இப்போதுதான் எழுந்திருந்திருப்பாள். எப்படியும் ஐம்பத்தைந்து வயதாவது இருக்கும். 'அக்கா.. வீட்டுக்கு வர சொல்லுச்சு' என்று அம்மா நேற்றே சொல்லியது.

திரும்பி அவளை நோக்கி நடந்தேன். அக லைப் பொருத்துவதற்காகத் தீக்குச்சிகளை உரசிப் போட்டுக்கொண்டிருக்கிறாள். இந்தக் குச்சி பற்றி விட்டது. அகல் ஒளியில் அவளின் வலப்பக்க முகம் தெரிகிறது. நெருங்க நெருங்க மூக்குத்தியின் வெளிச்சம் பிரகாசமாகிறது. சுற்றிலும் இருள். நான் ராசுவீட்டு வேம்பின் அடியில் நின்றுகொண்டேன்.

அக்கா வாசலில் கோலமிடத் தொடங்குகிறாள். நான் ஒன்பதாவது வகுப்புத்தேர்வை மூன்றுமுறை எழுதி தோற்றுப்போய் வீட்டில் இருந்தபோதுதான் அக்கா கல்யாணமாகி இங்கு வந்தாள்.

'ஒனக்கு தம்பிமுறைதான்...' என்று அந்த வீட்டுக்கிழவி சொன்னது. நெற்றிச்சுட்டியின் கற்கள் மின்னும் முகத்தில் கன்னத்தில் திருஷ்டிப் பொட்டுடன் திரும்பி முகத்தைப் பார்த்துச் சிரித்து 'உம்பேரு என்னடா?' என்றாள். அவர்கள் வீட்டு முற்றம் சிமெண்ட் தளமிட்டது. சாக்பீஸால் கல்கி புத்தகத்தில் வரும் படங்களை வரைவதற்காக அவர்கள் வீட்டிலேயே பழியாகக் கிடப்பேன். அவள் நான் வரைவதை அதிசயமாகப் பார்த்து மாமாவிடம் சொல்லிக்கொண்டே இருப்பாள். அவர் தலையாட்டியபடி நின்று பார்ப்பார்.

ஒருநாள் பொன்னியின் செல்வன் தொடரின் பூங்குழலியை வரைந்தேன். அக்கா சின்னப்பிள்ளை யைப் போல ஓடிச்சென்று மாமாவை இழுத்து வந்து காட்டினாள். அவர் அவள் கையை விலக்கியபடி பார்த்துக்கொண்டே இருந்தார்.

'ரெங்கா... எப்படியாச்சும் பத்தாவது பாஸ் பண்ணிடு... விசாரிச்சு ட்ராயிங் டீச்சர் ட்ரெய்னிங் சேத்துவிடுறேண்டா... இங்கக் கெடந்தா வீணா போயிருவ.'

அக்கா மாமாவை முறைத்தாள்.

'எதுக்கு இப்பிடி பாக்கற... ஆடுற காலு நிக்கா தும்பாங்க. வரையற கை இவனுக்கு.. எனக்கென னமோ பால் கறக்க அனுப்பறது சரியில்லன்னு படுது...'

ஏங்க கண்டதையும் பேசி அவன மாத்தி றாதீங்க. இந்த மாறி கிறுக்குத்தனத்தை எல்லாம் உங்களோட வச்சுக்குங்க. படிக்க முடியாத பயல தொழிலுக்குப் பழக்காம என்ன பண்றது.. எத்தன வருஷம் பரிட்சை எழுதிக்கிட்டே இருப்பான்?'

'இவன் வரையற எடத்தையெல்லாம் வெளக்க மாறு போட்டு கழுவாத பங்காரு... இந்தப் பய லயே ஈரத்துணியால துடச்சுவிடச் சொல்லு...' என்று மீண்டும் நான் வரைந்ததையே பார்த் துக்கொண்டிருந்தார்.

அப்பாயி செத்த பிறகு எங்களுக்கான வீட்டு மனைகளில் ஒன்றை எங்கள் அத்தைக்குக் கொடுக்க அம்மா சம்மதிக்கவில்லை. அந்தத் தகராறில் மாமாவுடன் மனஸ்தாபமாகியது.

'நம்ம வீட்ல பெறந்த பிள்ள... சரியான சுவா தினமில்ல. இதெல்லாம் அந்தக் கெழவியோடது தானே? அது பெத்த மவளுக்கு ஒரு மனைய சகாய விலைக்கு குடுத்தா என்ன? கொடுக்க லேன்னா பெரியாளுங்கள வச்சி பைசல்தான் பேச ணும். நம்ம சொந்த பந்தத்துக்குள்ள பேசி முடிச் சிக்கிட்டா நல்லது.'

'பொட்டப் பிள்ளைய கட்டிக்குடுத்தா எல்லாம் முடிஞ்சு போச்சு... வீட்டுமனை வேணுமோ? அடிச்சு தொரத்திவிடுங்க..' என்று ஆங்கியத்து சித்தப்பா எகிறினார்.

'இங்க பாருங்க மாமா... ஆங்கியம் அழகா புரியில பேசுற பேச்செல்லாம் இங்க வேணாம். விட்டத்துக்கு வலுவான வேலமரமின்னா... தாழ் வாரத்துக்குன்னு ஒரு நொணாமரத்து குச்சிக்கூடவா இல்லாம போயிரும்...'

'என்ன தம்பி பேச்சு மாறுது... அரசாங்க உத்தியோகம் குடுக்கிற தெகிறியமா?'

'என்ன சின்னம்மா இது? கடைசியா பெறந்தது. எனக்கு அக்கா மாதிரி. சூது தெரியாத பிள் ளைய எங்க தொரத்த சொல்றீங்க...'

மாமா அமர்ந்திருந்த மரபெஞ்சின் கீழ் அத்தை அமர்ந்திருந்தது. ஒரே நாளில் இரு மகன்களைக் கிணற்று நீரில் எமனுக்குக் கொடுத்த பதற்றம்

தீராத அத்தையின் கண்களை வரைந்து பார்க்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். அனைவரும் அமைதியாக இருந்தார்கள்.

'எல்லாரும் பேசறாங்க... உங்க தங்கச்சிதானே மாமா. வாயத்தெறக்காம நிக்கிறீங்க...' என்று அய்யாவிடம் திரும்பினார். அய்யா அம்மாவின் முறைப்பைத் தவிர்த்தபடி தலையாட்டினார்.

'சகாய வெல போட்டு காச வாங்கிக்குங்க...' என்று சட்டென்று முடித்தார். யாரும் அதற்குமேல் பேச முடியவில்லை. குடும்பங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லாமல் ஆனது. மாமா ஒருநாள் சாயங்காலமாகத் தெற்குப்பக்க கிணற்றில் குளித்து விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தார். செங்கமலம் கொட்டாயிலிருந்த நான் அவரைக் கவனிக்கவில்லை.

மாமா வந்த வேகத்தில் என் முடியைப் பிடித்து இழுத்து வரப்பில் போட்டு அருகிலிருந்த புங்கங் குச்சியை ஒடித்து விளாசினார்.

'வயசுப்பயலுக்கு குடிக்கக் குடுத்து பழக்கறதெல்லாம் உன்னோட வம்சதுக்கே பழிம்மா..' என்று செங்கமலத்திடம் சொல்லிவிட்டு என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தார். மாமாவின் கலங்கிய முகம் இப்போதும் குடிக்கும் போதெல்லாம் கண்ணில் வந்து தொலைக்கிறது.

என் கல்யாணத்திற்குப் பத்திரிகை வைத்து மாமாவுடன் சேர்ந்துகொள்ளலாம் என்று நினைத்த அய்யாவை அம்மா விடவில்லை. அக்கா தண்ணியெடுக்க வரும் வழியில் காத்திருந்து கல்யாணத்திற்கு வரச்சொன்னேன்.

'நீங்க வேற பத்திரிகை வைக்கலை... எங்க ஆட்ல அத்தன பேரும் கொதிச்சுப் போயி கிடக்குங்க... பொண்ணு எப்பிடியிருக்கா? ஒனக்கு பொண்ணு பாக்கறதுக்கு வரணுன்னு எத்தன கனவு கண்டிருப்பேன்...' என்று அழுதது.

கொஞ்சம் நேரம் சென்று, 'முடியெல்லாம் ஒட்ட வெட்டாத... உங்க மாமனாட்டம் வுட்டு வெட்டுடா... கிறுதா வச்சாதான் நல்லாருக்கும். மொழுக்குன்னு வழிச்சிட்டு போய் நிக்காத.. உங்க மாமனப்பாரு கமலஹாசனாட்டம்...' என்று சிரித்தது.

கல்யாணத்தன்று அக்கா காலையிலேயே குளித்துவிட்டு, பழைய சீலையைக் கட்டிக் கொண்டு, வீட்டு வேலையெல்லாம் முடித்துவிட்டு, முற்றத்தில் உட்கார்ந்திருந்ததாம்.

'எதுக்கு மூஞ்சிய தூக்கி வச்சிருக்க? பத்திரிக்கை வைக்காம எப்படி கல்யாணத்துக்கு போறது...'

'நீங்க வரவேணாம். நாம் போறேன்... தண்ணியெடுக்க போறப்ப ரெங்கா என்னைய கூப்பிட்டான்...'

'இதென்ன சின்னப்பிள்ளைத்தனமா இருக்கு...' என்று கிழவி ஆத்திரப்பட்டது.

'பங்காருக்கு, ரெங்கா பெறந்தவீட்டு சொந்தமா... நம்ம சொந்தந்தானே? அறியாத மனசுக்கு பாசந்தான் பெரிசு. ரோசம் பெருசுன்னா நம்ம போக வேணாம். பங்காரு போறதுன்னா போகட்டும்...' என்று மாமா அக்காவிடம் மொய்ப்பணம் கொடுத்தனுப்பினார் என்று அக்கா சொன்னது.

அக்காவின் கோலத்தைப் பார்த்தபடி வந்து நின்றேன். வளைவு நெளிவில்லாது நேர்க்கோடுகளாக இழுத்து வைத்திருந்தது.

'என்னடா ரெங்கா... இந்த நேரமே... கோலத்தைப் பாத்துதானே சிரிக்கிற? இந்த ஊருக்கு இது போதும். எங்க ஊர்ல எவ்வளவு பெரிய வாசல் தெரியுமா?'

'கறவைக்கு எந்திருச்சு பழகின பழக்கம். தூக்கம் வரமாட்டுதுக்கா...'

'ம்... எங்கியோ தெசமாறி போயி வீடு, வாச, வயவஞ்சி எல்லாத்தையும் தொலச்சிட்டு நிக்கிறியே...'

'....'

'செல்போனுல சீட்டு விளையாட்டுன்னு உங்கம்மா சொல்லுது. பங்குவியாபாரன்னு எம்மவன் சொல்றான்,'

'...'

'நாஞ்சொல்றத கேளு... இதுவும் உங்க மாமா தான் சொன்னாங்க.'

'என்ன சொன்னாரு...'

'நேத்து ராத்திரி ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந்தோம்... பகல்ல ஆட்டுக்கு வரலாமின்னு இருந்தேன். ஒருமாசமா ராத்திரியானா இதையே பேசிப்பேசி மனசழிஞ்சு போவுதுடா. வீட்டை காலி பண்ணனுமாமே?'

'ம்...'

'நாங்க சொன்னா உங்க அத்தை கேக்கும். அந்த மனையில பாதி சும்மாதானே கெடக்கு? ஒரு தகர கொட்டாயி போட்டு இருந்துக்குங்க... மூர்த்திக்கிட்ட பேசி சம்பளத்துக்கு கறக்க ஏற்பாடு பண்ணிக்கலாமா?' என்று என் கன்னத்தில் கைவைத்துக் கேட்டாள். அவள் இப்படிச் செய்தால் ஆணையிடுகிறாள் என்று சொல்லாமல் சொல்வது.

நான் அவளையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

'துறையூர்லருந்து படம் வரையறதுக்கு ஒரு பலகைய எம்மவனுக்கு வாங்கியாந்து வச்சேன். அவனுக்கு கை வளைஞ்சாதானே? அதைக் கொண்டுபோய் உங்க அத்தை வீட்ல வைக்கச் சொல்றேன்... சரியா? எனக்கு கண்ணு பாக்க நீ வேணுண்டா,' என்று கழுத்தை வேறு பக்கம் திருப்பி நெஞ்சில் கிடந்த சேலையை இறுக்கிப் பிடித்துக்கொண்டது.

ஆட்டுக்காரர்கள் வீட்டுச் சினையான பசுக்கள் வீட்டுப்பட்டியிலிருந்து வயலுக்கு சென்றுகொண்டிருந்தன. மிக மெல்ல நடந்துவந்த கபிலநிறப் பசு என் பக்கம் வந்து மூச்சு வாங்க நின்றது. என் கை அனிச்சையாக அதன் முதுகைத் தடவியது. உருண்டு விரிந்த அதன் கண்மணியில் அகலின் ஒளி மினுமினுத்தது. சாணமிட்டுவிட்டு மெதுவாக நகர்ந்தது.

அக்கா சிரித்த முகத்துடன் சாணத்தை எடுத்து வீட்டின் ஓரமாக வைத்தாள்.

'இனிமே நல்லாருப்படா...'

ஆட்டுகார மாமா 'ஆமாம்' என்பது போலத் தலையாட்டிவிட்டு பசுவின் முதுகில் தட்டி ஓட்டினார். நான் பசு நடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

# எப்போதாவது ...

தோல்வியில் முடிந்தது. ஹெர்ட் சாட்சியம் சொல்லும்போது டெப் தனது முன்னாள் காதலி கேட் மோஸைப் படிகளில் இருந்து தள்ளிவிட்டார் என்றும் இந்தச் சம்பவத்தைக் கேட் தன்னிடம் விவரித்திருக்கிறார் என்றும் கூறினார். டெப் தரப்பில் அழைத்து வரப்படவிருந்த சாட்சிகளின் பட்டியலில் கேட் மோஸின் பெயரே இல்லை. (கேட் பெயரை ஹெர்ட் உச்சரித்ததும் டெப்பின் வக்கீல் மகிழ்ச்சியடைவதைப் பார்க்கலாம். இன்னொரு ஆதரவுக் கரம்!). இப்போது வாய்தவறி ஹெர்ட் உளறிவிட்டதால் கேட் மோஸைப் புதிய சாட்சியாகக் கூட்டி வந்தார்கள். வந்தவர், அப்படியொரு நிகழ்வு நடக்கவே இல்லை எனக் கைவிரித்துவிட்டார். இதைச் சாக்காக வைத்து ஹெர்டின் கடந்த கால அத்துமீறல்களையும் அவர் பங்கெடுத்த வன்முறைச் சம்பவங்களையும் டெப் வக்கீல் குழு அடுக்கடுக்காக நீதிமன்றத்தில் நிறுவியது. சொந்த செலவில் சூனியம் வைத்துக்கொண்ட மாதிரியாகிவிட்டது.

7. உளவியல் நிபுணர்களின் துணையுடன் ஹெர்டின் சமநிலைக் குலைவுக்கான காரணங்களையும் மனநல பாதிப்புகளையும் டெப் தரப்பில் விரிவாக எடுத்துரைத்தனர்.

8. டெப்புக்கும் தனக்குமான விவாகரத்தின் முடிவில் கிடைக்கும் ஜீவனாம்சத்தைக் குழந்தைகள் மருத்துவமனைக்கு அப்படியே கொடுத்து விடப் போவதாகச் சில ஆண்டுகளுக்கு முன் ஹெர்ட் பீற்றியிருந்தார். முன்னாள் கணவனின் பணம் தனக்கு வேண்டாம், நற்காரியத்துக்காகப் பயன்படும் என்கிற ஒரே காரணத்திற்காகப் பணத்தைப் பெறுகிறேன், சொந்தக் காலில் நெஞ்சை நிமிர்த்தி நிற்பவள் (மணமுறிவின் போது சமந்தா சொன்ன அதே வார்த்தைகள்) என்பது அவர் அளித்த பேட்டியின் சாராம்சம். ஆனால், பதினான்கு மில்லியன் டொலர்களை ஜீவனாம்சமாக வாங்கியதோடல்லாமல் அதற்கான வரியையும் டெப்பே கட்டவேண்டும், அப்போதுதான் மணமுறிவுக்குச் சம்மதிப்பேன் என ஹெர்ட் நிர்பந்தித்ததை டெப்பின் நிதித் தணிக்கையாளர் வெளிப்படுத்தி ஹெர்டின் குட்டை உடைத்து விட்டார். அது தொடர்பான ஆவணங்களையும் சமர்ப்பித்தார். (இன்றுவரை அதிலிருந்து ஒரு பைசாவைக்கூட குழந்தைகள் மருத்துவமனைக்கு ஹெர்ட் வழங்கவில்லை.) இந்த விஷயத்தில் நாம் டெப்பின் 'ஜென்டில்மேன்' தனத்தைக் கவனிக்க வேண்டும். ஊரெல்லாம் பொய் சொல்லியும் அவதூறுகளைப் பரப்பியும் தன்னை நற்பண்பாளராக முன் வைத்த ஹெர்டை அவர் காட்டிக் கொடுக்கவே இல்லை. இந்த வழக்கு நடைபெற்றிருக்காவிட்டால் கடைசி வரை அமைதியாகவே அவர் இதைக் கடந்திருக்கக்கூடும்.


9. தி சன் பத்திரிகை மீது டெப் தொடர்ந்த அவதூறு வழக்கு (அந்தப் பத்திரிகையில்தான் டெப்பை "மனைவியை அடிப்பவன்"-ஆகச் சித்தரிக்கும் கட்டுரையை ஹெர்ட் எழுதியிருந்தார்) லண்டனில் நடைபெற்றது. அது டெப்புக்குச் சாதகமாக முடியாததற்குக் காரணம் அந்நாட்டின் சட்ட வரம்புகள் சில முக்கியமான சான்றுகளைச் சமர்ப்பிக்க டெப்புக்கு அனுமதி வழங்காததே எனச் சொன்னார்கள். இப்போது இத்தீர்ப்பின் மூலம் அக்கூற்றில் உண்மையிருப்பது புலனாகிறது.



இவ்வழக்கு ஒளிபரப்பானபோது மிகவும் நொந்தது பெண்ணிய வாதிகள் தரப்புதான். இப்படியா அம்பலப்படுவார் எனப் பதறியது. வழக்கு நடைபெறும்போதே தீர்ப்புகளை எழுதலாமா என வக்காலத்து வாங்க முயன்றது. ஏனெனில் பெண்கள் கைக்கொள்கிற தந்திரோபாயங்களின், அரங்கேற்றுகிற நாடகங்களின், வெளிப்படுத்துகிற பாசாங்குகளின், நீலிக்கண்ணீரின், திறம்படப் பயன்படுத்துகிற அடிமட்ட உத்திகளின் முழு வடிவமாகவே ஹெர்ட் செயல்பட்டார். அதை உலகம் பார்த்து நகைத்துக்கொண்டிருந்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், ஆண்களைக் காட்டிலும் மேலதிக எண்ணிக்கையில் பெண்களே ஹெர்டுக்கு எதிராகக் களமாடினார்கள். அதற்கு டெப் மீதான மனமயக்கம் காரணமல்ல. இன்னொரு பெண்ணின் சாதுர்யங்களை அவர்கள் உள்ளூர அறிவார்கள் என்பதுதான்.

இந்தத் தீர்ப்பு வெளியான பிறகும் பெண்களின் பிரதிநிதியாகவும் பாதிக்கப்பட்டவர்களின் ஒட்டுமொத்த முகமாகவும் தன்னை முன்னிறுத்துவதை ஹெர்ட் மாற்றிக் கொள்ளவில்லை. இத்தீர்ப்பினால் வீட்டு வன்முறை வழக்குகளில் பெண்களின் தரப்புக்குப் பின்னடைவு ஏற்படும் என்பதை உணர்ந்து வருத்தம் தெரிவித்திருக்கிறார். அவரது அகந்தையாலும் குணக்கேட்டினாலும் விளைந்த ஊறு. என்ன செய்வது, எப்போதேனும் ஆண்களையும் இவ்வுலகம் நம்பும் என்பதை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. ■

# சிறுநீரகக் கல்: தவிர்ப்பது எப்படி?



கணேசன்

முது கில், விலா எலும்புகளுக்குக் கீழ் திடீரெனக் கடுமையாக வலி உண்டாகி, முன் வயிற்றுக்குப் பரவும். சிறுநீரகக் குழாயில் கல் இருந்தால், அடிவயிற்றில் வலி தோன்றி, பிறப் புறுப்புக்குப் பரவும்.

தமிழர் பகுதிகளில் இது கடும் கோடை காலம். வெப்பம் ஏறுமுகத்தில் உள்ளது. அனல்காற்று முகத்திலடிக்கிறது. வெயில் கால நோய்களுள் சிறுநீரகக் கல் தொல்லை முக்கியமானது. 'உடலின் துப்புரவுத் தொழிலாளி' என்று அழைக்கப்படும் சிறுநீரகத்திலும், அதனுடன் அமைந் துள்ள சிறுநீரகக் குழாய், சிறுநீர்ப்பை, சிறுநீர்க் குழாய் ஆகியவற்றிலும் சிறுநீரகக் கல் உருவாவது வழக்கம். பிற பருவ காலங்களுடன் ஒப்பிடும் போது கோடைக் காலத்தில் இதன் தொல்லை அதிகம். அதேவேளை யில், கொஞ்சம் மனது வைத்து நம் உணவுமுறையை சரி செய்துகொண் டால், அந்தத் தொல்லைகளைக் குறைத்துக்கொள்ளவும் முடியும். அதற்கான ஆலோசனைகளையே இப்போது நாம் பார்க்கப் போகிறோம்.

சிறுநீரகக் கல் என்பது எது?

நாம் குடிக்கிற தண்ணீரிலும் சாப் பிடும் உணவிலும் கால்சியம், பாஸ் பேட், ஆக்சலேட், யூரியா என்று பல தாது உப்புகள் உள்ளன. பொது வாக, உணவு செரிமானமான பிறகு இவை எல்லாமே சிறுநீரில் வெளியே றிவிடும். சமயங்களில், இவற்றின் அளவுகள் குருதியில் அதிகமாகும் போது, சிறுநீரில் வெளியேறுவதற்குச் சிரமப்படும். அப்போது சிறுநீரகம், சிறுநீரகக் குழாய், சிறுநீர்ப்பை ஆகிய இடங்களில் இந்த உப்புகள் படிகம்போல் படிந்து, கல் போலத் திரளும். சிறு கடுகு அளவில் தொடங்கி பெரிய நெல்லிக்காய் அளவுக்கு வளர்ந்துவிடும். இதுதான் சிறுநீரகக் கல். இது யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். வழக கத்தில் பெண்களைவிட ஆண்க ளுக்கே இது அதிக அளவில் தோன் றுகிறது.

**காரணம் என்ன?**

சிறுநீரகக் கல் தோன்றுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒரு கார ணம் இருக்கும். குறிப்பிட்டுச் சொல்வதானால், அதிகமாக வெயிலில் அலைவது / வேலை பார்ப்பது, போதுமான அளவு தண்ணீர் குடிக்காதது, உடலில் ஏற்படும் நீர்வறட்சி, தவறான உணவுமுறைகள், உப்பு, உறை ப்பு மிகுந்த உணவுகளை அடிக் கடிச் சாப்பிடுவது, சிறுநீரகப் பாதையில் நோய் தொற்றுவது, உணவிலும் குடிநீரிலும் கால் சியம், குளோரைடு மிகுதியாக இருப்பது, சிறுநீர் கழிப்பதைத் தள்ளிப்போடுவது, பராதை ராய்டு ஹார்மோன் மிகையாகச் சுரப்பது, புராஸ்டேட் சுரப்பி வீக்கம், உடற்பருமன், பரம் பரை போன்றவை சிறுநீரகக் கல் உருவாவதற்கான வாய் ப்பை அதிகப்படுத்துகின்றன.

**கற்கள் என்ன செய்யும்?**

விருந்துக்கு வந்த இடத் திலேயே திருடின கதையாக, சிறுநீரகப் பாதையில் உருவாகிற கல் முதலில் சிறுநீர் ஓட்டத்தைத் தடை செய்யும். இதன் விளைவாக, சிறு நீரகத்திலோ, சிறுநீர்ப் பையிலோ சிறுநீர் தேங்கும். இது சிறுநீரகத்துக்குப் பின்னமுத்தத்தைக் கொடுக்கும்.

**அறிகுறிகள் என்ன?**

சிறுநீரகத்தில் கல் இருந்தால் தொடக் கத்தில் எந்த அறிகுறியும் தோன்றாது. கல் நகரும்போதும், சிறுநீரகக் குழாயில் அடைப்பை ஏற்படுத்தும் போதும்தான் வலி உண்டாகும். முது கில், விலா எலும்புகளுக்குக் கீழ் திடீரெனக் கடுமையாக வலி உண் டாகி, முன் வயிற்றுக்குப் பரவும். சிறுநீரகக் குழாயில் கல் இருந்தால், அடிவயிற்றில் வலி தோன்றி, பிறப் புறுப்புக்குப் பரவும். சிறுநீர்ப்பையில் கல் இருந்தால், தொப்புளுக்குக்கீழ் வலி துவங்கி, சிறுநீர் வெளியேறுகின்ற புறவழித் துவாரம்வரை பரவும். இத்துடன், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் என்கிற உணர்வு ஏற்படும். சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், வலி, ரத்தம் கலந்து வருதல், குமட் டல், வாந்தி போன்ற அறிகுறிகளும் சேர்ந்துகொள்ளலாம்.

**பரிசோதனைகள்**

சிறுநீரகக் கல்லைக் கண்டறிய வயிற்றை அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், சி.டி.ஸ்கேன் பரிசோதனைகளைச் செய்துகொண்டால் போதும். சிலருக்கு ஐவிபி (Intra Venous Pyelogram) எனும் பரிசோதனை தேவைப்படும். கல் எந்த இடத்தில் உள்ளது, அதன் அளவு என்ன, எந்த வகையான கல், சிறுநீரகம் பாதிக்கப் படுள்ளதா எனப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியும். இதைக் கொண்டு கல்லுக்கு என்ன மாதிரி யான சிகிச்சை அளிக்கலாம் என் பதையும் முடிவு செய்துவிடலாம்.

**சிறுநீரகக் கல்லின் வகைகள்!**


கால்சியம் கற்கள், யூரிக் ஆசிட் கற்கள், சிஸ்டின் கற்கள், ஸ்டுரு வைட் கற்கள் என சிறுநீரகக் கற்கள் நான்கு வகைப்படும். இவற்றில் கால்சியம் கற்கள்தான் பெரும்பாலோ ருக்கு இருக்கும். இவை கால்சியம் ஆக்சலேட் மற்றும் கால்சியம் பாஸ் பேட் எனும் வேதியமைப்பில் இருக்கும். ஆக்சலேட் என்பது பசலைக்கீரை, முட்டைக்கோஸ், அவரை, தக்காளி, கோதுமை, முந் திரிப்பருப்பு, மீன், இறைச்சி, சாக் லேட் போன்ற பல உணவுகளில் அதிகமுள்ளது. இது தவிர நம் கல்லீரலும் ஆக்சலேட்டை உற்பத்தி செய்கிறது. சில உணவுகள் வளர் சிதை மாற்றம் அடையும்போது தோன் றும் பிரச்னைகளாலும் ஆக்சலேட் அளவு குருதியில் அதிகரிக்கும். அப் போது கால்சியம் ஆக்சலேட் கற்கள் உருவாகின்றன.

பாஸ்பேட் தாது முழுப் பயறுகள், எண்ணெய் வித்துகள், கொட்டைகள், காரட், பால் போன்ற பொருள்களில் உள்ளது. கீல் வாதப் பிரச்சினை உள்ளவர்களுக்கு யூரிக் ஆசிட் கற் கள் உருவாகின்றன. மேலும் புரதச் சத்து அதிமுள்ள உணவுகளையும் இறைச்சி உணவுகளையும் அதிக அளவில் சாப்பிடுவோருக்கு இவ் வகைக் கற்கள் ஏற்படுவதுண்டு. சிஸ் டின் கற்கள் பரம்பரை வழியாக வரு வது. இவர்களுடைய சிறுநீரகங்கள் சிஸ்டின் எனும் அமினோ அமி லத்தைச் சிறுநீரில் ஒழுகவிடும். அப்போது அது சிறுநீரகப் பாதையில் படிகங்களாகப் படிந்து கற்களாக உருவாகிவிடும். ஸ்டுருவைட் கற் கள், சிறுநீரகத்தில் அடிக்கடி நோய்த் தொற்று ஏற்படுபவதன் காரணமாக தோன்றுகின்றன.

இங்கு கற்களின் வகைகளைப் பற்றி பேசுவதற்குக் காரணம், ஒரு முறை கல் உருவாகி, சிகிச்சை பெற்று சரியானவர்களுக்கும் மீண்டும் மீண்டும் கல் உருவாவதற்கு 50% வாய்ப்பு உள்ளது. எனவே, ஒருமுறை அகற்றிய கல்லின் வகை அறிந்து, அது உருவாகத் துணைபுரியும் உண வுகளைத் தவிர்த்துக் கொண்டால் மீண்டும் கல் ஏற்படுவதைத் தடுக்க உதவும்.

**சிகிச்சைமுறைகள்**

சுமார் 5 மி.மீ. வரை அளவுள்ள கற்களை சரியான உணவு, போது மான தண்ணீர் குடிப்பது, மருந்து, மாத்திரைகள் மூலமே கரைத்து விடலாம். 1.5 செ.மீ. வரை அள வுள்ள கற்களை எந்தவித அறுவைச் சிகிச்சையும் இல்லாமல், 'ஷாக் வேவ் லித்தோட்ரிப்ஸி' எனும் முறை யில் வெளியிலிருந்தே ஒலி அலை களைச் செலுத்தி, கல்லின்மீது அதி ர்வை ஏற்படுத்தி உடைத்துவிடலாம். சிறுநீரகக் குழாய், சிறுநீர்ப்பை, சிறு நீர்க் குழாய் ஆகியவற்றில் உள்ள கற்களை 'யூரிட்ரோஸ்கோப்பி' எனும் முறையில் வளையும் தன் மையுள்ள குழாய்போன்ற ஒரு கருவியை சிறுநீர்ப்புறவழி வழியாக உள்ளே செலுத்தி கற்களை நசுக்கியும் லேசர் கொண்டு உடைத்தும் எடுத்து விடலாம். ஆனால், சிறுநீரகத்தில் உள்ள கற்களை இந்த முறையில் எடுக்க முடியாது. 2 செ.மீ.க்கும்






## சிறுநீரகக் கல்...

அதிகமான அளவில் உள்ள கற்களை 'நெப்ரோ லித் தாட்டமி' எனும் முறையில் முதுகில் சிறிய துளைபோட்டு அறுவைச் சிகிச்சை செய்து அகற்றிவிடலாம்.

என்றாலும், மீண்டும் கல் உருவாவதைத் தடுக்க கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது மிக அவசியம்.

**வெயிலில் அலையாதீர்கள்!**

பெரும்பாலும் வெயிலில் அலையும்போதும் வேலை செய்யும்போதும் உடலில் வெயில் தோற்றுவிக்கும் நீர் வறட்சிதான் சிறுநீரகக் கற்கள் உருவாகத் துணைபுரிகிறது. எனவே, கோடையில் 2 மணிநேரத்திற்கு மேல் தொடர்ந்து வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பகல் 12 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது. அவசியம் செல்ல வேண்டுமென்றால் குடையை எடுத்துச் செல்லுங்கள். முடிந்தவரை நிழலில் செல்வது நல்லது. வெயிலில் அதிக நேரம் பயணிக்க வேண்டியதிருந்தால், கண்களுக்கு 'சன் கிளாஸ்' அணிந்துகொள்ளலாம்.

**நிறைய தண்ணீர் அருந்துங்கள்!**

வெப்பப் பிரதேசமான நம் நாட்டில் தினமும் மூன்றிலிருந்து ஐந்து லிட்டர் வரை தண்ணீர் குடிப்பது அவசியம். ( சிறுநீரகப் பாதிப்பு உள்ளவர்களுக்கு இந்த ஆலோசனை பொருந்தாது. இவர்கள் மருத்துவர் பரிந்துரைக்கும் அளவுக்குத் தண்ணீர் குடித்தால் போதும்). பாட்டில் மற்றும் பாக்கெட் தண்ணீரைவிட கொதிக்கக் காய்ச்சி ஆற வைத்த தண்ணீர்தான் சுகாதாரமானது. அதிக அளவில் திரவ உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதிக அளவில் நீர் அருந்துவதும் திரவ உணவுகளை அதிகப்படுத்துவதும் சிறுநீரகக் கல்லை வெளியேற்றும் இயற்கையான செயல்பாட்டை ஊக்குவிக்கின்றன. இதன் மூலம் சிறுநீரகக் கற்கள் சுலபமாகக் கரைந்து வெளியேற வாய்ப்புகள் அதிகம்.

**உப்பைக் குறைக்கவும்!**

உணவில் உப்பைக் குறைக்கவேண்டும். ஒருவருக்கு தினமும் 2.5 கிராம் உப்புபோதும். சமையல் உப்பு என்பது வேதிப்பண்பின்படி சோடியம் குளோரைடு. சோடியம் அதிகமானால், அது சிறுநீரில் கால்சியத்தை அதிக அளவில் வெளியேற்றும். அப்போது கால்சியமானது ஆக்சலேட், பாஸ்பேட்டுடன் சேர்ந்து சிறுநீரகக் கற்களை உருவாக்கும். இதைத் தவிர்க்கவே உப்பைக் குறைக்க வேண்டும் என்று சொல்கிறோம். தவிர, பதப்படுத்தப்பட்ட உணவுகள், விரைவு உணவுகள், பேக்கிங் சோடா கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகள் போன்றவற்றில் உப்பு அதிகமாக இருக்கும். ஆகவே, இவற்றைத் தவிர்ப்பதும் நல்லது.

**எந்த உணவைச் சாப்பிடவேண்டும்?**

சிறுநீரகக் கல் வந்துவிட்டால் திரவ உணவுகளான இளநீர், சிட்ரஸ் பழச்சாறுகள், வாழைத்தண்டுச் சாறு, பார்லி தண்ணீர், நீர்மோர் போன்றவற்றை அதிக அளவில் அருந்த வேண்டும். நார்ச்சத்து மிகுந்த கம்பு, சோளம், குதிரைவாலி, தினை, சாமை போன்ற சிறுதானிய உணவுகளை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஆரஞ்சு, எலுமிச்சை, கொய்யா, பேரீச்சை, இலந்தைப்பழம், சீத்தாப்பழம், வெள்ளரிக்காய், தர்ப்பூசணி, கிர்ணி, அன்னாசி போன்ற பழங்களையும், சுரைக்காய், பூசணிக்காய், பீர்க்கங்காய், போன்ற நீர்ச்சத்துள்ள காய்கறிகளையும் அதிக அளவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவை சிறுநீரின் அமிலத்தன்மையை குறைத்துவிடும். சிறுநீர்க் கழிப்பை அதிகப்படுத்தும். அப்போது சிறிய அளவில் உள்ள கற்கள் கரைந்து வெளியேறிவிடும். அடுத்து, கல் உருவாவதும் தடுக்கப்படும். கீரைகளில் முடக்கத்தான் கீரையில் மட்டுமே கால்சியம் இல்லை. இதை உணவாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**எதை சாப்பிடக் கூடாது?**

கோப்பி, தேநீர், சோடா போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. கோக் பானங்கள், இதர மென்பானங்கள், ஐஸ் கிரீம், சொக்லேட் ஆகவே ஆகாது. காரணம் இவற்றில் பாஸ்பேட் மிகுந்துள்ளது. இதுபோல் உலர் பழங்கள், பாதாம்பருப்பு, வாதாம்பருப்பு, முந்திரிப்பருப்பு, பீட்ரூட், சோயா பீன்ஸ், சேனைக்கிழங்கு, பசலைக் கீரையைச் சாப்பிடவேண்டாம். இவற்றில் ஆக்சலேட் மிகுந்துள்ளது. உணவில் காரம், புளி, மசாலாவைக் குறைத்துக்கொள்ள வேண்டும். கேழ்வரகு, கீரைகள், கருணைக்கிழங்கு, வெள்ளைப்பூண்டு, முள்ளங்கி, மீன், இறால், நண்டு, முட்டையின் வெள்ளைக்கரு, பால் மற்றும் பாலில் தயாரிக்கப்பட்ட உணவுகளான தயிர், வெண்ணெய், நெய், பாலாடைக்கட்டி, பால்கோவா, பால் அல்வா போன்ற உணவுகளைத் தவிருங்கள். இவற்றில் கால்சியம் அதிகம். இதுபோல், கால்சியம் மாத்திரைகளையும் சாப்பிடக்கூடாது. ஆட்டு இறைச்சி வேண்டவே வேண்டாம். இதில் உள்ள புரதமானது குருதியில் யூரிக் அமிலத்தை அதிகப்படுத்தும். சிட்ரேட் அளவைக் குறைக்கும். இந்த இரண்டுமே சிறுநீரகக் கற்களை உருவாக்கும். எனவேதான் இந்த எச்சரிக்கை!

ஐயங்கொண்டான் சுவாமிகள்

61

# எமையறிதல்

வியாபாரமோ தொழிலோ போட்டிகள் நிறைந்தது. போட்டியென்பது தவிர்க்கப்பட முடியாதது. போட்டி என்று வருகின்றபோது விளம்பரம் வாடிக்கையாளரை ஈர்த்தல் என்கிறதான செயலொழுங்கு புகுந்துகொள்கிறது. இது எண்ணங்களை ஒரு திசைக்குக் குவித்து சுற்றயல் விடயங்களை அறியவோ செயற்படவோ இடையூறாகவே இருந்துவிடுகிறது. எண்ணக்குவிவு என்கிற விடயம் கை நழுவும்போது மனம் அலைவுறத் தொடங்குகிறது.


சேவை என்று பெயரெடுப்பதற்காக நாமெடுக்கின்ற முயற்சிகளுக்கான பெறுதி எனக்கோ பிறருக்கோ பயனற்றும் இருந்திருக்கலாம் என்பது சாத்தியமானதே என்பது கவனத்திற்குரியது. ஆனால் நாம் எம்மைத் தொலைத்துவிடுவது எம்மையறியாமலேயே நடந்துவிடுகிறது. சத்தமில்லாமல் எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராது பொதுவிடயங்களில் ஈடுபாடுகாட்டிச் செயற்படுகின்றவர்கள் எம் மத்தியில் இல்லாமலில்லை. ஆனால் சொற்பமே.

சேவையென்கிற சுட்டியுடன் அதிகளவு வியாபாரமே நடக்கிறதென்கிற யதார்த்தம் கசப்பானதுதான். ஏற்றுக்கொள்வதற்குக் கடினமானதுதான். ஆனால் யதார்த்தம் அதுவாகவே இருக்கிறது. வியாபாரத் திற்கான அத்தனை இயல்புகளோடும் சூழ்ந்திருந்து அதிகாரம் செய்து ஒரு கட்டத்தில் கைவிட்டும் விடுகிறது என்பது கவனிக்கத்தக்கது. எமது எண்ணச் சிதறலே அதற்கான காரணமாகிறது.

பெயர் புகழ் என அலைவுறத் தொடங்கும்போது செயலின் மீதான கவனம் கலைவதே காரணம். எமக்கான பெரைப் பெறுதல் என்பதற்காகவே மேலதிக உழைப்பொன்று அவசியப்படுகிறது. இது பிறரின் மீது சார்ந்திருக்கவும் சரணாகதியடையவும் வழிசெய்துவிடுகிறது. அதேபோல பிறரில் சவாரி செய்யவும் தூண்டுகிறது. சேவையெனப் பெயரிடப்பட்ட விடயம் சுயநலமாக உருக்கொள்கிறது. பிறரை காழ்ப்புடனும் எரிச்சலுடனும் பார்க்கும் மனோநிலை உருவாகிக்கொள்கிறது.

பிறரை காழ்ப்புடன் நொக்குதல் என்பது அதீதமான நடிப்பையும் கோருகிறது. அந்த நடிப்பானது பொய்ப் புனைவுகள் வழி உருவாகிறது. நடித்தல் என்பது எப்போதும் சுயஉருவை மறைத்துவிடக்கூடிய வலுவான ஒன்றல்ல. நிலையற்றது என்பதுடன் எப்போதும் சுயஉருவத்தை வெளிப்படுத்தியும் விடக்கூடியது. இவ்வாறான நிலைமையில் நடிக்கின்ற ஒருவன் தன் சுயம் வெளிப்படாதிருக்க கடினமாக உழைத்தேயாகவேண்டும் என்கிறதொரு நெருக்கடியேற்படுகிறது.

இவ்வாறான நெருக்கடியானது தன்னையே தன் மீதும் தன்செயல்கள் மீதும் ஐயங்கொள்ளவும் அச்சமுறவும் செய்கிறது. இப்போது அதீத பயமானது வியாபகங் கொண்டு ஆட்டத் தொடங்குகிறது. பெயர் பெறல் என்கிற விடயம் தானாகவே பெரைப் பறிக்கிற அல்லது அழிக்கிற ஒன்றாக உருவெடுக்கிறது. அல்லது




அவ்வாறாக எண்ணவாவது தூண்டுகிறது. இவ்விடயமானது உணரமுடிகிற காலம் என்பது எப்போதுமே காலங்கடந்தே கிட்டுகிறது. முனம் அல்லாடி அலைவுறுவது தவிர்க்கவே முடியாததாகிறது.

உதவியென்று வருவோரை மதிப்பீடு செய்து அவர்களது நிலையிலிருந்து மீட்பதுடன் நின்றுவிடாது அவ்வாறான இக்கட்டு நிலை மீளவும் உருவாகாத வகையில் ஏதாயினும் செய்யலாம். அவ்வாறு செய்ததை கொண்டாட முற்படுவதும் உதவி பெற்றவரை தொடர்ந்தும் எம்மை நம்பியிருக்கச் செய்வதும்தான் தவிர்க்கப்பட வேண்டியன. உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும் என்கிற நம்பிக்கையுள்ள ஒரு கூட்டமும் செய்கிற உதவிகள் வழி இலாமீட்டும் ஒரு கூட்டமும் ஒன்றில் மற்றொன்று தங்கியிருக்கும் ஒரு சூழலே உருவாகியிருப்பதுதான் தற்போதைய யதார்த்தம்.

கிடைக்குமென்று நம்பியிருந்தவை கிடைக்காதபோது எழுகிற மன ஆதங்கம் கொடுப்போனையும் பெறுவோனையும் உளரீதியாக பாதிக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியமானது. இவ்வாறாகத் தோன்றுகிற பாதிப்பு தீவிரமடைகிறபோது செய்வதறியாது தவறான முயற்சிகள் மீது நாட்டமேற்பட்டு மனம் மேலும் மேலும் மோசமான எதிர் விளைவுகளைச் சந்தித்துக்கொள்கிறது.

எதற்குமான ஒரு எல்லைப்பிரிகோடு சேவையென்கிற விடயத்துக்கும் அவசியமாதேயாகும். அடுத்து உயர்ச்சி என்பதற் கூடாக பெயர்பெறல் என்பதற்கான முனைவுகள் பற்றி என்ன எண்ணத்தோன்றுகிறது? சிந்திப்போம்.



# இல்லறம் நல்லறமாக வேண்டும்

**மனோன்மணி**

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, படித்தவர்களிடையே ஏற்படும் சண்டை வெளியே தெரியாது. அவர்களுடைய பிணக்கு, வீட்டு அங்கத்தினர்களுக்கேகூட தெரியாது. விளிம்பு நிலை மக்கள் மட்டுமே எல்லோரும் பார்க்க பெண்டாட்டியை அடித்து உதைப்பார்கள். கெட்ட வார்த்தைகள் அங்கே ஆறாக ஓடும். மனைவியை அடித்துப் போட்டு விட்டு கணவன் வெளியே போய் விடுவான், கொஞ்ச நேரம் அவள் அழுது புலம்பிக் கொண்டிருப்பாள். பின்னர் எழுந்து கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு புருஷனுக்காக அம்மியில் மசாலா அரைப்பாள்.

தற்போது படித்து, நல்ல வேலையில் இருப்பவர்களின் வாழ்க்கை சண்டையும், சச்சரவுமாகப் போய்க்கொண்டிருப்பது வருத்தமளிக்கிறது. பெண்கள் பொருளாதார சுதந்திரம் இல்லாமல் இருந்தபோது கணவனின் அடக்குமுறைகளுக்குப் பணிந்து போனார்கள். தற்போது பெண்கள் பொருளாதார தற்சார்பு நிலை அடைந்து விட்டதால் முனை மழுங்கிப் போய் வாழத் தயாராக இல்லை. கணவன் தன்னிடம் அன்பாக இருக்க வேண்டும். அடிமை போல் நடத்தக் கூடாது; தன் உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டும்; இல்லறக் கடமைகளில் இருவருக்கும் பங்கு உண்டு என்பவற்றில் உறுதியாக இருக்கிறார்கள்.

புரிதல் இருக்கும் இல்லறங்கள் நல்லறங்களாக இருக்கின்றன. ஊடல்கள் வரலாம். ஆனால் வந்த வேகத்தில் அது மறைந்து போகவேண்டும். காதலும், களிப்பும் நிறைந்த வாழ்க்கையைப் பார்க்கும் பெற்றோர் பேருவகை அடைவார்கள்.

தங்கள் சண்டை குழந்தைகளை அதிகம் பாதிக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. சண்டையைப் பார்த்து பயந்த குழந்தைகள் பெற்றோரிடம் ஒட்டுவது இல்லை. தங்களின் குழந்தைக்காக நிறைய மெனக்கெடும் அவர்கள், தங்கள் சண்டையால் குழந்தையின் மனநலம் பாதிக்கப்படுகிறது என்பதை ஏன் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்களோ? கணவன், மனைவி சண்டை போடுவதால் குழந்தைகள் மனதளவில் பெற்றோரிடமிருந்து பிரிந்து போய் விடுகிறார்கள். பெற்றோர் பற்றி பயம் கலந்த பிம்பம் அவர்களின் மனத்திரையில் பதிந்து போய் விடுகிறது. வீடு அவர்களுக்கு அந்நியமாகி விடுகிறது.

வீடு என்பது அன்பின் உறைவிடம் மன அமைதியையும், பாதுகாப்பையும், இனிமையும் தரும் இடம். ஆனால் இன்று வீடு வசிப்பதற்கான இடமாக மட்டும் உள்ளது. சின்னச் சின்ன கருத்து வேறுபாடுகள்வரும்போது, ஒருவர் விட்டுக் கொடுத்துப் போய் விட்டால் என்ன? அங்கே 'தான்' என்ற தன்முனைப்பு (ஈகோ) அவர்களைத் தடுக்கிறது. புதிய சண்டையில் பழையதெல்லாம் இழுக்கப்படுகிறது; குத்தல் பேச்சு தொடங்குகிறது. தங்களால் தனித்து வாழ முடியும் என்று பெண்கள் நம்புகிறார்கள். பெற்றவர்கள் தங்கள் வாரிசுகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேச, பிரச்சினை பெரிதாகிறது.

தம்பதிக்குள் உள்ள பிரச்சினையில் மூன்றாம் மனிதர் மூக்கை நுழைப்பது பெரும் குற்றம். வாழ்க்கை மிகச் சிறியது என்பதால் அன்பை அதிகமாகவும், கோபத்தைக் குறைவாகவும், மன்னிப்பை விரைவாகவும் கற்றுக்கொண்டால் பூசல் வராது. சட்டென உணர்ச்சிவசப்படுவதாலும், யோசிக்காமல் வார்த்தைகளைக் கொட்டி விடுவதாலும்தான் கணவன் - மனைவிக்குள் சண்டை வருகிறது.

எப்போதோ படித்தது நினைவுக்கு வருகிறது.

**தம்பதிக்குள் உள்ள பிரச்சினையில் மூன்றாம் மனிதர் மூக்கை நுழைப்பது பெரும் குற்றம். வாழ்க்கை மிகச் சிறியது என்பதால் அன்பை அதிகமாகவும், கோபத்தைக் குறைவாகவும், மன்னிப்பை விரைவாகவும் கற்றுக்கொண்டால் பூசல் வராது.**

கணவனும் மனைவியும் மாலையில் நடைப்பயிற்சி முடித்துக் கொண்டு வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தனர். வரும் வழியில் ஒரு கயிற்றுப் பாலம் இருந்தது. சற்று இருட்டியதால் இருவரும் வேகமாக நடக்கத் தொடங்கினர். மழைச் சாரலும் அடித்தது. வேகமாக நடந்து கொண்டிருந்தவர்கள் ஓடத் தொடங்கினர். கணவர் அதிக வேகமாக ஓடினார். கயிற்றுப் பாலத்தை கணவர் கடந்து முடிக்கும்போதுதான் மனைவி பாலத்தினை வந்தடைந்தார். மழைச் சாரலோடு கும்மிருட்டும் சேர்ந்து கொண்டதால் மனைவி பாலத்தைக் கடக்க பயப்பட்டாள்.

மின்னலும் இடியும் சேர்ந்துகொள்ள கணவனை துணைக்கு அழைத்தாள். இருட்டில் எதுவும் தெரியவில்லை. மின்னல் மின்னியபோது கணவன் பாலத்தின் மறுபக்கத்தில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. தன்னால் முடிந்தவரை குரலெழுப்பி கணவனை அழைத்தாள். அவன் திரும்பிப் பார்க்கவில்லை. அவளுக்கு அழுகையாய் வந்தது. 'இப்படி பயந்து அழைக்கும்போது உதவவில்லையே, என்ன மனிதர் இவர்' என நினைத்து மிகவும் வருந்தினாள். கடவுளிடம் பாரத்தைப் போட்டு விட்டு பயந்தபடியே மெல்ல மெல்ல பாலத்தைக் கடந்தாள்.

ஒருவழியாக பாலத்தைக் கடந்து விட்டாள். கணவனைக் கோபத்தோடு பார்க்கிறாள். அங்கு கணவர் ஒரு பக்கம் உடைந்து தொங்கிக் கொண்டிருந்த கயிற்றுப் பாலத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தார். மனைவி வெட்கித் தலை குனிந்தாள். சில சமயம் கணவர், குடும்பத்துக்கு எதுவும் செய்யாமல் இருப்பதாகத் தோன்றும். ஆனால் உண்மையிலேயே அவர் தன் குடும்பத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பார். அன்பை, காதலை, வாஞ்சையை பல ஆண்கள் வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு நடிக்கத் தெரியாது. திரை நாயகர்களைப் போல தன் கணவன் இருக்கவேண்டும் என சில பெண்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கணவனோ, மனைவியோ கோபம் வரும் போது சட்டென அந்த இடத்தை விட்டு விலகிப் போய் தன் துணை தனக்காக எத்தனை செய்திருக்கிறார், எந்த அளவுக்கு தன்னை நேசித்திருக்கிறார், எதையெல்லாம் விட்டுக் கொடுத்துப் போயிருக்கிறார் என நினைத்துப் பார்த்தால் பொங்குகிற பாலில் தண்ணீர் தெளித்தால் அந்தப் பால் எப்படி அடங்கிப் போகுமோ அப்படி கோபமும் அடங்கிப் போகும். ஒருவர் கத்த ஆரம்பிக்கும் போது மற்றவர் மௌனமாக இருந்தால் அனைத்தும் சரியாகி விடும். இங்கேதான் நீதிமன்றம் போல வழக்காடுகிறார்களே? சிலர்

## இல்லறம்...

கண்மூடித்தனமான கோபத்தில் கையில் கிடைத்ததையெல்லாம் போட்டு உடைக்கிறார்கள். விலையுயர்ந்த கைப்பேசியைப் போட்டு உடைத்தவர்கள் பலர்.

ஒருவர் மற்றவரை மாற்ற முயற்சிப்பதை விட்டுவிட்டு, தன்னிடம் உள்ள குறைகளைக் களைய முற்படவேண்டும். மற்றவரின் கருத்துகளை அவர் கோணத்தில் இருந்து புரிந்து கொள்ளவேண்டும். எதிர்பார்ப்பைக் குறைத்துக்கொண்டால் ஏமாற்றங்கள் இராது, கோபமும் வராது. தன் வாழ்க்கையைப் பிறர் வாழ்க்கையுடன் ஒப்பிடாமல் இருந்தால் மகிழ்ச்சியும், மன நிறைவும் உண்டாகும். நம் செயல்களையும், நடவடிக்கைகளையும், விருப்பங்களையும், வாழ்க்கைத் துணை ஏற்கவேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதும், அவற்றைத் திணிப்பதும்தான் மோதலுக்கான அடிப்படைக் காரணம்.

சிலர், உயர் பதவியல் இருக்கிறார்கள். ஆனாலும் வீட்டில் சண்டை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இப்போதெல்லாம் கணவன் மனைவியை அடித்தால், மனைவி கணவனைத் திருப்பி அடிக்கிறாள். அந்த நிமிடத்து கோபம் நிதானம் இழக்கிறது. இக்காலப் பெண்கள், தங்கள் கணவர் தாங்கள் சொல்கிறபடிதான் நடக்க வேண்டும் என எதிர்பார்கிறார்கள். மாமியாருக்கும், தனக்கும் ஒத்துப் போகவில்லை என்றால் தன் கணவனும் அவன் தாயுடன் பேசக்கூடாது என்கிறார்கள். மனைவிக்கும், அம்மாவுக்கும் இடையே மாட்டிக் கொண்டு தவிக்கிறார்கள் பல ஆண்கள்.

பெண்களும் வேலைக்குப் போகிறார்கள். பணி இடத்தில் வெளியில் சொல்ல முடியாத பல பிரச்சினைகள். வீட்டு வேலை, அலுவலகப் பணி என இரண்டு குதிரைகளில் அவர்கள் சவாரி செய்கிறார்கள். மன அழுத்தம் அதிகரிக்கும்போது கோபப்படுகிறார்கள். ஆகவே யார் அனுசரித்துப் போவது என்ற பட்டிமன்றம் தேவையில்லை. விட்டுக் கொடுத்தவர் கெட்டுப் போக மாட்டார். என்ன பிரச்சினையாக இருந்தாலும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் பேசிப் புரிய வைக்கலாம். விட்டுக்கொடுத்தால், அனுசரித்துப் போனால் வாழ்க்கை வரமாக அமையும்.

மகிழ்ச்சி என்பது பொருள் சம்பந்தப்பட்டது அல்ல மனம் சார்ந்தது. உள்ளதைக் கொண்டு நிறைவாக வாழ்வதே மகிழ்ச்சி. அன்பு சார்ந்த, விட்டுக் கொடுத்தல் சார்ந்த வாழ்வே மகிழ்ச்சி தரும். முட்களையும் ரசிக்கக் கற்றுக்கொண்டால் வலிகளும் பழகிப் போகும். வாழ்க்கையை வசந்தமாக்க சின்னச் சின்ன சந்தோஷங்கள்போதும்.

தங்கள் ஆசைகளையும், கனவுகளையும் துறந்துவிட்டு பிள்ளைகளுக்காகவே வாழும் பெற்றோர், அவர்களுக்கு மணம் முடித்து வைத்து, முதுமையில் அமைதியான வாழ்க்கையை வாழ வேண்டும் என ஆசைப்படுகிறார்கள். அந்த மன நிம்மதியை அவர்கள் பிள்ளைகள் குலைத்துவிடக்கூடாது. மீண்டும் சுமையை சுமப்பதற்கு அவர்கள்

மனதிலோ, உடலிலோ தெம்பு இல்லை. இளைய தலைமுறையினர் இனிய இல்லறமே நல்லறம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.



# சிகரெட்டை

## முற்றாக ஒழிக்க முயற்சி வேண்டும்

**ரேணுகா**

நிகோடின் என்ற மிகக்கொடிய வேதிப்பொருளைக் கொண்டது புகையிலை. நிகோடினா டொபாகம் எனும் செடியிலிருந்து கிடைக்கக்கூடியது. 1492இல், மேற்கிந்தியத் தீவுகளில் கிறிஸ்டோபர் கொலம்பஸுக்கு நட்பின் அடையாளமாக ஐரோப்பியர்களால் வழங்கப்பட்டபோதுதான், முதன் முதலில் புகையிலை அறிமுகமானது.

உலகில் தொற்றா நோய்களால் ஆண்டுதோறும், 3.8 கோடி மக்கள் இறப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. அதிலும் 70 லட்சம் மக்களுக்கு புகையிலையினால் இறப்பு ஏற்படுகிறது என அதிர்ச்சி தரும் தகவலை அது வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மட்டும் புகையிலை ஆண்டுதோறும் 20 ஆயிரம் மக்களைக் கொல்கின்றது. இதனால் இலங்கை அதிக அளவில் வாய் புற்றுநோயாளிகளையும் கொண்டுள்ளது. மூக்குப்பொடி போடுவதாலும், புகையிலையை மெல்லுவதாலும் வாய் புற்றுநோய் ஏற்படுகிறது. உலகத்தையே அச்சுறுத்தி வரும் தொற்றா நோய்களில் புற்றுநோய் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது.

பீடி , சிகரெட் , ஹூக்கா, மூக்குப்பொடி, புகையிலை, இப்போது புதிதாக இ-சிகரெட் என பல வழிகளில் புகையிலையினை பலரும் நுகருகின்றனர். அதில் உள்ள 28 வகை வேதிப் பொருட்கள் புற்றுநோய் உண்டாக்க காரணமாக உள்ளன. மது அருந்துதல், போதைப் பொருள் பயன்பாடு, எச்.ஐ.வி. போன்றவற்றால் இறப்பவர்களைவிட புகையிலையால் இறப்பவர்கள் எண்ணிக்கை அதிகம்.

புகைப் பழக்கம் புற்றுநோயினை மட்டும் உண்டாக்குவதில்லை, நம் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் பாதிக்க செய்து இறப்பை உண்டாக்குகிறது.

புகை பிடிக்கும் பழக்கம் உள்ள ஆண்கள், அப்பழக்கம் இல்லாத ஆண்களைவிட 12 வருடங்களும், புகை பிடிக்கும் பழக்கம் உள்ள பெண்கள், அப்பழக்கம் இல்லாத பெண்களை விட 11 வருடங்களும் குறைவாக உயிர் வாழ்வதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இது அவர்களின் வீட்டுக்கு மட்டும் இழப்பல்ல. நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் பேரிழப்பு.

புகை பிடிப்பதன் மூலமாகவும், புகையிலையை வாயில் போட்டு மெல்லுவதன் மூலமாகவும் வாய், நாக்கு , தொண்டை, குரல்வளை, நுரையீரல், உணவுக்குழல், இரைப்பை, கல்லீரல், கணையம், குடல், சிறுநீரகம், கருப்பை வாய் போன்ற பல்வேறு உறுப்புகளில் புற்றுநோய் எளிதில் உண்டாகிறது. புற்றுநோய் உண்டாகக் காரணம் அதில் உள்ள முக்கிய வேதிப்பொருளான நிகோடின்தான். அது நம் நரம்பு மண்டலத்தில் உள்ள அஸீட்டில்கோலின் எனும் வேதிப் பொருளுக்கு மாற்றாக சேர்ந்து, நம் உடலை அடிமையாக்கிவிடுகிறது.

புகையிலை புற்றுநோயை மட்டுமல்ல, நாட்பட்ட நுரையீரல் நோய்களான ஆஸ்துமா, மூச்சுகுழல் அழற்சி, நிமோனியா, எம்பைசீமா, இருதய குருதிக் குழாய் அடைப்பு அதனால் மாரடைப்பு போன்ற பல அதிதீவிர நோய்நிலைகளை உண்டாக்கி மனிதர்களை வெகு விரைவில் கொல்லும். புகையிலை மெல்லுவதால் அதில் உள்ள நைட்ரோசமைன் எனும் வேதிப்பொருளும், அதனுடன் உள்ள பார்மல்டிஹைடு, நிக்கல், ஆர்சனிக், கேட்மியம், பென்சோபயரின் போன்ற பல வேதிப்பொருட்களும் எளிதில் புற்றுநோயினை உண்டாக்கி விடுகின்றன.

சமீப காலங்களில் பெண்களும் அதிகமாக புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாக உள்ளனர்.

**புகை பிடிப்பதன் மூலமாகவும், புகையிலையை வாயில் போட்டு மெல்லுவதன் மூலமாகவும் வாய், நாக்கு , தொண்டை, குரல்வளை, நுரையீரல், உணவுக்குழல், இரைப்பை, கல்லீரல், கணையம், குடல், சிறுநீரகம், கருப்பை வாய் போன்ற பல்வேறு உறுப்புகளில் புற்றுநோய் எளிதில் உண்டாகிறது.**

## சிகரெட்டை ...

கர்ப்பம் தரித்த பெண்கள் புகைப் பதால் கருவில் உள்ள சிசுவுக்கும் பாதிப்பு ஏற்படும். பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள், குழந் தையின்மை, எக்டோபிக் எனும் கருப்பைக்கு வெளியே கருத்தரிப்பு, தன்னிச்சையான கருச்சிதைவு, குறைப்பிரசவம், கருவில் சிசுவின் உடல் எடை குறைவு, பிறவிக் கோளாறுகள், பிரசவத்திற்கு பின் அதிக குருதிப்போக்கு போன்றவை ஏற்படும் அபாயம் உள்ளது.

புகையிலைக்கு அடிமையான தாய்மார்களுக்கு பிறக்கின்ற குழந் தைகளுக்கு உடல் எடை குறைவு, வளர்ச்சி குறைவு, குழந்தையிலே அதிக குருதி அழுத்தம், நுரையீரல் செயல்பாடு குறைவு போன்ற பல நோய்கள் ஏற்படும் அபாயம் உள் ளது.

அரசு, 'புகை பிடித்தல் புற்று நோயை உண்டாக்கும், உயிரைக் கொல்லும்' என்று எவ்வளவுதான் எச்சரிக்கைகளை விழிப்புணர்வு நோக்கில் வெளியிட்டாலும் நாளுக் குநாள் புகையிலைப் பொருட்களை பயன்படுத்துவோர் எண்ணிக்கை கணிசமாக இருப்பது வருத்தமளிக் கும் உண்மை.

1990ஆம் ஆண்டிற்குப் பின்னர், சிகரெட்டில் உள்ள தீங்கு விளைவிக் கும் கூறுகளைக் குறைப்பதற்கான முயற்சியில் இறங்கிய சீன நாடு அதிக மூலிகைக் கலப்பு சேர்ந்த புகையிலை சிகரெட்டுகளை உற் பத்தி செய்யத் தொடங்கியது. 2000க்கு பிறகு, கொரியா, தைவான், தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகையிலை நிறுவனங்கள் இதே போன்ற மூலிகைக் கலவை சிகரெட்களைத் தயாரிக்கத் தொடங் கின.

இத்தகைய மூலிகை கலந்த புகையிலைப் பொருட்களைத் தயாரிக்கும் நோக்கம், மூலிகைகளை சேர்ப்பதன் மூலம் புகையிலையின் தீய விளைவுகளை, உடலுக்கு ஏற் படும் அபாயத்தைக் குறைப்பதுதான். நமது சித்த மருத்துவத்திலும் பல் வேறு மூலிகைகள் புகையிலையின் நஞ்சினை குறைக்கும் விதத்தில் உள்ளன. அவற்றைக் கொண்டு புகையிலை கலவைப் பொருட்க ளைத் தயாரித்துப் பயன்படுத்தினால், நம் நாட்டிலும் புகையிலை தீங் கினை குறைத்து, மனிதர்களின் ஆயுட்காலத்தை நீட்ட முடியும்.

இப்போதைக்கு இலங்கையில் நாளொன்றுக்கு நிகழும் 56 இறப் புக்கள் புகையிலை சார்ந்த பொருட் களால் ஏற்படுகின்றன. அதிலும் முக்கியமாக சிகரெட் புகையால்தான் பெரும்பாலான சாவுகள் நிகழ்கின் றன. புகைப் பொருட்களின் மீது வரியை அதிகரிப்பது, அதன் பாதிப்புக்களை சிகரெட் பெட்டியின் மேலேயே அச்சிடுவது உள்ளிட்ட பல கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுக்கப்பட்டாலும் கூட அதனை முற்றிலுமாக ஒழிப் பதற்கான பாதைக்கு இலங்கை வரவில்லை. பல இளைஞர்கள் சிகரெட்டுக்கு அடிமையாகி இன் னும் அழிந்துகொண்டே இருக் கிறார்கள். அவர்களைக் காக்க இந்த விடயத்தில் இன்னும் தீவிரமாக இயங்கவேண்டியது அவசியம்.

**கதிரேசன் காத்தவராயன்**



# ஒண்டுமே விளங்கயில்லையோ?

அதிலை வாசிசாலையடிப் பக்கம் போனன். அங்கை சுதனும் இன்னொரு பெடியனும் பேப்பருகளோடை இருந்தாங்கள். "என்னப்பா சோதி னைக்குப் படிக்கிற மாதிரி?" எண்டுகொண்டு இருந்தன். அப்பதான் என்னைக் கவனிச்ச சுதன், "ஓ்ஓ.. கதிரேசு மாமா வாங்கோ வாங்கோ" எண்டு உற்சாகமானான். மற்றப் பெடியனும் சிரிச்சான். முன் னமும் ரண்டொருக்காக் கண்ட முகம்தான்.

"என்னவாம் நாட்டுப் புதினம்?" எண்டன் நான். முருகேசரும் சங்கரியரும் வந்து இருந்துகொண்டே "புதினமோ? எதையெண்டு சொல்ல? மெற்றிக்தொன் கணக்கிலை எரிவாயுவும் எரிபொருளும் இறங்கியும் சனத்துக்குக் கிடைக்கயில்லை... ஏனெண்டது விளங் குதோ?" எண்டு ஒரு பார்வை பாத்தார். "அதுக் குள்ளை கனக்க வில்லண்டங்கள் கிடக்கல்லே முரு கேசு? வாயைச் சாப்பிடுறதுக்கு மட்டும் திறக்கிறது தான் புத்திசாலித்தனம்" எண்டு நான் சொல்ல மற்ற வையோடை சேந்து முருகேசரும் சிரிச்சார்.

"வரப்போகுது எண்டும் வருகுது எண்டும் வந் திட்டுது எண்டும் றங்கப்போகுது றங்கூது எண்டு கொமென்றியல்லே நடக்குது... ஒரே சாமானை எத்தினை தரம் சொல்லுறாங்கள்... எங்கடை செய் திக்காறர் அடிக்கிற கூத்துகளிலை இதுகளும் ஒண்டு தான்..." எண்டு சுதன் சொல்லிக்கொண்டிருக்க "சரி அப்பிடி உவை சொல்லுற அளவுகளிலை வந்திருந் தால் ஏன் சாமான் தட்டுப்பாடாயிருக்கு... எங்கை போகுது? என்ன நடக்குது? எண்டதுகளையும் சொல்ல வேணுமல்லே?" எண்டான் பெடியன்.

"அதுகளைச் சொல்லுகிற செய்திதான் கடைசியாப் போகுடுமோ எண்டிற பயமொண்டுமிருக்கல்லே?" எண்டார் முருகேசர். "இஞ்ச வருகுது... அங்கை வருகுது... எண்டு சனம் ஓடித்திரிஞ்சு அலையுது கள்... லைனிலை நிக்கிறதுதான் முழுநேரத் தொழிலாகிப்போச்சுது... எண்டு நான் முடிக்க யில்லை கிடைக்கிற சாமானுகளின்ரை விலையள் ஏறுகிற வேகத்தைவிட வேலையள் இல்லாமல் போகிற வேகம் கடுமையாயல்லே கிடக்குது" எண்டான் சுதன்.

அந்த நேரம் வல்லியம்மான் தம்பருக்கு ஏதோ சத்தமாச் சொல்லிக்கொண்டு வந்தவர் எங்களைக் கண்டிட்டு இருந்தபடி தனக்குப் பக்கத்திலை தம்பரையும் இருத்திக்கொண்டார். "என்ன அம்மான் தம்பர் என்னவாம்?" எண்டு கேட்டார் முருகேசர். "தம்புவோ... ஒப்பாரி வைச்சுக் குழறாத குறை தான்..." எண்டு சிரிச்சார் வல்லியம்மான். "பின்னை யென்ன கதிரேசண்ணை பெற்றோல் இல்லை..." எண்டு தம்பர் முடிக்கயில்லை "பேய்த் தம்பா பெற் றோல் இல்லையெண்டே புலம்பிறாய்? ஏற்றுமதி செய்யிற அளவுக்குப் பதுக்கி வைச்சிருக்கிறமடா..." எண்டு பெரிசாச் சிரிச்சார் வல்லியம்மான்.

"உண்மைதான் அம்மான் ஓடியோடி வாங்கி பதுக்கியல்லே வைச்சிருக்கிறம்" எண்டன் நான். "சாப்பாட்டுச் சாமானுகளுக்கு நிக்கிற கியூவின்ரை பெருப்பத்தை விடப் பெற்றோலுக்கும் டீசலுக்கும் நிக்கிறது வலு பெரிசாயல்லே கிடக்குது!" எண்டார் முருகேசர். "உண்மைதான் முருகேஸ் மாமா... எதைச் செய்யிறதெண்டதோ எப்பிடிச் செய்யிற தெண்டோ தெரியாத ஆக்களாயல்லே இருக்கிறம்" எண்டான் பெடியன்.

"காசுள்ளவங்கள் எல்லாத்தையும் வாங்கி வாங்கி வீட்டுக்குள்ளை தொகையாப் பதுக்கி வைக்கிறதாலை அண்டாடம் உழைச்சுச் சாப்பிடுகிற சனம் சாமானு களை வாங்க முடியாமலுக்குக் கடுமையாக் கஸ்டப் படுகுதுகள்... எனி அண்டாடம் வேலையள் கிடைக் கிறதும் நிச்சியமில்லையல்லே?" எண்டான் சுதன். "பங்கீட்டுத் திட்டங்கள் இல்லை... இடிபடக் கூடி யவனும் நெருக்குப்படக்கூடியவனும்தான் இனிமேல் வாழலாம்போலை..?" எண்டார் தம்பர்.

"அதுக்குத்தான் வழியில்லாமல் போகுடும் போலையல்லே கிடக்குது.." எண்ட தம்பர் வாயை மூடயில்லை "இனித்தான் போகவேணுமே? கடனுக்கு வட்டி கட்டக் கடன் வாங்கினவன் எங்கை யெண்டாலும் உருப்பட்டிருக்கிறாங்களே?" எண்டு சிரிச்சார் வல்லியம்மான். "உண்மைதான் அம்மான்" எண்டார் தம்பர். "அதோடையம்மான் நாட்டிலை இனிமேல் விக்கக்கூடியதாயும் ஒண்டும் இல்லை யல்லே? அதாலை புதிசாய் கடன் குடுக்கிறதுக்கு பெரிய நாடகள் தயங்குதுகளல்லே?" எண்டார் முருகேசர்.

"எடேயப்பா அவர் வந்தாலென்ன இவர் வந்தா லென்ன ஆண்டாலென்ன செத்தாலென்ன அவங்க ளுக்கு தங்கடை நலங்களிலைதானே கவனம் முழுதும்... எங்கடை நாட்டையும் சனத்தையும் ஆர் கவனிக்கிறது? இண்டைக்கொரு புதினம் சொல் லட்டே மரவள்ளிக்கிழங்கும் உருளைக்கிழங்கும் ஒரே விலைதான்... இப்பிடித்தான் எல்லாமே தலை கீழாகப் போகுது..." எண்டுகொண்டு வல்லியம்மான் போட்டார்.

"இறக்குமதியை நம்பி உள்நாட்டு உற்பத்தியைக் கைவிட்டதின்ரை வெளிப்பாடுகளிலை கண்ணுக்குத் தெரிஞ்சிருக்கிற ஒண்டுதான்...போகப்போக என் னென்னவெல்லாம் நடக்கப்போகுதோ? நடக்கட்டும் பாப்பம் எண்டிற காலம் போட்டுது..." எண்டு கொண்டு வீட்டை வந்திட்டன்.



# சிறைக்குள்...

தர்மராசா

59

## "இங்கு எல்லா வசதியும் உண்டு... இங்கேயே இருங்கோ..."

**12.12.2001** அன்று என்னை மட்டக்களப்பு மேல்நீதிமன்றுக்குக் கூட்டிச்சென்றார்கள். எனக்கான சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை கிடைக்காததால் பிணை பெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை. **12.02.2002** அன்று மறுவழக்குக்குத் தவணை போட்டார்கள். கண்டி மேல்நீதிமன்றில் போடப்பட்ட தவணையுடன் ஒப்பிடும்போது இது பரவாயில்லை என்று நினைத்துக்கொண்டேன். மட்டக்களப்புச் சிறைச்சாலையில் பின்னாளில் (12.12.2001) 37 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். எனக்கு விசிற் வருவதில்லை என்பதால் கல்முனையைச் சேர்ந்த வெதுப்பக உரிமையாளர் ஒருவர் தனக்குக் கொண்டுவருகின்ற உணவை முதலில் எனக்குக் கொண்டுவந்து தருவார். பனங்கிழங்கு, அவித்த கச்சான், சோளம், மாம்பழம் எல்லாம் இந்நாள்களில் நிறையக் கிடைத்தன.

**16.12.2001** அன்று முஸ்லிம்களின் நோன்புப் பொருநாள். அன்று காலை அரசியல் கைதிகள் குளிப்பதற்காக நிரப்பப்பட்ட தொட்டித் தண்ணீரை முஸ்லிம் கைதிகள் குளிப்பதற்காக விட்டுக்கொடுத்தோம். நாங்கள் மாலையில் குளித்தோம்.

**18.12.2001** அன்று நானும் ராஜாவும் ஒப்பமிட்டுக் கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரிகள் பணிமனைக்கு ஒரு கடிதம் அனுப்பினோம். மருத்துவ அறிக்கை கிடைத்தால் அதை வைத்துப் பிணையாவது கோர முடியும் என்று தெரிவித்திருந்தோம்.

**22.12.2001** அன்று பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்க ஊழியரான தோமஸ் என்பவர் கைதிகளைச் சந்திப்பதற்காக வந்தார். அவர் ஆங்கிலேயனாக இருந்தாலும் நன்றாகத் தமிழ் பேசினார். ஆறு மாதங்களுக்கு முற்பட்டகாலப் பத்திரிகைகளில் ஜனனி, மித்திரன், தினமுரசு ஆகிய பத்திரிகைகளைக் கொண்டுவந்து தந்தார். வேறு என்ன உதவிகளைக் கேட்டாலும் "கொழும்பில் கேட்கவேண்டும் சார்" எனத் தமாசாகக் கதைத்துவிட்டு நழுவிப்போய் விட்டார்.

**கல்முனையைச் சேர்ந்த வெதுப்பக உரிமையாளர் ஒருவர் தனக்குக் கொண்டுவருகின்ற உணவை முதலில் எனக்குக் கொண்டுவந்து தருவார்.**

**25.12.2001** அன்று இருவேறு கிறிஸ்தவ அமைப்புகள் சிறைச்சாலைக்கு வந்து எமக்காகப் பிரார்த்தித்தன. நாங்கள் விடுதலையானோமோ இல்லையோ இவ்வாறு வந்து கைதிகளையும் மனிதர்களாகப் பார்த்து ஆறுதலளிப்பது ஓரளவு நிம்மதியளிப்பதாக இருந்தது.

பிரார்த்தனையின் முடிவில் சிற்றுண்டி, குளிர்பானங்கள் எல்லாம் வழங்கினார்கள். அவை சிறிய பொருள்களாக இருப்பினும் நாம் நிர்க்கதியாக இருந்தவேளையில் வந்து உதவியமையால் அதற்குரிய பெறுமதியை மதிப்பிட முடியாது. ஆனால் ஜீவகாருண்யம் பற்றி எப்போதுமே பேசிக்கொண்டிருக்கின்ற இந்து மத அமைப்புகள் எவையும் சிறைச்சாலைப் பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை. சாயி பாபா பஜனைக் குழுவினர் எப்போதாவது வந்து பஜனை வைப்பார்கள்.

**26.12.2001** அன்று மட்டக்களப்பிலிருந்து களுத்துறை, பூசாவுக்கான ஸ்கொட்டுக்கு ஏற்றினார்கள். எம்மையும் அனுப்புவீர்களா என்று பிரதம ஜெயிலர் குணசேகரத்திடம் நானும் ராஜாவும் கேட்டபோது உங்களுக்கு அடுத்த தவணை எப்போது என்று கேட்டார். மாசி மாதம் 12, 13ஆம் திகதிகள் என்றோம். அதற்கிடையில் வேறெங்காவது வழக்குத் தவணை உண்டா என்று கேட்டார். இல்லை என்றோம். அவ்வாறு என்றால் வேறு சிறைகளுக்கு ஏன் போக வேண்டும்? இங்கு எல்லா வசதிகளும் உண்டு. இங்கேயே இருங்கோ. இன்னும் பலரை மேல்மாடியில் தங்க வைப்பதற்கு யோசிக்கிறேன் - என்றார்.

நூறு பேரைத் தடுத்து வைத்திருக்கும் வசதி புதிய கட்டடத்தில் உண்டு. மட்டக்களப்புப் புலனாய்வுக் காவல் தரப்பினர் வைத்திருக்கும் சிறைச்சாலைக்குச் சொந்தமான கட்டடங்களையும் பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கிறேன் என்றார். இப்படி ஒரு நிலை இதற்கு முன்பு மட்டக்களப்புச் சிறையில் இருக்கவில்லை.

(தொடரும்)

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

21




## சரக்கு ரயில்களின் அவசியம்

உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்யும் இடங்களுக்கு எடுத்துச் செல்வதென்பது எந்தவொரு நாட்டிலும் மிக முக்கியமான பணி. தொடக்கத்தில் மனிதர்கள் பொருள்களைச் சுமையாக்கித் தலையில் சுமந்தும், கழுதைகள் - வண்டில்களில் ஏற்றிச் சென்றும், ஆறு, கடல் என நீர்வழியாக மிதவைகளில் எடுத்துச்சென்றும் எனப் பல வழிகளில் இடம்விட்டு இடம் மாற்றினர். பலகால மாற்றங்களின் பின்னர் கைத்தொழிற் புரட்சியின் பின்னரான காலத்தில் நீராவித் தொடரூந்துகள் அறிமுகமாகின. அவற்றின் மூலம் பெருமளவு ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் இடம்மாற்றம் செய்யப்பட்டன. இதைப் பின்வந்த நவீன தொடருந்துகள் மேலும் இலகுபடுத்தின. 'குட்ஸ் ரெய்ன்' என அழைக்கப்படும் சரக்கு ரயில்கள் இதில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தின. தரைவழியாகப் பல்லாயிரம் கிலோ மீற்றர் தூரம் பொருள்களை இலகுவாக எடுத்துச்செல்லப்பட்டன.

தொடருந்துகள் இரும்புத் தண்டவாளங்களில் பயணிப்பதால் உராய்வுத் தன்மை குறைவாக இருக்கும். தொடருந்துக்கான எரிபொருள் செலவு தரையில் ஓடும் மற்றைய வாகனங்களைவிடக் குறைவானது. அது மட்டுமல்லாது தொடருந்து செல்வதற்குத் தனியான பாதை தேவைப்படுவதால் போக்குவரத்துத் தடையின்றியும் வேகமாகவும் இதன் பயணம் அமையும்.

சீனாவிலிருந்து பிரித்தானியா வரைக்கும் சரக்கு ரயில் 7500 மைல்கள் தூரம் போய்வருகிறது. இந்தச் சேவை பிரான்ஸ், பெல்ஜியம், போலந்து, ரஷ்யா, கஜகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கூடாக நடைபெறுகிறது. இதுவே உலகின் மிக நீளமான தொடருந்துச் சேவை.

சீனாவிலிருந்து பல உற்பத்திப் பொருள்களைப் பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்து பிரித்தானியாவிலிருந்து சீனாவுக்கு விஸ்கி, குளிர்பானங்கள், விற்றமின்கள், மருந்து வகைகள் எனப் பல்வேறு பொருள்களை ஏற்றுமதி செய்வது எனப் பரிமாற்றங்கள் நடக்கின்றன. இந்தத் தரைவழி ஏற்றுமதி, இறக்குமதிச் செயற்பாடானது கப்பல் பயணங்களைவிட இலகுவானதும் பெருந்தொகைப் பொருள்களைக் குறுகிய காலத்தில் பரிமாற்றவும் வழிவகுக்கிறது. இதனால்தான் தரைவழிப் பண்டப் பரிமாற்றத்துக்குச் சரக்கு ரயில்கள் அவசியப்படுகின்றன. மனிதர்களின் வர்த்தக - கொடுக்கல் வாங்கல் சேவையை அதிகளவில் செய்துமுடிக்கின்ற வலுவும் ஆற்றலும் இந்தச் சரக்கு ரயில்களுக்கு இருப்பதால் அன்றிலிருந்து இன்றுவரைக்கும் அவற்றின் பயன்பாடும் தேவையும் மவுசும் குறையாமல் அப்படியே இருக்கின்றன.




## மாம்பழ ஜாம்



மாம்பழப் பருவ காலம் இப்போது. பனம் பழத்துக்கும் மாம்பழத்துக்கும் யாழ்ப்பாணமே பிரசித்தமானது. கொடிகாமம், சாவகச்சேரி தொடங்கிக் குடாநாட்டின் பல பகுதிகளில் பரவலாக விளைகின்ற மாம்பழங்களின் ருசி தனியானது. யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான், விலாட், அம்பலவி எனப் பல ரகங்களில் இருக்கின்றன மாம்பழங்கள். இவ்வாறு வகை வகையாக நிறைய மாம்பழங்கள் கிடைத்தாலும் நம்மவர்கள் அவற்றை நாடுவது குறைவு என்கிற பேச்சுகள் இருக்கவே செய்கின்றன. தென்னிலங்கையில் இருந்து வந்து யாழ்ப்பாணத்து மாம்பழங்களை வாங்கி விரும்பி உண்பவர்களையும், வெளிநாடுகளில் இருந்துகொண்டு யாழ்ப்பாணத்து மாம்பழங்களை எவ்வளவு பணம் கொடுத்தேனும் வாங்கியுண்ண முற்படுபவர்களையும்விட நம்மவர்களுக்கு அருகிலிருக்கும் அற்புதம் தெரிவதில்லை என்கிற முறைப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

இந்த நிலையில் மாம்பழங்களை ருசிப்பதற்குப் புதிய தலைமுறையினரைப் பழக்கப்படுத்திக்கொள்வதற்கு இந்த மாம்பழ ஜாம் கைகொடுக்கும் எனலாம். இந்த வாரம் மாம்பழ ஜாமை எவ்வாறு செய்வது என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

கறுத்தக்கொழும்பான் அல்லது விலாட் மாம்பழங்கள் 6, சீனி - 250 கிராம், மாம்பழ வாசைன - சில துளிகள், சோளம் மாவு - அரைத் தேக்கரண்டி, சிற்றிக் அமிலம் - கால் தேக்கரண்டி. மஞ்சள் நிறமூட்டி சிறிதளவு.

**எவ்வாறு செய்வது...?**

நன்றாகக் கனிந்த பழங்களைத் தெரிந்தெடுத்துக் கழுவிச் சுத்தப்படுத்திய பின்னர் அவற்றின் சாற்றைப் பிழிந்தெடுத்துக்கொள்ளுங்கள். அந்த மாம்பழச் சாற்றுடன் சீனி, சிற்றிக் அமிலம், நிறமூட்டி ஆகியவற்றைச் சட்டி ஒன்றுக்குள் சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சுங்கள். சோளம் மாவைச் சிறிதளவு தண்ணீரில் கரைத்து இதனுடன் சேருங்கள். கொதித்துக் கலவை இறுக்கமாக வரும்போது வாசனைத் திரவத்தைச் சேருங்கள். அடிப்பிடிக்காத அளவுக்கு நெருப்பைத் தணியுங்கள். கலவை இறுகிவரும்போது தட்டில் ஊற்றிக்கொள்ளுங்கள். ருசியான மாம்பழ ஜாம் ரெடி...!

றெஜிஹாசன் - வேலணை

# நம்மவூர்ச் சுத்துமாத்து




## மாணவர்களைப் பகடைக்காய்களாக்கும் நிதி நிறுவனங்கள்

பாடசாலை மாணவர்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தித் தமது நிறுவனத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துகின்ற நிதி நிறுவனக்காரர்களின் சுத்துமாத்துகள் கண்டிக்கத்தக்கன. தனியார் மற்றும் அரச வங்கிகள் தொடங்கி வைத்த இந்தச் சுத்துமாத்துகளை இப்போது காப்புறுதி நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் எனப்பலவும் பல படிகள் மேலுயர்த்தத் தொடங்கியிருக் கின்றன. இந்த விடயம் தொடர்பில் தொடக்க காலத்தில் பாடசாலைகளுக்குள் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது வங்கிகள்தான். சிறுவர்களுக்குச் சேமிப்பைப் பழக்குகிறோம், சேமிப்பைக் கற்றுக்கொடுக்கிறோம், சேமிப்பின் நன்மைகளை - பயன்களை உணரச் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு பிள்ளைகளுக்கு உண்டியல்களை வழங்கித் தாய், தந்தையரின் பணத்தை வாங்கிச் சேமிக்கப் பிள்ளைகளைத் தூண்டின. இதற்குப் பாடசாலைச் சமூகத்தினரும் இடமளித்தனர்.

பாடசாலைக்கு ஆயத்தமாகும் பிள்ளை தாய், தந்தையிடம் பணம் வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதுடன் அதையே சேமிக்கவும் தொடங்கியது. தவிர தன்னுணர்வால் அதற்கு சேமிப்புக் குறித்த புரிதல் துளி யும் ஏற்படவில்லை. சேமிப்புக்குரியது பணம் மாத்திரமே என்கிற தவறான புரிதலும் இதன் மூலம் அதற்கு ஏற்பட்டது. ஆகத் தமது வியாபாரப் பெருக்கத்துக்காக மட்டுமே சேமிப்பு என்கிற எண்ணத்தை மாணவர்கள் மத்தியில் தோற்றுவித்து வெற்றிகண்டன வங்கிகள். காலப்போக்கில் அந்தத் திட்டத்தால் அதிக பயனில்லை என்று அதையும் கைவிட்டன வங்கிகள்.

இப்போது வங்கிகளைத் தாண்டிக் காப்புறுதி நிறுவனங்கள் பாடசாலைகளுக்குள் நூதனமாக நுழையத் தொடங்கியிருக்கின்றன. பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளை நடத்தும் திட்டத்தை வகுத்து. அதற்கு ஆக்கங்களை அனுப்பும் மாணவர்களின் பெயர், முகவரி, வயது, தொலைபேசி இலக்கம், பெற்றோர் - பாதுகாவலர் விவரங்கள் ஆகியவற்றைப் பெறுகின்றன. அந்த விவரங்களைக் கொண்டு காலப்போக்கில் மாணவர்களை அணுகித் தமது காப்புறுதியின் நன்மைகளை எடுத்துக்கூறித் தாம் வடிவமைத்த நிகழ்ச்சிநிரலை மேடையேற்றுகின்றன. கவர்ச்சிகரமாகக் கதைத்துக் காப்புறுதியின் பயன்களை எடுத்துக்கூறி, அதன் பயனைப் பெறுவதற்கான நடைமுறைகளை நூதனமாக மறைத்து - அல்லது அதைப் பெறுவதற்கிருக்கின்ற நீண்ட அலைச்சல் மிக்க நடைமுறைகளை விளக்கமாகக் கூறாமல் மேலோட்டமாகத் தெரிவித்து - தமது வலைக்குள் விழ வைக்கின்றன. பாடசாலை மாணவர்களின் தரவுகள், தகவல்களைத் திரட்டுகின்ற இந்த மாணவர்களுக்கிடையிலான கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளைச் செய்வதுபோல அரச நிறுவன ஊழியர்கள், ஆசிரியர் வட்டம், ஏனைய நிறுவன ஊழியர் சமூகங்களின் விவரங்களைப் பெற்றும் தமது இலக்குகளை அடைய எத்தனிக்கின்றன. இது சுத்துமாத்தன்றி வேறல்ல.

# தீபனின் சடலத்தின் கண்களை மூடிவிட்டேன்

**கமலநாதன்**

சரத்குமார - சோறோ கொமாண்டோப் படையணியின் சினைப்பர் துப்பாக்கிதாரி. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், முள்ளிவாய்க்கால் எனச் சமர்களில் ஈடுபட்டார். சினைப்பர் துப்பாக்கித் தாக்குதல் மூலம் களத்திலேயே தரமுயர்த்தப்பட்டவர். இவர் தனது அனுபவங்களை வெனச யூரியூப் தளத்தில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

நான் எனது பயிற்சியை முடித்த பின் முதன் முதலாகக் கடமைக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டேன். எனினும் உடனடியாகவே அவசரத் தாக்குதல் ஒன்றுக்காக முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் ஈடுபடுவதற்காகத் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டேன். அங்கு 3 நாள்கள் காத்திருக்கவேண்டியேற்பட்டது. எமது அணியை உலங்கு வானூர்தி மூலம் முல்லைத் தீவுக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் முல்லைத்தீவில் காயப்பட்ட, இறந்த படையினரை ஏற்றுவதில் உலங்குவானூர்திகள் 3 நாள்களாக ஈடுபட்டதால் நாம் காத்திருந்தோம்.

நாம் உலங்குவானூர்தியில் சென்று முல்லைத் தீவுக்கு அருகில் தரையிறங்க முடியாதவாறு புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள். 122 ரகத் துப்பாக்கியுடன் எமது அணியிலிருந்த சங்கக்கார உலங்கு வானூர்தியிலிருந்து கடற்கரை மணலில் குதித்தார். முக்கிய ஆயுதங்கள் பலவற்றை மணலில் போட்டோம். அந்தத் தாக்குதலின்போது இறந்த 21 படையினரின் உடல்களை உலங்கு வானூர்தி மூலம் அனுப்ப முடியாமல் எமது கட்டுப்பாட்டிலிருந்த பகுதியில் புதைத்தோம். அவர்களது சடலங்களைக் கடல் வழியாகக் கொண்டு செல்லவும் வாய்ப்பிருக்கவில்லை.

அடுத்த கட்டமாக முல்லைத்தீவு முகாமை நோக்கி முன்னேற முடியாத நிலையில் கடற்கரையோரமாகப் பின்வாங்கினோம். டோசர், பைக்கோ என இயந்திரங்கள் இல்லாமல் பங்கர்களைத் தோண்ட வேண்டியிருந்தது. அப்போது 4 பேர் காயப்பட்டார்கள். அது ஒரு மிக மோசமான அனுபவமாக இருந்தது.

### மன்னார்ப் பகுதிக்கான படை நகர்வு

பெரிய மடுப்பகுதியூடாக மன்னாரை நோக்கி படை நகர்வு நடந்தது. அதிக வெயில், முட் காடுகள், தண்ணீர் வசதியில்லாமை, பற்றைகளை வெட்டி அதனூடாகச் சென்று வேவு பார்த்தல் எனப் பல தடைகள் இருந்தன. எமது அணியில் 12 பேர் இருந்தோம். புலிகளின் பங்கர் ஒன்றுக்கு 50 மீற்றர்வரை அருகாகச் சென்றிருந்தோம். அங்கு அவர்களின் நடமாட்டம் இருக்கவில்லை. அவர்களின் பங்கர்களுக்கு முன்பக்கமாக இருந்து நடமாட்டத்தை அவதானித்துப் பின்னர் பங்கர்களின் பின்னால் சென்று பார்த்தபோது ஆங்கில எழுத்தில் சற் வடிவில் அறைகள்போல பாதுகாப்பான பங்கர்கள் இருப்பதைக் கண்டேன். ஒரு கைக்குண்டைக் கழற்றி அதற்குள் எறிந்தேன். அதன்பின் சிலர் அங்கிருந்து ஓடுவதைக் கண்டேன். அதன்பின்னர் விடத்தல் தீவுக்குச் சென்றோம். எமது அணியிலிருந்த அனைவருக்கும் புலிகளை நோக்கி முன்னேறிச் செல்லும் துணிவு இருந்தது.

### ஓரிடத்தில் தங்கி வேவு பார்ப்பதைவிட வேவு பார்த்தபடி எச்சரிக்கையுடன் முன்னேறிக்கொண்டிருந்தோம்

அங்கிருந்து நகர்ந்து பூநகரிப் பகுதிக்குச் சென்றோம் அதிகாலை 3 மணிக்குப் பூநகரி பரந்தன் வீதியைக் குறுக்கறுப்பது என்று தீர்மானித்தோம். சேறு, தண்ணீர் எனச் சிரமமான திசையில் சென்று பூநகரிப் பரந்தன் வீதியை ஊடறுத்தோம். அது எமது முதன்மை இலக்காக இருந்ததால் வீதியில் ஏறியதும் அந்த வீதியை முத்தமிட்டோம். ஏனெனில் அது இலகுவில் அடைய முடியாத ஓர் இலக்காகவே அதுவரை இருந்தது. இந்த நடவடிக்கையின்போது எனது சினைப்பர் துப்பாக்கிக்கு மேலதிகமாக சிப்பாய்கள் அதிகம் பாவிக்கும் ரி 56 ரக துப்பாக்கி ஒன்றையும் வைத்திருந்தேன் இருப்பினும். சினைப்பருக்கான இலக்கைத் தேடுவது எங்கு மறைந்திருந்து தாக்குவது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தினேன்.

### புலிகளின் சினைப்பர் துப்பாக்கிதாரியைக் கொல்லக் காத்திருப்பு

புலிகள் ரி 56 ரகத் துப்பாக்கியில் தொலைநோக்கியைப் பூட்டி அதைச் சினைப்பராகப் பாவித்தனர். எனது சினைப்பர் தொலைநோக்கியூடாகப் பார்த்தபோது புலிகளின் சினைப்பதாரி ஒருவர் 20 ரவைகளே இருந்தன. அதில் ஒன்றைப் பத்திரமாக வைத்திருந்தேன். அது எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது பாவிக்கலாம் என்ற எண்ணத்துடன் அதை வைத்திருந்தேன். 19 புலிகளை ஒரே இடத்தில் சுட்டுக்கொன்றதால் களத்தில் வைத்தே எனது பதவி உயர்த்தப்பட்டது.

விசுவமடுப்பகுதியில் நாம் நிலைகொண்டிருந்த போது சாரம் அணிந்திருந்த ஒருவர் நாமிருந்த பகுதியைப் பார்ப்பதைக் கண்டேன். அவர் படையினரின் பகுதிக்குள் வருவதற்கு முனைகிறார் என்ற நோக்கத்தில் அவரைப் பார்த்து வாங்க வாங்க என்று எனக்குத் தெரிந்த தமிழில் கூப்பிட்டேன்.



**சேறு, தண்ணீர் எனச் சிரமமான திசையில் சென்று பூநகரிப் பரந்தன் வீதியை ஊடறுத்தோம். அது எமது முதன்மை இலக்காக இருந்ததால் வீதியில் ஏறியதும் அந்த வீதியை முத்தமிட்டோம். ஏனெனில் அது இலகுவில் அடைய முடியாத ஓர் இலக்காகவே அதுவரை இருந்தது.**

பங்கருக்குள் குதிப்பதைக் கண்டேன். தொடர்ந்து அவதானித்தபோது அவர் ஒரு பெரிய பாலை மரத்துக்குள் மறைந்து நின்றார். எந்தவித அசைவும் இன்றி அவர் நின்றதால் மரம் மாத்திரமே எனக்குத் தெரிந்தது. அந்த இடத்தைவிட்டு அவர் நகர 20 நிமிடங்கள் ஆகியது. அவர் நகர்வதைக் கண்டதும் சுட்டுக் கொன்றேன்.

பரந்தனை நோக்கி முன்னேற முயன்றபோது 2008 மார்கழியில் கடும் மழை பெய்தது. நாங்கள் நின்ற இடத்திலிருந்து கழுத்தளவு தண்ணீருக்குள் நகர்ந்தோம். புலிகள் பரந்தன் கிளிநொச்சிப் பகுதியைப் படையினர் கைப்பற்றிவிடாதபடி பலமான பங்கர்களை அமைத்திருந்தார்கள். அதில் ஓர் இடத்தில் 50 மில்லி மீற்றர் துப்பாக்கியைப் பொருத்தியிருந்தார்கள். அந்த இடத்துக்குக் கைக்குண்டை வீசினேன். அந்த இடத்தில் நின்றவாறு 19 புலிகளை சினைப்பரால் சுட்டேன். என்னிடம்

அவர் என்னைக் கண்டதும் ஓடிவிட்டார். அந்தக் கணமே நாம் அந்தப் பகுதியிலிருந்து வேகமாக வெளியேறும்படி அனைவருக்கும் தெரிவித்தேன். நான் சினைப்பர்காரன் என்ற வகையில் ஆபத்துகளை மிக வேகமாக அறிந்துகொள்ள முடிந்தது.

ஒரு சில நிமிடத்தில் நாங்கள் முன்பு நிலைகொண்டிருந்த இடத்தில் சரமாரியான தாக்குதலைப் புலிகள் நடத்தினார்கள். நாம் இடம்மாறியிருக்காவிட்டால் அனைவரும் கொல்லப்பட்டிருப்போம்.

### புதுமாத்தளன் தாக்குதல்

புதுமாத்தளனுக்குச் சென்றபோது ஓலைகள் இல்லாத தென்னை மரங்கள் சிதைந்துபோன மரங்கள் குண்டுபட்ட சுவர்கள் என்பவற்றையே காண முடிந்தது. மக்கள் தமது பாதுகாப்புக்காக அமைத்திருந்த பதுங்குகுழிகள் எல்லா இடங்களிலும் கைவிடப்பட்டு கிடந்தன. என்னை நோக்கிப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் முகத்துக்கு அருகில் குண்டு இறங்கிச் சென்றது. நூலிழையில் உயிர் தப்பினேன். எல்லாத் திசைகளில் இருந்தும் முன்னேறிக்கொண்டிருந்த படையணிகள் மிக நெருங்கி வந்துகொண்டிருந்தன. எனது இலக்குகளைத் தேடி இரவு முழுதும் அலைந்துகொண்டிருந்தேன். அந்த இடத்தில் 5 நாள்கள் நின்றோம். தீபன் தலைமையிலான அணி எம்மை எதிர்ப்பதாக அறிந்தேன். வீதியின் இருமருங்கிலும் நூற்றுக்கணக்கில் புலிகள் இறந்து கிடந்தார்கள். ஒரு வெள்ளையான உருவமுள்ள சடலம் கிடப்பதைக் கண்டேன். அது பிரபாகரனின் சடலமாக இருக்கக்கூடும் என நினைத்து அருகில் சென்று பார்த்தேன். பிரபாகரனுக்கு இருப்பது போன்ற தடித்த மீசை அந்தச் சடலத்தில் இருக்கவில்லை. மெல்லிய மீசையிருந்தது. பின்னர் புலனாய்வுத்துறையினர் வந்து தாம் வைத்திருந்த ஒளிப்படங்களுடன் அந்தச் சடலத்தை ஒப்பிட்டுப்பார்த்து அது தீபனுடையது என்று சொல்லினர். அந்தச் சடலத்தின் கண்கள் திறந்தபடி இருந்தன. நான் அவற்றை மூடிவிட்டேன். 2016இல் படையிலிருந்து ஓய்வுபெற்றேன்.




# விக்கிரம் எப்படியிருக்கிறது?

கிட்டத்தட்ட 4 வருட இடைவெளிக்குப் பின்னர் வெளியாகி இருக்கும் கமலின் விக்ரம் படத்தை அவரது ரசிகர்கள் உச்சியில் தூக்கி வைத்துக் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். வழக்கமான தமிழ்த் திரைப்படத்திற்கேயுரிய பழிவாங்கல் கதைக்களம்தான் என்றாலும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் திரைக்கதையில் புதுமைகளைப் புகுத்தி நட்சத்திரப் பட்டாளங்களையும் கச்சிதமாகப் பயன்படுத்தியிருப்பதால் சமூக வலைத்தளங்களிலும் படத்திற்கு ஆதரவான கருத்துக்களைத் தெறிக்கவிட்டிருக்கிறார்கள் திரைப்பட ரசிகர்கள். அப்படியென்னதான் இருக்கிறது விக்ரம் திரைப்படத்தில்?

போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் தொடர்ச்சியாக கொல்லப்படுகின்றனர். இதற்கான காரணத்தையும், குற்றவாளிகளையும் கண்டறிய, காவல் துறையினரால் ஃபஹத் ஃபாசில் தலைமையிலான ரகசிய குழு ஒன்று நியமிக்கப்படுகின்றது. இந்தக் குழு விசாரணையில் இறங்க, போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகளை கொன்றது யார்? அவர்கள் ஏன் கொல்லப்படுகின்றனர்? இதற்கான பின்புலம் என்ன? - இவற்றை சுவாரஸ்யமான திரைக்கதையுடன் ஃபஹத் ஃபாசிலுடன் சேர்ந்து நமக்கும் விடையளிக்கும் படைப்புதான் 'விக்ரம்'.

**2019**ம் ஆண்டு 'விஸ்வரூபம்' படத்திற்கு பிறகு திரைக்குத் திரும்பியிருக்கிறார் கமல். கோபத்தில் வெகுண்டெழுந்து சீறிப் பாய்வதும், அன்பில் அடங்கி உருகி மருகுவதும், சண்டைக் காட்சிகளில் அதகளம் செய்து, கன்னத்தைக்கூட நடிக்க வைத்திருக்கிறார். குறிப்பாக, இயந்திரத் துப்பாக்கி வைத்து சுட்டுத்தள்ளும் காட்சி திரையரங்கை அதிர வைக்கிறது. இது கமல் படம் என்று விளம்பரப்படுத்தப்பட்டாலும் இடைவேளைக்குப் பின்னர்தான் கமலின் பாத்திரத்திற்கு திரையில் அதிக இடம் கிடைக்கிறது. அது வரைக்கும் பகத் பாசில் மற்றும் விஜய் சேதுபதிக்குத்தான் முதல் பாதியில் முதன்மை இடங்கள்.

படத்தின் முதல் பாதி முழுவதையும் தனது முக பாவனைகளால் மட்டுமே சுமந்து சென்றிருக்கிறார் ஃபஹத் ஃபாசில். 'எங்களுக்கு ரூல்ஸ் கிடையாது... உங்களுக்கு இருந்தால் மீறப்படும்' என்று திமிரான உடல் மொழியுடன் இரக்கமில்லாத துருவித் துருவி விசாரிக்கும் அதிகாரியாக மிரட்டுகிறார். அவர் 'புஷ்பா' படத்திற்காக குறைத்த உடல் எடையை இந்தப் படத்திலும் காண முடிகிறது. குறிப்பாக, குழந்தையை மீட்க போராடும் காட்சிகளில் உச்சம் தொடுகிறார்.

முதல் பாதியை ஃபஹத் ஃபாசிலிடம் ஒப்படைத்து கதையை நகர்த்தியிருக்கிறார் லோகேஷ். வித்தியாசமான முக பாவனைகள், பல்லை திறக்காமல் பேசும் வார்த்தைகள், அலட்டிக் கொள்ளாத உடல் மொழி என அசத்தியிருக்கிறார் விஜய் சேதுபதி. சட்டையின்றி நடந்து வரும் அவரது இன்ட்ரோ காட்சிகள், நடிப்பின் மீதான அவரது காதலை காட்டுகிறது.

குறிப்பாக போதைப் பொருள் சாப்பிடவுடன் திடீர் உத்வேகம் வந்து அதிரடி காட்டுகிறார். இந்தியாவில் வெளியான 'பாப்பாய்' கார்ட்டூனில் கீரையை சாப்பிட்டதும் பாபாய்க்கு வீரம் வருவதைப்போல இதனையும் கட்டமைத்திருக்கிறார் இயக்குநர்.

காளிதாஸ் ஜெயராமன், செம்பன் வினோத், நரேன், ரமேஷ் திலக், காயத்ரி ஷங்கர் ஆகியோரும் தங்கள் பாத்திரங்களுக்கு நியாயம் சேர்த்து நடித்திருக்கிறார்கள். திடீரென வந்து சர்ப்ரைஸ் கொடுக்கிறார் சூர்யா. அவரது ரசிகர்களுக்கு நிச்சயம் திரையில் விருந்து காத்திருக்கிறது.

கமல், ஃபஹத் ஃபாசில், விஜய் சேதுபதி மூவருமே நடிப்பில் ஒருவருக்கு ஒருவர் டஃப் கொடுத்தும், திரையில் அவர்களுக்கான இடம் குறித்து கவலைப்படாமலும் நடித்திருக்கின்றனர். படம் தொடங்கியதும் எந்தவித சமரசமுமின்றி கதைக்குள் நுழைந்துவிடுகிறது. அது படத்துக்கு பலம் சேர்க்கிறது.

பழிவாங்கும் கதை என்பதால் சண்டைக் காட்சிகள் இல்லாமலா? படம் முழுக்க வசனங்களுக்குப் பதில் அதிரடியும் சண்டையும் கொட்டிக்கிடக்கிறது. இடையிடையேயான சில சர்ப்ரைஸ் காட்சிகள் ரசிக்க வைக்கின்றன. குறிப்பாக, மொத்த படத்தையுமே தூக்கி நிறுத்துகிறது இடைவேளைக்கான சண்டைக்காட்சி. அது படமாக்கப்பட்ட விதமும், விறுவிறுப்பும் ரசிக்க வைக்கிறது. அந்த சிங்கிள் ஷார்ட் சண்டைக் காட்சியில் கேமராவை முன்னும் பின்னும் நகர்த்தி தெறிக்க விட்டிருக்கிறார் ஒளிப்பதிவாளர் கிருஷ் கங்காதரன்.

போதைப்பொருட்கள் கடத்தலை மையமாக வைத்து எடுக்கப்பட்ட ஆயிரத்தி ஓராவது படமாக இந்தப் படம் இடம்பெற்றிருக்கிறது. இருந்தாலும் கமலின் பாத்திரம் பழழிவாங்குவதற்காகப் புறப்பட்டு பின்னர் போதைக்காரர்களை ஒழிப்பதை தேசக் கடனாக்கிக்கொள்வதாகக் காட்டியிருப்பது புதுசு. பொறுமையாக தொடங்கும் திரைக்கதை விசாரணையால் வேகமெடுக்கிறது. இருப்பினும் முதல் பாதியின் நீளம், முழுப் படத்தையும் பார்த்த உணர்வை கொடுக்கிறது. இரண்டே முக்கால் மணி நேரத்திற்கு நீள்கிறது படம்.

**1986**ஆம் ஆண்டு வெளியான கமலின் முந்தைய 'விக்ரம்' படத்துடன் தொடர்புபடுத்திய விதம் ஈர்க்கிறது. இந்தப் படத்தைப் பார்ப்பதற்கு முன்னதாக மீண்டும் ஒரு தடவை 'கைதி' படத்தை லோகேஷ் கனகராஜ் பார்க்கச் சொன்னதற்கான காரணம் திரையில் தெரிகிறது. படத்தில் துப்பாக்கியிலிருந்து தெறிக்கும் தோட்டாக்களுக்கு இணையாக ஒலிக்கிறது அனிருத்தின் பின்னணி இசை. துப்பாக்கியை லாக் செய்யும் சத்தத்தை வைத்தே பிண்ணியிருக்கும இசை கவனம் பெறுகிறது.

மொத்ததில் அதிரடி சண்டை விறுவிறுப்பை விரும்பும் ரசிகர்களுக்கு 'விக்ரம்' திகட்டாத திரையனுபவம்.

# யார் காரணம்...?

அப்துல் மஜித்



**போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர் கடன்பெற்றார், வீதிகள், சாலைகளை அமைத்தவர் கடன்பெற்றார், வங்கி ஊழல் செய்தார்கள், உலகப் பொருளா தாரச் சரிவு, சுற்றுலாத்துறை முடக்கம் என இன்னுமிருக்கின்ற காரணங்களை ஒருவர் மீது ஒருவர் சுமத்தும் நிலை இதனால் தான் வந்தது.**

கடல் சூழ் தீவு இந்த நாடு...! இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்படுவது. சுற்றியுள்ள சமுத்திர வளத்திலிருந்து ஏராளம் வருமானங்களைப் பெற முடிகிறது இந்தத் தீவில் வாழ்கின்ற கரையோர மக்களால் - மீன்பிடியைத் தொழிலாகக் கொண்டவர்களால் நாட்டு மக்களுக்குத்தேவையான கடலுணவுத் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. அதுபோக மேலதிக கடலுணவுகளையும் கடலட்டை, சிங்கி இறால், மறிச்சுக்கட்டி இறால், கிளக்கன் மீன், கணவாய் மீன், நண்டு, கடற்பாசி, சங்கு, மட்டி எனப் பலவற்றை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருமானம் பெற முடிகிறது. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் கடலுணவுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற நிறுவனங்கள் ஐந்திற்கு மேல் உள்ளன. நாடு முழுதும் இது போன்ற நிறுவனங்கள் பலவுள்ளன.

**நீர் - நில வளம்**

ஆறுகள், குளங்கள் நிறைந்த நாடு இது. இலங்கையில் எல்லாமாக 103 ஆறுகள் உள்ளன. இவற்றுள் 34 ஆறுகள் பெரியன. ஒரு துளி நீரையேனும் கடலைச் சென்றடைய விடமாட்டேன் என்று கூறிப் பராக்கிரமபாகு என்ற மன்னன் கட்டிய பராக்கிரமபாகு சமுத்திரத்தைப்போல பல குளங்கள் காணப்படுகின்றன. விவசாயம், நன்னீர் மீன்பிடி, மீன் வளர்ப்பு, இறால் வளர்ப்பு, நீர் மின்சாரம் (நீர்வீழ்ச்சிகள்) எனப் பல தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு நாட்டிலுள்ள இந்த நீர்வளத்தால் முடிகிறது. ஆசியாவின் நெற்களஞ்சியம் என்று புகழப்படும் அளவுக்கு நீர்வளத்தை ஆதாரமாகக் கொண்ட விவசாய முயற்சிகள் தீவிரம் பெற்றிருந்த நாடு இது. குளங்களோ, ஆறுகளோ இல்லாத யாழ்ப்பாணத்தில்கூடத் தரைக்கீழ் நீர்வளத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய முடிகிறது. நெற்செய்கை, வாழை, தெங்கு எனப் பல விவசாய முயற்சிகளில் முன்னிற்கிறது இந்தத் தேசம்.

**உலகின்ற முதற் தர தேயிலை**

உலகின் முதற் தரத் தேயிலையை உற்பத்தி செய்கிற நாடு என்கிற பெருமையும் அதன் மூலம் அதிக ஏற்றுமதி வருமானத்தைப் பெறுவதும் இலங்கைக்கேயுரிய சிறப்பு. பிரித்தானியரின் காலத்தில் இங்கிருந்து அவர்கள் தேயிலையை அபகரித்துச் சென்றாலும் அதன் பின்னரான காலத்தில் அவர்களின் அபகரிப்பால் இலங்கைத் தேயிலைக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட மவுசு அதிகம். பிரித்தானியர் கொண்டு சென்று விளம்பரம் பண்ணியதைப்போலானது அவர்கள் இங்கிருந்து கையகப்படுத்திக் கொண்டுசென்ற தேயிலை வளம். இப்போது வரை உலகின் முதற்தரத் தேயிலை இலங்கையினுடையதுதான்.

**மலைநாட்டு வளங்கள்**

தேயிலையைத் தவிர இறப்பர் செய்கையிலும் இலங்கையின் மலைநாடு பெயர்போனது. தவிர நீல இரத்தினக் கற்களால் சிறப்புப் பெற்றது. வாசனைச் செடிகளான ஏலம், கறுவா, கராம்பு எனப் பல இலங்கையின் மத்திய பகுதியான மலைநாட்டில் நிரம்பிக் கிடக்கின்றன. அரிசி, தேங்காய், மரக்கறிச் செய்கை மற்றும்பல உள்ளூர்த் தயாரிப்புகள் அதேபோல் ஆடை ஏற்றுமதியில் எழுச்சி என உள்ளூரில் மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்துகொண்டு ஏற்றுமதி வர்த்தகத்திலும் கொடி கட்டிப் பறக்கின்ற வளங்கள் நிறைந்து காணப்படும் இந்த நாட்டுக்கு இப்போது எப்படி இந்த இக்கட்டான பொருளாதார நிலை வந்தது...? இதற்குக் காரணம் என்ன...?

**தலையில் மண்போட்ட குடி மக்கள்**

மக்கள் தலைவர்களைத் தெரிவுசெய்யும் மக்களாட்சி (ஜனநாயக) அரசியல் முறையே இங்கு காணப்படுகிறது. மக்கள் தெரிவு செய்கின்ற தலைவர்கள் சம்பாதித்து மக்களுக்குச் சேவை செய்வதில்லை. மைத்திரிபால சிறிசேனவோ, மகிந்த ராஜபக்சவோ, கோத்தாபய ராஜபக்சவோ வேலைக்குப்போய் சம்பாதித்து மக்களுக்குச் சேவை செய்வதில்லை. மக்களின் பணத்தில் மக்களுக்குச் சேவை செய்யும் திட்டங்களை வகுப்பதே தலைவர் களது பணி. அடுத்தடுத்து ஆட்சிப்பீடம் ஏறுகின்ற தலைவர்கள் திரும்பவும் பதவிக்கு வரும் அவாவில் அரசியல் செய்யாமல் மக்களுக்குச் சேவை செய்வதில்லை. ஊழல் செய்யாமல் மக்களின் சேவையில் மட்டும் கவனத்தைச் செலுத்துவதில்லை. போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர் கடன்பெற்றார், வீதிகள், சாலைகளை அமைத்தவர் கடன்பெற்றார், வங்கி ஊழல் செய்தார்கள், உலகப் பொருளா தாரச் சரிவு, சுற்றுலாத்துறை முடக்கம் என இன்னுமிருக்கின்ற காரணங்களை ஒருவர் மீது ஒருவர் சுமத்தும் நிலை இதனால் தான் வந்தது.

மாறாக இதெல்லாம் மக்களுக்குச் சேவை செய்த உத்வேகத்தால் ஏற்பட்டதல்ல. அவரவரது சுயநல அரசியலாலும் பதவி, பண ஆசைகளாலும் ஏற்பட்டது. தமது அரசில் தாம் உள்வாங்கியுள்ளவர்களைத் திறம்படப் பயன்படுத்தி மக்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகளை வழங்குவதே அரசுகளின் கடப்பாடு. மக்களாட்சி அரசியலில் மக்கள் எதிர் பார்க்கின்ற முதன்மையான அங்கமும் அதுதான். மக்களின் சுதந்திரம், உரிமைகள், உணவு, அத்தியவசியத் தேவைகள், உடை, உறைவிடம் போன்றன நிவர்த்தி செய்யப்படுதலே முக்கிய மானது. அதற்கான பொருளாதாரத் திட்டங்களை வகுக்கும் மூளைப் பலமே தலைவர்களுக்குத் தேவையானது. அத்தகைய மூளைப்பலமுள்ள தலைவர்களைத் தெரிவு செய்வது மக்களின் பணி. மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்க ளின் வாக்குகளால் கோத்தாபய ராஜபக்ச தலை வராகினார். அவரை வீட்டுக்குப்போகும்படி இப்போது போராடுகிறார்கள். இது மக்கள் - தலைவர் தெரிவிலுள்ள முரண் நிலை.

தாம் தெரிவு செய்த தலைவரால் தமக்கு நேருகின்ற சிக்கலைத் தீர்க்க முடியவில்லை என்றால் அதற்குரிய மாற்று வழியை மக்களாட்சி அரசியலுக்குள் புகுத்தும் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். மக்கள் எடுக்கின்ற இதுபோன்ற முடிவுகளை நடைமுறைப்படுத்தும் விதத்திலேயே அரசமைப்பு, தலைவர் தெரிவு, அரசியல் நடைமுறைகள் என எல்லாமும் இருக்க வேண்டும். மக்களாட்சி அரசியல் மக்களுக்குரியது என்பதன் உள்ளார்ந்தத்தை அப்போதுதான் பொருத்தப்பாடானதாகக் கருதமுடியும். அவ்வாறெல்லாம் இல்லாத அரசியல் விளையாட்டுக்கள் தலையில் மண்போடும் குழந்தைத் தனங்களே.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781